DARUL ISLAM FOUNDATION TRUST

# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 16 Issue - 08

ஆகஸ்ட் 2023 - முஹர்ரம் - ஸபர் 1445



## மணிப்பூர் நிகழ்வுகள் தீர்வுதான் என்ன?



## இந்திய சுதந்திரப் போரில் சங்கப்பரிவாரத்தினர்..?



## பெட்ரோலியத்தில் தனி சுதந்திரம் பெறும் முஸ்லிம் நாடுகள்..!



## அல்காயிதா பற்றி அமெரிக்கா வெளியிட்ட ரகசிய அறிக்கை

بسم الله الرحمن الرحيم

**மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.**

**(அல்குர்ஆன் : 49 : 13)**

## மணிப்பூர் நிகழ்வுகள் இதற்கு தீர்வுதான் என்ன?

**கவர் ஸ்டோரி - பக்கம் 28**

*இந்திய சுதந்திரப்போரில் சங்கப்பரிவாரத்தினரின் பங்கு* 04

*டீஸ்டா செட்டல்வாட்டை நிரந்தரமாக சிறையில் அடைக்க சதியா?* 08

*ஜப்பானின் நாவுகி (இ) அஹமது மாயினு ஏன் இஸ்லாத்தை ஏற்றார்?* 14

*பெட்ரோலியத்தில் தனி சுதந்திரம் பெறும் முஸ்லிம் நாடுகள்!* 18

*அல்காய்தா என்றொரு அமைப்பே இல்லை - அமெரிக்காவிலிருந்து வெளிவந்த ரகசிய அறிக்கை* 24

*மணிப்பூர் - பொய் செய்திகளை பரப்பிய **ANI NEWS** அன்றே எச்சரித்த வைகறை...!* 32

*தென்முடியனூர் - எப்போது தணியும் இந்த தீண்டாமைத் தீ? வைகறையின் கள ஆய்வு* 40

*சிலுவைப் போர் 2.0 - இன்றைய கட்டுக்கதைகள்!* 36

*மருத்துவம் - நீர் சுருக்கு / தோல் அரிப்பு, வியற்குரு தீர / கருப்பட்டி பயன்கள்* 50

*மகளிர் மன்றம் - ஏழைகளின் தாய் அன்னை ஸைனப்(ரழி)* 54

*அப்பாஸிய பேரரசி சுபைதா - குளச்சல் அப்துல் கரீம் கட்டுரை* 58

*குழந்தை வளர்ப்பு - குழந்தைகளும், தொலைக்காட்சிகளும்!* 60

*பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்!* 64

*சென்னையில் ஈத் மிலன் - பெருநாள் சந்திப்பு - சமூக நல்லிணக்கக் கூட்டம்* 44

*இஸ்லாம் தான் ஒரே தீர்வு - வழக்கறிஞர் சின்னசாமி உரை* 46

*மதுரையில் ஈத் மிலன் - பெருநாள் சந்திப்பு - விருந்தோம்பல் நிகழ்ச்சி* 53

ஆகஸ்ட் – 2023 / முஹர்ரம் – ஸபர் 1445

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
**மு.குலாம் முஹம்மது**,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம்.இல்யாஸ் ரியாஜி**,M.A.,

**தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா - உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000**

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only




# இந்தியாவின் சுதந்திரப் போரில்

## சங்கப்பரிவாரத்தினரின் பங்கு...!

நமது நாடு இப்போது தேசிய உணர்வு மேலோங்கிய ஒரு காலகட்டத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் 1942ன் மகா ஆகஸ்ட் புரட்சி எனப்பட்ட வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை நினைவூட்டுவது பொருத்தமாகவே இருக்கும். இந்த இயக்கத்திற்கான அழைப்பை காந்திஜி தலைமையிலான காங்கிரஸ் முன்வைத்தாலும், காங்கிரஸிலிருந்த சமதர்மவாதிகள்தான் அதனை நாடு தழுவிய இயக்கமாக்கினர்.

57 வருடங்களுக்கு முன்பு நடந்த இந்த இயக்கத்தின் போது தான் "வெள்ளையனே வெளியேறு", "செய் அல்லது செத்துமடி" போன்ற கோஷங்கள் பிரபலமாயிருந்தன. இந்த இயக்கம் தொடர்பாகப் பல சர்ச்சைகளும் இருக்கின்றன. சோவியத் ரஷ்யாவின் நிர்பந்தத்தால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. கம்யூனிஸ்ட்டுகள் பல அரசியல் போராட்டங்கள், பண்பாட்டு இயக்கங்கள் நடத்திய பிறகும் கூட அவர்கள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைப் புறக்கணித்த பழி இன்னமும் இருக்கிறது.

தங்களைத் தேசியவாதத்தின் குத்தகைக் காரர்களாகக் காட்டிக் கொள்கிற ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கம் (ஆர்.எஸ். எஸ்.) இதில் என்ன பங்காற்றியிருக்கிறது என்பது பற்றி ஆராயப் படாமலிருப்பது ஆச்சரியமே. ஆர்.எஸ்.எஸ். ஸுடன் தொடர்புடையவர்களால் எழுதப்பட்டு அந்தக் காலக்கட்டத்தில் வெளியிடப்பட்ட ஆவணங்களைப் பார்வையிடும்போது பரிதாபமாக இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ் வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் கலந்து கொள்ளாதது மட்டுமல்ல. இருபதுகளில், முப்பதுகளில், நாற்பதுகளில் செயல்பட்ட எந்த பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கங்களிலும் அது பங்கு கொள்ளவில்லை.

பகத்சிங் போன்ற சுதந்திரப் போராட்டத் தியாகிகளது செயல்பாடுகளிலிருந்தும், இந்தியக் கடற்படையினரது கலகத்திலிருந்தும் ஆர்.எஸ்.எஸ். விலகியே இருந்தது.

பிரதமர் வாஜ்பாய் 1998 மார்ச்சில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் ராஜிந்தர் சிங் முன்னிலையில் "சுதந்திரப் போராட்ட வீரரும், ஆர்.எஸ்.எஸ் நிறுவனருமான டாக்டர் கே.பா. ஹெட்கேவார்" அவர்களது 110வது பிறந்த நாள் நினைவு தபால் தலையை வெளியிட்டபோது இந்த விவகாரங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. சுதந்திரப் போராட்டத்தின் போது ஹெட்கேவார் இரண்டே முறைகள்தான் சிறைக்குச் சென்றார்; அதுவம் காங்கிரஸ் நடத்திய போராட்டங்களில்

கலந்து கொண்டதால் சிறைக்குப் போனார். 1920-21ல் கிலாஃபத் இயக்கத்தை ஆதரித்து உணர்ச்சி பூர்வமாகப் பேசியதற்காக முதல் முறையாகச் சிறைக்குச் சென்றார்.

அப்போது அவர் ஆர்.எஸ்.எஸ்ஸை ஆரம்பித் திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஹெட்கேவார் இரண்டாவதாக - அதுவே கடைசியாக ஜெயிலுக்குப் போனது அவர் ஆர்.எஸ்.எஸ்ஸைத் தொடங்கிய பின்னர் நடந்தது. ஆனால் அதுவும் காங்கிரஸ் போராட்டத்தில் பங்கேற்றதால் ஏற்பட்டது.

இந்த முறை ஹெட்கேவார் சிறைக்குச் சென்றதற்கு வினோதமான பின்னணி உண்டு. ஆர்.எஸ்.எஸ்.ஸால் வெளியிடப்பட்ட ஹெட்கேவாரின் சுயசரிதையின்படி மகாத்மா காந்தி விடுத்த சத்தியாக்கிரக அழைப்பை ஏற்று ஹெட்கேவார் சிறை சென்றிருக்கிறார். இந்தச் சத்தியாக்கிரகத்தின்போது, அரசாங்கத்தின் சில சட்டங்களை முறியடிக்கும்படி காந்தி மக்களுக்கு அழைப்பு விடுத்தார். காந்திஜியே தண்டி யாத்திரை மேற்கொண்டு உப்புச் சத்தியாக்கிரகம் செய்தார்.

ஆர்.எஸ்.எஸ். இந்தச் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்காது என்று தகவல் தரப்பட்டது(பக்கம் 20). ஹெட்கேவார் வேறொரு உள்நோக்கத்தோடு சத்தியாக் கிரகத்தில் கலந்து கொண்டார் என்று அவரது சுயசரிதையே குறிப்பிடுகிறது, "சிறையிலிருந்த எல்லாத் தலைவர்கள் மற்றும் தொண்டர்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்ட அவர், அவர்களிடம் சங்கத்தின் (ஆர்.எஸ்.எஸ்.) வேலையைப் பற்றி விவரித்ததோடு எதிர்காலத்தில் சங்கப் பணிகளில் அவர்களது ஒத்துழைப்புக்கான வாக்குறுதியையும் வாங்கினார். தனது பணிகளின் விரிவாக்கத்திற்குத் திட்டமிட்ட பிறகே அவர் சிறையிலிருந்து வெளிவந்தார்" (பக். 21)

ஆங்கிலேயரை எதிர்க்கும் லட்சியத்துடன் ஹெட்கேவார் சிறைக்குச் செல்லவில்லை. காங்கிரஸ்காரர்களை ஆர்.எஸ்.எஸ்.ஸில் சேர்க்கும் நோக்குடனே அவர் சிறை சென்றார் என்பது வெளிப்படை.

ஹெட்கேவாருக்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ்ஸைக் கையிலெடுத்துக் கொண்ட குரு கோல்வால்கர் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கங்களை எவ்வளவு வெறுத்தார் என்பதை அவரே கூறுகிறார், "வழக்கமான வேலையில் நிலைத்திருக்க மற்றுமொரு காரணம் இருக்கிறது. காலாகாலத்திற்கு நாட்டில் ஏற்படும் மாற்றங்களால் மனதில் அமைதியின்மை நிலவுகிறது. 1942ல் அப்படியான அமைதியின்மை இருந்தது. அதற்கு முன்பு 1930-31ல் அப்படியொரு இயக்கம் இருந்தது. அப்போது பலரும் ஹெட்கேவாரிடம் சென்றார்கள். இந்த இயக்கம் சுதந்திரம் வாங்கித் தருமென்றும், சங்கம் இதில் பின்தங்கக் கூடாதெனவும் அவர்கள் சொன்னார்கள்." ஒரு மனிதர் டாக்டர் ஹெட்கேவாரிடம் தான் ஜெயிலுக்குப் போகத் தயார் என்று கூறினார். அதற்கு ஹெட்கேவார் இப்படிச் சொன்னார்: 'நிச்சயமாக போ. ஆனால் அப்போது உனது குடும்பத்தை யார் கவனிப்பார்?' (ஸ்ரீ குருஜி சாமக்ரஹ் தர்ஷன், தொகுதி 4, பக்கங்கள் 39-40)

1942ல் நடைபெற்ற "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தைப் பற்றிய ஆர்.எஸ்.எஸ்ஸின் பார்வையை கோல்வால்கரின் கீழ்க்காணும் வார்த்தைகளே தெளிவு படுத்துகின்றன. போராட்டம் பற்றிய மோசமான செய்தி வந்திருக்கிறது. (1920-22 ) இயக்கத்திற்குப் பிறகு ஆட்கள் மிகவும் தீவிரமாகிவிட்டார்கள். இது தலைவர்கள் மீது சேறை வாரியிறைக்கும் முயற்சியல்ல இவையெல்லாம் போராட்டத்தின் தவிர்க்க இயலாத பின்விளைவுகள். விஷயம் என்னவென்றால் இந்த விளைவுகளை நாம் முறை யாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. 1942க்குப் பிறகு மக்கள் சட்டத்தை பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்று எண்ண ஆரம்பித்து விட்டார்கள்" (முன் கூறிய நூல் பக்கம் 41).

கோல்வால்கர் தொடர்கிறார், "1942இல் பலரது இதயங்களில் வலுவான நிலை இருந்தது. அப்போது கூட சங்கத்தின் வழக்கமான வேலை தொடர்ந்து நடைபெற்றது. மேலும் சங்கம் நேரடியாக எதையும் செய்வதில்லை என முடிவெடுத்தது".(முன்கூறிய நூல் பக்கம். 41)

ஆர்.எஸ்.எஸ் மறைமுகமாக என்ன பெரும் பணியைச் செய்து கொண்டிருந்தது என்பதைப் பற்றி ஆர்.எஸ்.எஸ்ஸின் எந்த வெளியீடும், எதையும் கூறவில்லை. இருந்தபோதிலும் இந்த வழக்கமான வேலை எதுவென கண்டறிவது சிரமமானதல்ல. இந்துக்கள் முஸ்லிம்களிடையே வேற்றுமையை கூர்மைப்படுத்துவதும், நிலைமையை மோசமாக்குவதும்தான் அந்த வழக்கமான வேலை. இதற்காக பிரிட்டிஷார்கள் ஆர்.எஸ்.எஸ்க்கு பல நன்மைகளைச் செய்தார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின்போது ஆர்எஸ்எஸ் மற்றும் முஸ்லிம் லீக் ஆகியவை ஒருபோதும் தடை செய்யப்பட்டதில்லை.

சுதந்திரப் போராட்டத்தின் போது பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான இந்திய மக்களது ஒட்டு மொத்தமான போராட்டமாக அமைந்தவை அனைத்தையும் ஆர்.எஸ்.எஸ் கடுமையாக வெறுத்தது. மூவர்ணக்கொடி விஷயத்தில் இது பட்டவர்த்தனமாக தெரிந்தது.


சாவர்க்கர்


கோல்வார்கர்

*1929*ல் நடந்த காங்கிரஸின் லாகூர் மாநாடு பூரண சுயராஜ்யமே தனது லட்சியம் என அறிவித்ததோடு *1930*, ஜனவரி *26*ஆம் தேதி அன்று,மூவர்ணக்கொடியேற்றி அந்த நாளை சுதந்திர தினமாக கொண்டாடும்படி மக்களுக்கு அழைப்பு விடுத்தது. இதே நேரத்தில் ஆர்.எஸ்.எஸ் இன் ஹெட்கேவார் எல்லா சகாக்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் காவிக்கொடியை வணங்கும் படி கூறினார்.இன்று வரையிலும் கூட ஆர்.எஸ்.எஸ் விழாக்களில் தேசியக் கொடியான மூவர்ணக் கொடி பயன்படுத்தப்படுவதில்லை.

காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகர் லால்சவுக்கில் மட்டும் மூவர்ணக் கொடியேற்றி தேசவிரோத சக்திகளுக்கு சவால் விடுவதாக காட்டிக் கொள்கிறது ஆர்.எஸ்.எஸ் மற்றபடி அது தேசியக் கொடியை அவமதிக்கிறது. தேசியக் கொடியையும், இந்திய அரசியல் சாசனத்தையும் ஏற்க மறுக்கிற நாட்டின் பல பகுதிகளில் உள்ள போராளி குழுக்கள் மரணத்தைக் கொண்டும், சிறைவாசத்தைக் கொண்டும் தண்டிக்கப்படுகிற போது அதே காரியங்களை செய்து கொண்டிருக்கிற ஆர்.எஸ்.எஸ் மட்டும் தேச பக்தியின் தூதுவனாக பார்க்கப்படுவது வேடிக்கையானது.

ஜூலை *14, 1946* அன்று ஜாக்பூரில் குருபூர்ணி மாவின் போது பேசிய கோல்வால்கர், "காவிக் கொடி தான் நமது கலாச்சாரத்தை பிரதிபலிப் பதாக கூறினார். அது தெய்வத்தின் வெளிப்பாடு, கடைசியில் இந்த தேசம் முழுவதுமே காவிக்கொடிக்கு தலைவணங்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்." (ஸ்ரீ குருஜி ஸாமகர் தர்ஷன் தொகுதி *1* பக்கம். *18*).

சுதந்திரத்திற்கு பிறகும் கூட ஆர்.எஸ்.எஸ் தேசிய கொடியை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

கோல்வால்கர் தனது சிந்தனைத் தொகுதி (தமிழில் ஞான கங்கை) நூலில், "விலகுதல்" என்ற தலைப்பில் தேசியக்கொடி விவகாரத்தை பற்றி பேசுகிறார். உதாரணமாக, "நமது தலைவர்கள் நம் நாட்டுக்கு என்று புதிய கொடியை உருவாக்கியுள்ளார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்? இது விலகிச் செல்லுதல் மட்டுமல்ல, காப்பியடித்தலும் கூட. நமது நாடு பெருமைமிக்க கடந்த காலத்துடன் கூடிய முழுமையான உன்னதமான தேசம். நமக்கென ஒரு கொடி கிடையாதா? இந்தப் பல்லாயிரம் வருஷங்களில் நமக்கென தேசியச் சின்னம் இல்லையா? சந்தேகமேயில்லாமல் நமக்கென அவை இருந்தன பிறகு ஏன் நமது மனங்களில் இவ்வளவு பெரிய சூன்யம்!" (பக்கங்கள் *232- 238*)

பிப்ரவரி *4, 1948* அன்று ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப்படுவதற்கு அது தேசியக்கொடியை நம்பாததும் காரணமாகச் சுட்டிக்காட்டப் பட்டது. காங்கிரஸில் இருந்த சில ஆர்.எஸ்.எஸ் அனுதாபிகள் அந்த தடையை ரத்து செய்ய முயன்றபோது நவம்பர் *14*, நாளிட்ட உள்துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கை இப்படிக் கூறியது,

"ஆர்எஸ்எஸ் உடன் தொடர்புடைய மக்கள் ஈடுபடுகிற நடவடிக்கைகள் தேசவிரோத மானதாகவும், வன்முறையானதாகவும் இருப்பதாக அரசுக்கு தகவல்கள் கிடைக்கின்றன. ஆர்.எஸ்.எஸ். இந்நாட்டில் மோசமான பின் விளைவுகளை உண்டாக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உயிர்பித்துக் கொண்டுள்ளது."

மேலும் அதில் கூறப்பட்டிருந்தது,

"பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் எழுதிய கடிதங்களில் கோல்வால்கர் இந்தியா மதச் சார்பற்ற நாடு என்பதையும், தேசியக் கொடியையும் ஏற்றுக் கொள்வதாக கூறி ஆர்எஸ்எஸ் மீதான தடையை விலக்கக் கோரினார். ஆர்எஸ்எஸ் தலைவர் சந்தர்ப்ப வசத்தால் இப்படிச் சொன்னாலும் அவரது சங்க ஊழியர்களுக்கு அப்படிச் சொல்வதில்லை எனவே இந்திய அரசு உடனடியாக தடையை ரத்து செய்யவில்லை."

கோல்வால்கர், "தான் இந்திய அரசியல் சாசன சட்டத்திற்கு விசுவாசமாய் இருப்பேன் என்றும் இந்திய தேசிய கொடியை ஏற்றுக்கொள்கிறேன்"

REGD. NO. M. 2776. MORNING.

# The Indian Express

VOL. XVI. NO. 91. MADRAS: THURSDAY, FEBRUARY 5, 1948. 8 PAGES: 1½ ANNAS.

ARYA VAIDYA PHARMACY
Head Office: :: COIMBATORE :: Phone No. 168.
MADRAS BRANCHES:
149, Lloyds Road, ROYAPETTAH. Phone No. 84116.
63, Usman Road, Mambalam Bus Terminus, T'NAGAR.
Arya Vaidyan P. V. RAMA VARIER will be available for consultation at MADRAS (Royapettah Branch) on 2nd & 4th Sunday of every month.

KEN TO PROTECT

HIS LIFE WAS FAR FROM A BED OF ROSES



## R. S. S. Declared Unlawful Throughout India

### MOVE FOR ROOTING OUT FORCES OF HATE & VIOLENCE

### Govt. Communique Issued

NEW DELHI, Feb. 4.

THE R. S. S. HAS BEEN DECLARED AN UNLAWFUL ORGANISATION THROUGHOUT THE INDIAN DOMINION, IT IS OFFICIALLY ANNOUNCED.

A communique issued by the Ministry of Home Affairs says that the cult of violence sponsored and inspired by the Sangh claimed many victims—the latest and the most precious to fall was Mahatma Gandhi himself.

It adds that members of the Sangh indulged in acts of violence involving arson, robbery, dacoity and murder, collected illicit arms and ammunition, resorted to terrorist methods to create

எனவும் சொன்ன பிறகு ஜூலை 11,1949இல் ஆர்.எஸ்.எஸ் மீதான தடை ரத்து செய்யப்பட்டது. அப்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் ஆர்.எஸ்.எஸ்.க்கு சாதகமான சர்தார் வல்லபாய் பட்டேல் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆர்.எஸ்.எஸ். இன்றுவரையிலும் கூட இந்திய அரசியல் சாசன சட்டத்திற்கோ இந்திய கொடிக்கோ விசுவாசமாக இல்லை என்பதை அதன் இப்போதைய வெளியீடான சிந்தனை தொகுதியைப் (1996) பார்த்தால் புரியும்.

குரு கோல்வால்கர் போன்ற ஆர்.எஸ்.எஸ். பிரமுகர்கள் பிரிட்டிஷார் மீதான தங்கள் அன்பை மறைக்க முடியவில்லை. இந்தூரில் 1960இல் பேசிய கோல்வால்கர் இப்படி குறிப்பிட்டார்,

“பிரிட்டிஷாரை விரட்டிவிட்டு இந்தியாவை விடுவிக்க பலரும் உத்வேகத்துடன் வேலை செய்தார்கள் பிரிட்டிஷார் போனதும் இந்த வேகம் மறைந்து விட்டது. அப்போது பிரிட்டிஷாருக்கு எதிராக அவ்வளவு வேகம் தேவையில்லாமல் இருந்தது நமது உறுதிமொழியில் கூறியுள்ளதுபோல் நாட்டு விடுதலை நமது மதத்தை, கலாச்சாரத்தை காப்பாற்றுவதன் மூலம் பெறக்கூடியது என்பதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதுபற்றி நம்முடைய உறுதி மொழியில் எதுவுமில்லை.” (ஶ்ரீ குருஜி ஸாமகர் தர்ஷன், தொகுதி 4, பக்கம் 2)

பகத்சிங், ராஜ் குரு, சுகதேவ் போன்றோர் தமது சாதி, மதத்தை மறந்து பிரிட்டிஷாருக்கு எதிராக போராடி உயிர் துறந்து தியாகம் செய்த போது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை தொந்தரவு செய்ய விரும்பாதவர்களும் இருந்திருக்கின்றனர். இவர்கள்தான் இன்றைக்கு இந்த நாட்டின் தேச பக்திக்கும், தேசியத்துக்கும் சொந்தக் காரர்களாக தங்களை அடையாளப் படுத்துகிறார்கள் என்பதுதான் மிகவும் வேடிக்கையானது.

நன்றி : தி இந்து (22.08.1999)





ஷேஷாத்திரி குமார் இப்படிக் கூறகின்றார்: “இந்தியாவில் இன்றளவும் இந்து கலாச்சாரம் என்ற பெயரில் ஒன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கான அத்தனைப் பெருமையும் அலாவுத்தீன் கில்ஜித்குத்தான் செல்ல வேண்டும். அவர் வரலாற்றின் மிகப்பெரிய போர் வீரர், அவர் மாட்சிமை மிக்க ஆட்சி நடத்தியவர். இந்தியாவை மங்கோலியர் களிடமிருந்து காப்பாற்றினார். அதனால் அவர் ஒரு வினோதமான வகையில் இந்து மதத்தைக் காப்பாற்றினார்.” (ஆதாரம் : Why India Sould be greatful to Alavuddin Khiljil by Shashadri Kumar, Radiance : Vews Weekly = 39, December 2017)

வரலாற்று ஆய்வாளர் MONISH BORAH மோனிஷ்போரா அவர்கள் இப்படி கூறகின்றார்; ஆனால் 13–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்துக்கள் பெரும்பாலும் இந்தியாவுக்குள்ளேயே வாழ்ந்து வந்தார்கள். ஆகவே மங்கோலியர்கள் இந்துக்களை ஓர் இனப்படுகொலைக்கு உள்ளாக்கி இருந்தால் இந்துக்கள் பெருவாரியாகக் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். ஒரு வேளை அவர்கள் முற்றாகத் தடந்தெரியாமல் துடைக்கப்பட்டும் போயிருக்கலாம். இது இந்து மதத்திற்கு மிகப்பெரிய அழிவாக இருந்திருக்கும். (ஆதாரம்: Alauddin Khilji the Saviour of Hindurism : By Monish Borah)

அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்

விலை: ரூ.40/-

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887




# டீஸ்டா செட்டல்வாட்டை நிரந்தரமாக சிறையில் அடைக்க சதியா?

டீஸ்டா செட்டல்வாட்டை கைது செய்து சிறையில் அடைக்கும் ஒரு கீழ்தரமான செயலை குஜராத் நீதிமன்றங்கள் வழி இன்றைக்கு ஆட்சியில் இருக்கும் ஒன்றிய பாசிச அரசு செய்து வருகின்றது. அவருக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிகமான பெயிலை ரத்து செய்து, எந்த ஒரு கால அவகாசமும் கொடுக்காமல், அவர் உடனே காவல்நிலையத்தில் சரணடைய வேண்டும் என்று குஜராத் நீதிமன்றம் சொல்லியிருந்தது. வழக்கம் போல டீஸ்டா செட்டல்வாட் இந்த விவகாரத்தை உச்சநீதிமன்றத்திற்கு கொண்டு சென்றார். உச்சநீதிமன்றம் குஜராத் நீதிமன்றத்தை கடுமையாக சாடியிருந்தது.

வாசகர்கள் இங்கே ஒரு விஷயத்தை நினைவு கூறவேண்டும். “அண்மையில் குஜராத் நீதிமன்றங்களிலிருந்து பதவி உயர்வு பெற வேண்டியவர்களுக்கெல்லாம், இப்போது உங்களுக்கு இந்த பதவி உயர்வு கொடுக்க முடியாது என்று மறுத்திருந்தது உச்சநீதிமன்றம்.. காரணம் என்னவென்றால், குஜராத்தின் கீழ் நீதிமன்றங்களிலிருந்து, உயர்நீதிமன்றங்கள் வரை இந்துத்துவ நீதிமன்றங்களாக மாறிவிட்டது” என்பதுதான்.

இதற்கு முன்னாள் செப்டம்பர் 2022ம் ஆண்டு அவர் கைது செய்யப்படுவதற்கு காரணமாக இருந்தது இதே உச்சநீதிமன்றம் தான். அப்போதிருந்த நீதிபதிகள், “She is keeping in the spot bailing, She must be in dock” என்ற இரண்டு வார்த்தைகளை பயன் படுத்தினார்கள். அதவாது குஜராத் கலவரத்திற்கு இப்போதைய பிரதமரான நரேந்திர மோடியும், அவரோடு சேர்ந்து 59 பேர்களும் தான் காரணம் என்று டீஸ்டா செட்டல்வாட் தொடுத்த வழக்கில், “SIT - Special Investigation Team” என்றொன்றை போட்டு அதன் முடிவில் இவர்கள் பாதுகாக்கப்பட்டனர். காப்பாற்றப்பட்டனர்.

எனவே அப்போது அவர்கள் இவ்வளவு கடுமையான வார்த்தைகளை பயன் படுத்தியிருக்க வேண்டாம் என்று இப்போதிருக்கின்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சொல்லியிருக்கின்றார்கள். மிகவும் காலம் தாழ்த்தியாவது தங்களது தவறை

உணர்ந்ததற்கு உச்ச நீதிமன்றத்திற்கு நாம் நன்றி சொல்லிக் கொள்கிறோம்.

இந்த நிலையில் டீஸ்டா செட்டல்வாட் அவர்களின் நிரந்தர பிணைக்கான வழக்கு ஜூலை 15 முதல், 19ம் தேதிவரை விசாரிக்கப்பட்டது. அப்போது அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

இப்போது நாம் டீஸ்டா செட்டல்வாட்டை நினைவுகூறுவதற்கு இது பொருத்தமான நேரமாக இருக்கும். ஏனென்றால் ஜூலை 31ம் தேதி, கனடாவில் ஒரு விழா நடக்கும். அதாவது ஜாலியன் வாலாபாக் படுகொலையை நடத்திய ஜெனரல் டையர் என்பவரை, லண்டன் வரை சென்று அங்கேயே அவரை பழிதீர்த்த வீரமகன் உதான் சிங் அவர்களை தூக்கிலிட்ட நினைவு தினம் தான் ஜூலை 31. கனடாவில் நடக்கும் அந்த விழாவில், வருடம்தோறும் டீஸ்டா செட்டல்வாட்டை சிறப்பு விருந்தினராக அழைத்து விடுவார்கள்.

ஏன் டீஸ்டா செட்டல்வாட்டை அழைக்கின்றார்கள் என்றால், ஜாலியன் வாலாபாக் படுகொலை வழக்கில் சம்மந்தப் பட்ட எல்லோரையும் விசாரித்து அப்போது நீதிக்காக போராடியவர். சிமன்லால் செட்டல் வாட். டீஸ்டா செட்டல்வாட்டின் தந்தை. அதனால் தான் அவர் சிறப்பாக அழைக்கப்படுகிறார். இப்போது அவருக்கு விசா மறுக்கப்படுவதால் அவரால் அங்கு செல்ல முடியவில்லை.

கனடாவில் வருடந்தோறும் இந்த விழாவை ஏற்பாடு செய்பவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அதில், விடுதலைக்காக போராடியவர்களை ஜாலியன் வாலாபாக்கில் வைத்து ஜெனரல் டையர் என்பவர் படுகொலை செய்தது, அதற்கு உதாம் சிங் அவரை பழிவாங்கியது போன்றவற்றை யெல்லாம் சொல்லிவிட்டு,

***“For the record, The founding fathers of the BJP had no role in the Liberation movement. On the contrary continue to work for Establishing Hindu Theocracy. Some of their icons were involved in the killing of Mahatma Gandhi.”***

*“அதவாது பா.ஜ.க.வை உருவாக்கிய தலைவர்கள் யாரும் இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அல்ல. மாறாக அவர்கள் அப்போதிலிருந்தே ஒரு இந்து ராஷ்டிராவை உருவாக்குவதற்கு இங்கு முயர்சிகளை செய்து கொண்டிருந்தார்கள். இவர்களில் சிலர் தான் மஹாத்மா காந்தியை கொலை செய்தவர்கள்.”*

இப்படி ஒரு அறிக்கை கனடாவிலிருந்து வெளிவந்த நிலையில் தான் நமது பிரதமர் வெளி நாடுகளுக்கு சுற்றுலா சென்றார். அங்கு பல அவமானங்களை சந்தித்து வருகின்றார். சிறுபான்மை மக்களின் உரிமைகள் குறித்து கேள்வி எழுப்பிய பத்திரிகையாளரை பார்த்து கையெடுத்து கும்பிட்டு அங்கிருந்து ஓடி வந்த காட்சிகளையெல்லாம் நாம் பார்த்தோம்.

மோடி ஆஸ்திரேலியா சென்றிருந்த போது ஒரு பக்கம் அவர் உரையாற்றி கொண்டிருந்தார். மறுபக்கம் பிபிசியின் குஜராத் இனப்படுகொலை ஆவணப்படத்தை ஓட்டினார்கள். இப்படி அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவருக்கு எதிராக ஒரு பெரும் கூட்டம் கூடியது. ஆனால் அவற்றை மீடியாக்களிலிருந்து மறைத்து விட்டார்கள்.

எனவே இப்படி நாம் வெளிநாடுகளில் அவமானப்படுவதற்கு காரணம் இந்தியாவிற்கு உள்ளே இருந்து நமக்கெதிராக எல்லா ஆதாரங்களையும் தந்து கொண்டிருக்கும் டீஸ்டா செட்டல்வாட் தான் என்பதை உணர்ந்து அவரை நிரந்தரமாக சிறையில் அடைக்கும் வேலையை பார்த்திருக் கின்றார்கள்.

ஆனால் டீஸ்டா செட்டல்வாட் சரணடைய வேண்டும் என்ற உத்தரவு வந்தவுடன் உலகெங்குமிருந்து கண்டனங்கள் குவிந்தன. உச்சநீதிமன்றத்திற்கு கோரிக்கை கடிதங்கள் பறந்தன.

இதற்கு முன் அவர் கைது செய்யப்படும் போதும் பிணை கிடைப்பதற்கு முக்கியமான

காரணமாக இருந்தது, உலகெங்கிலுமிருந்து வந்த கண்டனங்கள், உச்ச நீதிமன்றத்திற்கு எழுதிய கடிதங்கள் தான். குறிப்பாக தலைமை நீதிபதி வாஷிங்டன் சென்றிருந்த போது, இந்திய பூர்வ குடிமகள் ஒருவர் கொடுத்த கடிதம். அந்த கடிதத்தை நாம் தான் முதன் முதலில் வைகறையில் வெளியிட்டிருந்தோம்.

ஆக டீஸ்டா செட்டல்வாட் வெளியில் இருந்தால் நமது பிரதமர் மோடியால் நிம்மதியாக தூங்க முடியவில்லை. உல்லாசமாக வெளிநாடுகளுக்கு சென்று வரமுடியவில்லை.

ஒரு பெண்மணி இந்த பாஸிஸ்டுகளை கொலை நடுங்க செய்து கொண்டிருக்கின்றார். அவர் நிதானமாக போராடிக் கொண்டிருக்கின்றார். நிச்சயமாக அவர் வெற்றி பெறுவார். அப்போது பாஸிஸ்டுகளாகிய நீங்கள் உள்ளே இருப்பீர்களா, வெளியில் சுதந்திரமாக சுற்றிக் கொண்டிருப்பீர்களா என்பதையும் அப்போதைய நீதிமன்றங்கள் முடிவு செய்யும். இன்ஷா அல்லாஹ்.

டீஸ்டா செட்டல்வாட்டை சிறையில் அடைக்க ஜாஹிரா ஷேக் வழக்கைத்தான் பாஸிஸ்டுகள் கையிலெடுத்துள்ளார்கள். அந்த ஜாஹிரா ஷேக் வழக்கை பற்றின தகவல்களை பின்வரும் பக்கங்களில் வாசகர்களுக்கு தருகின்றோம்.



# ஜாஹிரா ஷேக் வழக்கு

மார்ச் மாதம்,1 ஆம் நாள் 2002 இரவு 8 மணி அளவில் ஜெயந்திபட்டிஜா, ஜெய்வாலா, மகேஷ்முன்னா 'பெயிண்டர்' சஞ்ஜெய், சந்தோஷ் தாக்கர் ஆகியோரின் தலைமையில் சுமார் 500 முதல் 700 பேர் வரை கொண்ட கும்பல் ஒன்று எங்கள் வீட்டையும் கடைகளையும் தாக்கிற்று. இந்தக் கும்பல் கையில், வாள், திரிசூலம், லத்தி ஆகியவற்றை வைத்திருந்தது. அவர்கள் எங்கள் கடை-வீடு ஆகியவற்றின் மீது பெட்ரோல் குண்டுகளை வீசினார்கள். எரிப்போம், கற்பழிப்போம், கொலை செய்வோம் என்று கத்திக்கொண்டே இருந்தார்கள். எங்களுக்குச் சொந்தமான மூன்று'டிரக்' வண்டிகளையும் எரித்துச் சாம்பலாக்கினார்கள்.

இந்தக்கும்பல் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்த போது நாங்கள் போலீஸ் கண்ட்ரோல் ரூம் என்ற காவல் துறைக் கட்டுப்பாட்டு அறைக்குத் தொடர்ந்து தொலை பேசியில் உதவி கேட்டோம். அதேபோல் பானிகேட் (Panigate) காவல் நிலையத்திற்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கேட்டோம். பாவம் ஷாஹிதா ஷேக் இப்படிக் காவல்துறை கட்டுப்பாட்டறைக்கு உதவி கேட்டபோது, காவல் துறை கட்டுப் பாட்டறையில் காவல்துறை அதிகாரிகள் இல்லை. அங்கே குஜராத் ஃபாசிச அமைச்சர் (உள்துறை அமைச்சர்) அமர்ந்து கொலை பாதகங்களுக்கு உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார். இது ஜாஹிரா ஷேக்கிற்கு அப்போது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. நாங்கள் உதவி கேட்ட காவல் நிலையங் களிலிருந்து வந்து கொண்டிருக்கின்றோம் என்று மட்டும் பதில் வந்தது.

ஒன்றரை மணிநேரம் கழித்து அங்கே ஓர் போலீஸ் லாரி வந்தது. அதாவது இரவு 9.30 மணி இருக்கும் அந்தப் போலீஸ் லாரி வந்தபோது, லாரி ஒரு நிமிடம் நின்றது. பின்னர் பறந்தோடியது. அங்கே நின்று கபளீகரங்களைச் செய்து கொண்டிருந்தவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவர்களைத் தடுத்து நிறுத்த எதையும் செய்யவில்லை. இதில் மிகவும் அதிர்ச்சி தரும் செய்தி என்னவெனில் காவல்துறையினர் வந்து நின்று விட்டுப்போன பின்னர்தான் அந்தக் கும்பல் முழு அளவில் கொலைகளையும் கற்பழிப்புகளையும் செய்தார்கள்.

முதலில் அவர்கள் கீழ் தளத்தில் உள்ள (பேக்கரியையும்) கடையையும், ஊழியர்கள் ஒவ்வொருவரும் இருக்கும் பகுதியையும் நெருப்பிட்டு கொளுத்தினார்கள். எங்கள் குடுப்பத்திலுள்ள அத்தனைபேரும் முதல் தளத்தில் நின்று கூக்குரலிட்டோம். பணியாட்களில் 8 பேரை அவர்கள் முதல் தளத்திலேயே எரித்து சாம்பலாக்கி விட்டார்கள். எரிந்தவர்கள் போக மீதம் உள்ள நாங்கள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தோம்.

எங்கள் தாயார் அழுதழுது கேட்டார். என் இரண்டு சகோதரர்களையும் தனியாக இழுத்துச் சென்று கொலை செய்தார்கள். பின்னர் எரிந்து கொண்டிருந்த நெருப்பிலேயே தூக்கிப் போட்டார்கள். இன்னும் இரண்டு சகோதரர்களை அழைத்துச் சென்று உயிருடன் எரித்தார்கள். என்னுடைய சகோதரி, மாமா, அவருடைய சகோதரி ஷாபிரா, அவருடைய குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகள், ஜெய்னப், ஷப்னம் (இவர்கள் இருவரும் இரட்டையர்கள்) இவர்களையெல்லாம் எரித்துக் கொன்றார்கள்.

எங்கள் பேக்கரியில் வேலை செய்தவர்களில் மூன்று பேர் இந்துக்கள். அவர்களின் குடலையும் கீறியெறிந்தார்கள். (இவர்கள் இந்துக்கள் என்பது அவர்களுக்கு தெரியாது என்றேபடுகின்றது)

பின்னர் அவர்களையும் எடுத்துத் தீயிலே வீசினார்கள். இதில் மொத்தம் 14 பேர் கொலை செய்யப்பட்டார்கள். தீயிலிட்டு பொசுக்கப்பட்டார்கள். வீட்டிலிருந்த ஆடுகள், மாடுகள் இவைகூட விட்டுவைக்கப் படவில்லை. இந்தக் கொலைகளை செய்தவர்கள் எல்லாம் அதே ஊரை-பகுதியைச் சார்ந்தவர்கள் தாம்.

ஜெயந்தி பட்டிஜி, 'சாய்வாலா' தான் இந்தக் கும்பலை வழிநடத்தி இந்தப் படுகொலை களைச் செய்தான். எங்கள் குடும்பம் ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் "அனுமான் திக்ரி" என்ற இந்த இடத்திற்கு வந்தது. பிப்ரவரி 27ம் நாள் கலவரம் தொடங்கியவுடன், நாங்கள் முஸ்லிம்கள் இருக்கும் இடத்திற்கு போய்விடுகிறோம் என்றோம். ஆனால் இந்த ஜெயந்தி பட்டிஜி "சாய் வாலா" தான் நீங்கள் போக வேண்டாம் நாங்கள் இருக்கின்றோம் உங்களைப் காப்பாற்றிட என தடுத்து நிறுத்தினான்.

காலையில் எங்களைப் போக வேண்டாம் என்று தடுத்துவிட்டு இரவில் எங்களைத் தாக்க ஒரு கும்பலுக்குத் தலைமை ஏற்று வந்தான். இந்தத் தாக்குதல்கள் பதினான்கு மணி நேரங்கள் தொடர்ந்தன. 'பூல் சந்து பேக்கரி' என்ற ரொட்டிக்கடையைச் சேர்ந்த ஒரு இந்துவும் இந்தக் கும்பலில் உண்டு. அவன் எங்கள் கடையிலுள்ள மாவு, நெய், இன்னுமுள்ள பொருள்கள் அனைத்தையும் கொள்ளை யடித்துச் சென்றுவிட்டான். நான் தப்பித்துச் சென்று காவல்துறையிடம், வந்தவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு புகார் கொடுத்தேன். *(Concerned Citizens Tribunal. Gujarath 2002 Crime Againgst Humanity Vol.1:Pages :140-141 adapted and refold.)*

சகோதரி ஜாஹிராவின் புகாரைப் பதிவு செய்த அக்கறையுள்ள குடிமக்களின் விசாரணைக் கமிஷன் அதனை தேசிய மனித உரிமை ஆணையத்திற்கும் அனுப்பி வைத்த தாகக் குறிப்பிடுகின்றது. *(Conerned Citizens Tribunal, Gujarth 2002, Crime Against Humanity Vol.1, Pages 141 adapted and refold.)*

இந்த வழக்கில்தான் சாட்சியங்கள் தெளிவாக இருந்தன. காவல்துறையிடம் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் பெண்கள் கற்பழிக்கப்பட்ட நிகழ்வுகளும் உண்டு.

இந்த வழக்குதான் முறையான விசாரணைக்கு வந்தது. இந்தச் சகோதரியை சாட்சியம் சொல்லிட விடாமல் தடுத்திட வேண்டும் என ஃபாஸிஸ்டுகளும், காவல் துறையினரும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். உயிருக்கு பயந்து இந்தச் சகோதரி தலைமறைவாக வாழ்ந்து வந்தார்.

எனினும் குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித்தரும் வரை திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என சூளுரைத்தாள் ஜாஹிரா ஷேக். "அக்கறையுள்ள குடிமக்களின் விசாரணைக் கமிஷன்" முன் சொன்ன அதே தகவல்களை, தேசிய மனித உரிமை ஆணையத்திடமும் சொன்னாள். பின்னர் தேர்தல் கமிஷனிடம் சொன்னாள். இப்படிக் கிடைத்த வாய்ப்பு களையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்தி நீதிக்காக தன்னந்தனியாகப் போராடி வந்தாள்.

தேசிய மனித உரிமை கழகம் ஐந்து வழக்குகளை மத்திய புலனாய்வு குழு என்ற CBI *(Central Bureau of Investigation)* இடம் ஒப்படைக்க வேண்டும் என வலியுறுத்தி யுள்ளது. இந்த ஐந்து

வழக்குகளில் இந்த பெஸ்ட் பேக்கரி வழக்கு என்ற இந்த வழக்கும் ஒன்றாகும். மொத்த நீதியையும் மண் மூடிப் போகச் செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படும் ஃபாசிச அரசு எந்த வழக்கையும் மத்திய புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கவில்லை.

"பெஸ்ட் பேக்கரி" வழக்கு என்ற இந்த வழக்கில் மொத்தம் 120 சாட்சியங்கள். இதில் 73 சாட்சியங்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டனர். இதில் 41 சாட்சியங்களை மாற்றி சொல்லி விட்டார்கள். ஃபாசிஸ்டுகளுக்கெதிராக சாட்சியங்கள் சொன்னால் உயிர் பறிபோகும் என்ற நிலை. என்ன சொல்வார்கள் அவர்கள்?

"எங்களுக்கெதிராகச் சாட்சியம் சொன்னால் உங்கள் உயிர் மட்டுமல்ல உங்கள் குடும்பத்திலுள்ள எவரையும் கூட வாழ விடமாட்டோம்" என மிரட்டியுள்ளார்கள்.

இப்படித் தொடர்ந்து மிரட்டியதால் தான் ஜாஹிரா ஷேக் என்ற நேரடியாக பாதிப்புக்குள்ளான இந்தச் சகோதரியும் தனக்கெதிராகவே சாட்சியம் சொல்லிட வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டாள்.

இதே காரணத்திற்காகத்தான் இந்தச் சகோதரியின் தாய் செய்யது நிசாவும் தனக்கும் தன்முன்னே உயிரிழந்த தன் குடும்பத்திற் கெதிராகவும் சாட்சியம் வழங்கிட வேண்டிய சங்கடத்திற்குள்ளானார்கள். அதேபோல்தான் லால் முஹம்மத் என்பவரும் தான் கண்டவற்றிற்கெதிராக சாட்சியம் சொல்லிட வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளானார்.

இவர்கள், குறிப்பாக லால் முஹம்மத், தங்களுக்கெதிராக சாட்சியம் சொன்னார்கள் எனக் குறிப்பிடுவதற்குக் காரணம், அவர்கள் தங்கள் உற்றார் உறவினர்களைக் கொலை செய்த வர்களை, தன் மகன்களையும், மகள்களையும் கொலை செய்து எரித்தவர்களை, தங்களைக் காப்பாற்றியவர்கள் எனச் சொல்லிட வேண்டிய அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

இப்படி எல்லா சாட்சியங்களையும் மிரட்டி தங்களை இரட்சகர்கள் என நீதிமன்றத்திலே சொல்ல வைத்திட வேண்டிய பொறுப்பு பாரதிய ஜனதா கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் "மாது சிரீவாஸ்தவாவிடம்" ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை அவர் நிறைவாகவே நிறைவேற்றி இருக்கின்றார்.

மே 17, 2003 அன்று ஜாஹிரா ஷேக் சாட்சியம் சொல்லிட வருவார் என்பதை அறிந்த இந்த சட்டமன்ற உறுப்பினர் அவரை கொலை செய்துவிடுவோம் என்றும் அவரோடு அவருடைய குடும்பத்தில் எஞ்சி இருப்போரையும் கொலை செய்துவிடுவோம் என்றும் மிரட்டி இருக்கின்றார். நீதிமன்றத்திற்கு வரும் வழியிலேயே அவர் கொலை செய்யப்படுவார் என்ற மிரட்டலுக்கு இணங்க நீதிமன்றத்திற்குள் நுழையும் போதே தன் ஆட்களைக் கொண்டு வளைத்துக் கொண்டார். எந்தப் பாதுகாப்புமில்லை அந்தச் சகோதரிக்கு.

அப்படியே அவரை அவருக்கெதிராகவே சாட்சி சொல்ல வைத்து அனுப்பி விட்டார்கள். இதில் லால் முஹம்மது, கொலைகாரர்களைப் பார்த்து இவர்கள் எங்களைக் காப்பாற்றி யவர்கள் எனக் கூறியுள்ளார். அவர் அந்த அளவுக்கு மிரட்டப்பட்டுள்ளார்.

நீதிமன்றம் வந்து சென்ற ஜாஹிரா ஷேக்கை சுற்றிக் கதையும் கட்டிவிட்டார்கள். "அவள் பணம் வாங்கிக் கொண்டாள்." திருமணம் செய்து கொண்டு டெல்லி சென்றுவிட்டாள் என்றெல்லாம் அவதூறுகள். இந்தப் பின்னணியில் இந்த வழக்கின் விசாரணையை வதோதரா மாவட்ட நீதிபதி பா.மாஹிதா, ஜூன் 20, 2003 அன்று முடித்துக் கொண்டார். அது அதிவிரைவு நீதிமன்றம் என்பதால் ஜூன் 27ம் நாளே தீர்ப்பும் வழங்கினார். தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்ட 21 பேரும் விடுதலை செய்யப்பட்டார்கள். தீர்ப்பில் நீதிபதி இப்படிக் குறிப்பிட்டார்,

"ஆங்கிலேயர்கள் நீதிபரிசீலனை முறையை சாட்சியங்களின் அடிப்படையில் அமைத்துள்ளார்கள். இதில் நீதிமன்றங்கள் நடுவர்களே! ஆகவே தண்டனைகள் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அமைகின்றன. 100 குற்றவாளிகள் தப்பித்து விட்டாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது. உண்மையான குற்றவாளி களைக் கண்டுபிடிக்க வேண்டியது அரசுதான், நீதிமன்றங்களல்ல. இம்மன்றங்கள் சாட்சியங்களின் மன்றங்கள்தாம் அவை நீதியின் மன்றங்கள் அல்ல." (Out Look, 14th July, 2003)

இன்னொரு இடத்தில் நீதிபதி இப்படிக் குறிப்பிட்டுள்ளார்: "காவல்துறையினர் வாக்கு மூலங்களைச் சிதைத்து பின்னர்



ஜாஹிரா ஷேக் நீதிமன்றத்திற்கு வரும்போது

முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி "ராஜ்நாத் மிஸ்ரா". (இவர் பின்னர் மனித உரிமை ஆணையத்தின் தலைவராகவு மிருந்தார்.) அவர் இப்படிக் கூறி இருக்கின்றார்;

"விசாரணையின் போது போதிய கவனம் செலுத்தப்படவில்லை. போதிய சாட்சியம் இல்லாதபோது விசாரணை நீதிமன்ற நீதிபதியைக் குறை சொல்லி பலனில்லை. அரசு வழக்கறிஞர்தான் இதில் கவனமாக இருந்து சாட்சிகளைக் கோர்வையாகத் தந்திட வேண்டும். ஆக, இங்கே வழக்கறிஞரைதான் குறைசொல்ல வேண்டும்."

காயமடைந்தவர்களிடம் கையெழுத்து வாங்கி இருக்கின்றார்கள்." இங்கே நீதிபதி மயங்கி இருக்கின்றார்! பிரிதோர் இடத்தில் இப்படிக் கூறுகின்றார், "மருத்துவர்கள், காயம் பட்டவர்கள் நடந்தவற்றையெல்லாம் விபரமாகவும் சொன்னார்கள் என்று சாட்சியம் சொன்னார்கள். ஆனால் அரசு வழக்கறிஞரோ காயம்பட்ட வர்கள் அவ்வாறு விபரமாகவோ, விளக்கமாகவோ சொல்லிடும் நிலையில் இருக்கவில்லை என்று வாதாடினார். இது நீதிமன்றத்திற்கு ஏற்புடையதாக இல்லை."

அதாவது, இவர்கள்தாம் கொலையைச் செய்தவர்கள் என வாதாட வேண்டிய அரசு வழக்கறிஞர் அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்பதாய் வாதாடி இருக்கின்றார்.(Front Line, July 18, 2003)

நீதிமன்றத்தில் ஆஜராகிய மொத்தமுள்ள 73 சாட்சியங்களில் 41 சாட்சியங்கள் மட்டுமே எதிராக சாட்சியங்கள் வழங்கி இருக்கின்றார்கள். மீதமுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் தண்டனைகள் தந்திருக்கலாம். குறிப்பாக காயம் பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர்களின் சாட்சியங்கள் நிறைவாகவே இருக்கின்றன. ஆனாலும் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

"இராஜீவ் தாவன்" என்ற மூத்த வழக்கறிஞர், நீதிபதிக்கு சந்தேகமிருந்தால் அவர் சாட்சியங்களை (மீதமுள்ள சாட்சியங்களை) அழைத்து விசாரிக்கலாம். இதற்கு அவருக்கு உரிமை இருக்கின்றது. சாட்சி சொல் பவர்களுக்கு வேண்டிய பாத்துகாப்பிற்கும் ஏற்பாடு செய்யலாம். தீர்ப்பு இதர வழக்குகளையும் பாதிக்கும் என்கிறார்.

நீதிமன்றம் விடுதலை செய்ததுதான் மிச்சம், குற்றம் சாட்டப்பட்ட 21 பேரும் ஓடி விட்டார்கள் ஊரைவிட்டு,

இந்நிலையில் ஜாஹிரா ஷேக் மீண்டும் தோற்றம் தந்தாள் பம்பாயில். ஜூலை 7, 2003 அன்று அவள் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் பேசினாள். எல்லோரும் எதிர்பார்த்தது போல் அவள் டெல்லியில் இல்லை பம்பாயில் தான் இருந்தாள். அந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்ட அவள், எப்படியெல்லாம் மிரட்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டாள் என்பதையும் விளக்கிச் சொன்னாள்.

நான் பணம் வாங்கிவிட்டேன் என்று கூறி கொச்சைப்படுத்தப் பார்க்கின்றார்கள். நான் நீதிக்காக போராடுவேன். வழக்கு மீண்டும் திறக்கப்பட வேண்டும். வழக்கு பம்பாயில் நடத்தப்பட வேண்டும் என்றும் கோரினாள்.

ஜாஹிரா ஷேக்கின் இந்த பத்திரிக்கை யாளர்களின் சந்திப்பிற்கு "நீதிக்காகவும் அமைதிக்காகவும் பாடுபடும் குடிமக்களின் அமைப்பு" என்ற நிறுவனம் தான் ஏற்பாடு செய்திருந்தது.

'Citizens For Justice And Peace' (CJP)

- விடியல் வெள்ளி மாத இதழ்

- மு.குலாம் முஹம்மது.M.A.,



# ஜப்பானில் புத்த சமயத்தைச் சார்ந்த

## நாவுகி (இ) அஹமது மாயினு

# ஏன் இஸ்லாத்தை ஏற்றார்?

என் பெயர் அஹமது மாயினு. என்னுடைய பழைய பெயர் நாவுகி. நான் ஜப்பானுடைய ஆட்சி பகுதியில் இருந்து வருகிறேன். அது ஜப்பானின் மத்திய பகுதியில் உள்ளது. இப்பொழுது நான் டோக்கியோவுக்கு அருகில் உள்ள Chebaவில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். டோக்கியோவில் வேலையும் செய்கிறேன். மேலும், நான் Japan Muslim association-இன் நான்கு இமாம்களில் ஒருவராக இருக்கிறேன். என் உள்ளம் விழித்தெழுந்தது எனக்கு பதிமூன்று, பதினான்கு வயதாக இருக்கும்போது. அப்போதுதான் நான் விழித்தெழுந்தேன்.

நான் எனக்குள்ளேயே கேட்டேன், நான் எங்கிருந்து வருகிறேன்? நான் எங்கே போகப்போகிறேன்? இந்த வாழ்க்கையை, நான் எதற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்? நான் ஜப்பானில் பிறந்து வளர்ந்ததால் என்னைச் சுற்றி மிக நெருக்கமாக இருந்த மதம் புத்த சமயமாகும். எனவே நான் நினைத்தேன் நான் பௌத்த சமயத்தின் பாதையை பின்பற்றி சென்றால், என்னுடைய தேடலுக்கான பதில்களை அடையலாம் என்று நினைத்தேன். ஆனால் ஒரு கட்டத்தில் மதங்கள் வழியாக நான் உண்மையை அறிய வேண்டும் என்பதையே விட்டு விட்டேன்.

பிறகு, ஒரு வருடத்திற்கு student exchange மூலம் Australiaவின், Melbonக்கு செல்ல எனக்கு வாய்ப்பு கிடைத்தது. பிறகு நான் அங்கிருந்த காலப்பகுதியில் அல்ஹம்துலில்லாஹ் நான் ஒரு எகிப்திய குடும்பத்தை சந்தித்தேன். அவர்கள் என்னை நல்ல முறையில் நடத்தினார்கள்.

எனவே, அவர்களுடன் பழகி நான் அவர்களை அறிந்து கொண்ட போதெல்லாம் இஸ்லாத்திற்கு எதிரான என் தவறான பார்வையை, கொஞ்சம் கொஞ்சமாக கரைத்துவிட்டது.

*நீங்கள் எந்த நேரத்தில் இஸ்லாம்தான் சத்தியம் என உண்மையிலேயே நம்ப ஆரம்பித்தீர்கள்?*

நான் எப்பொழுதுமே, தேடிக்கொண்டிருந்த அந்த ஒன்று இஸ்லாம்தான் என நான் நம்பிக்கை கொண்டதற்கு பிறகு என்னுடைய எதிர்காலத்தைப் பற்றி இன்னும் எனக்கு கவலையும் பயமும் இருந்தது.

*அது என்ன பயம்?*

எனக்கு தெரியும். இஸ்லாத்தை நோக்கி என் கடைசி பாதத்தை எடுத்து வைத்தால் அதாவது, உங்களுக்கு தெரியும், இஸ்லாம், மற்றும், முஸ்லிம்களின் உலகத்தினுள் நுழைய நான் ஆரம்பித்தால் என்னுடைய சொந்த சமூகமான ஜப்பானிய மக்கள் என்னை எப்படி




பார்ப்பார்கள்! அவர்கள் என்னை ஒரு வித்தியாசமான, விசித்திரமான ஒருவனாக, பார்ப்பார்கள். நான் இஸ்லாத்தை முழுமையாக ஏற்பதை விட்டும், என்னை தடுத்த கடைசி காரணம் இதுவாகத்தான் இருந்தது.

ஆனால், பிறகு, மால்கம்-எக்ஸ் திரைப் படத்தை பார்த்ததுதான் எனக்கு கடைசியாக ஒரு உந்துதல் வந்தது. இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள என்னை ஊக்குவித்தது. அல்ஹம்து லில்லாஹ்.

அது ஏனென்றால் மால்கம்-எக்ஸ் அவருடைய கடந்த கால வாழ்க்கையில், ஒரு gangsterஆக, பல விதமான பாவங்களையும், செய்து கொண்டு வாழ்ந்தார்.

பிறகு எப்படி அழகாக, மிகப்பெரிய அளவில் அவரை, அவரே மாற்றிக் கொண்டாரோ, அவரது வாழ்க்கைய ஒரு புனிதரின் வாழ்க்கையைப் போல, நேரான பாதையில் வாழும் ஒரு மனிதரின் வாழ்க்கையைப் போல அவர் மாற்றியதைப் பார்த்த போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அது மட்டும் அல்ல, அவர் மக்கா யாத்திரை சென்ற போது அவரையே வியக்க வைத்த அந்த ஹஜ்ஜுடைய நிகழ்வுகளை பார்த்தபோது, அதிகமான மக்கள் பல இடங்களில் விளையாட்டை பார்க்க வேண்டும், நடனத்தைப் பார்க்க வேண்டும், கச்சேரியைப் பார்க்க வேண்டும் என்ற காரணங்களுக்காக, ஒன்று கூடுகிறார்கள்.

அதன் காரணமெல்லாம் கேளிக்கை களுக்காகத்தான்.. ஆனால் இங்கே கூடுகின்ற அதிகமான மக்கள் ஒரே இறைவனை வணங்க வேண்டும் என்ற காரணத்திற்காக கூடுகிறார்கள். இதைவிட வேறொரு புகழுக்குரிய விஷயம் இருக்கிறதா? இல்லை. பிறகு நான் கடைசியாக புரிந்து கொண்டேன். முஸ்லிமாக மாறுவது என்பது ஒரு கோழையினுடைய வேலையாகத் தான் இருக்கும் என்றெல்லாம் இல்லை..

முஸ்லிமாக மாறுவதென்பது ஒரு அற்புதமான ஒரு விடயம். ஒரு அற்புதமான, ஒரு அழகிய, மிகப்பெரிய ஒரு விடயம். நான் என் கடைசி படியை கடந்து இஸ்லாத்தை ஏற்றேன். எனவே, மால்கம் - எக்ஸ் திரைப்படத்தை பார்த்த அந்த நாள் இரவுதான் நான் நினைக்கிறேன், நான் இஸ்லாத்தை ஏற்ற அந்த நொடி அதுதான் என்று.

அந்த நேரத்தில், நான் என் முழங்காலில் விழுந்தபோது என் நெற்றியை தரையில் வைத்து அல்லாஹு தாலாவிடத்தில் பிரார்த்தனை செய்து, அல்லாஹுத் தாலாவிடத்திலே நான் முற்றும் முழுதாக திரும்பிக் கொண்டேன்.

நீங்கள் முஸ்லிம் ஆன போது, உங்கள் குடும்பத்தினர், நண்பர்களெல்லாம் எப்படி எடுத்துக் கொண்டார்கள்?

நான் இஸ்லாத்திற்கு எப்படி வந்தேன் என்ற என் கதையை ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை என் பெற்றோர்களிடம் சொன்னபோதிலும், அவர்கள் என்னை தவறாக புரிந்து கொண்டார்கள். ஆமாம், அதனால்தான் நான் ஆரம்பத்தில் எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை. ஆனால், பிறகு, ஜப்பானில், சமூக ரீதியான ஒரு பிரச்சனை உருவாகிய போது, அதாவது, “ஓமு” என்று அழைக்கப்படக்கூடிய கடும்போக்கான சமய மரபைச் சேர்ந்த ஒரு சில வெறியர்கள், டோக்கியோவின், புகைரத சப்பையின் உள்ளே ஒரு கொலைவெறி ஆட்டத்தை நடத்தினார்கள்.

இஸ்லாத்திற்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லாது இருந்தாலும் கூட, அவர்களின் அந்த செயலால் எல்லா மத நம்பிக்கைகளுக்கு

எதிராகவும் ஒரு மிகத் தவறான உருவத்தை கொடுத்துவிட்டார்கள். அது, எந்த மத நம்பிக்கையாக இருந்தாலும் சரியே.

எனவே, அதைத் தொடர்ந்து என்ன பிரச்சனை வந்ததென்றால், அறியாமை. அதாவது, இஸ்லாத்தைப் பற்றி அறியாத தன்மை. அவர்கள், இஸ்லாத்தைப் பற்றி, "அதுவும் இதே மாதிரிதான் இருக்கு. இந்த வெறியர்களைப் போல! அப்படித்தான் இருக்கும்." என்று நினைத்தார்கள்.

அல்லாஹ்வுக்காக நான் அரபிக் மொழியைக் கற்றுக் கொள்ள குவைத்துக்கு சென்று படிக்க வேண்டும் என என்னுடைய தந்தையிடம் அனுமதி கோரியபோது, என் தந்தை சொன்னார், முடியாது.

அவர் என்னிடம் கேட்க தொடங்கினார்.

"நீ ஏன் இன்னும் முஸ்லிமாக இருக்கிறாய்? முஸ்லிமாக இருப்பதை, இதோடு நிறுத்திக்க."

நான் சொன்னேன், "என்னால் முடியாது. அப்பா, உங்களுக்கு தெரியும் நான் முஸ்லிமாக ஆனதில் இருந்து நான் கிறுக்கனாக மாறினேனா? அல்லது இருந்ததை விட கேவலமானவனாக மாறினேனா?"

அவருக்குத் தெரியும். அவருக்கு நன்றாகவே தெரியும். அப்படி இல்லை. அவருடைய மகன், இருந்ததை விட கேவலமானவனாக மாறவில்லை. பிறகு இறுதியாக அவர் சொன்னார், "அப்படியா? அப்படின்னா, இதற்கு பிறகு நீ எனக்கு மகனே கிடையாது." என்று! அது எனக்கு ரொம்ப அதிர்ச்சியாக இருந்தது.

பிறகு, அந்த நேரத்தில் நான் ஒரு part time job செய்து கொண்டிருந்தாலும் கூட ஏதோ ஒரு வழியில் இன்னும் நான் என் பெற்றோரிடத்தில் தங்கியிருந்தேன். எனவே என் வாழ்க்கையை கொண்டு செல்ல நான் சில வழிகளை கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

பிறகு அடுத்த நாள் ஆருகில் உள்ள மஸ்ஜித் ஒன்றுக்கு சென்று, அங்கே இருந்த எகிப்தி இமாமுடன் என்னுடைய பிரச்சனையைப் பற்றி ஆலோசனை செய்தேன். எனவே அவர், அல் அஸ்கர் பல்கலைக் கழகத்தில், scholarship-ஐ பெறுவதற்காக, ஒரு Recommendation letter-ஐ, egypt embassyக்கு கொடுக்குமாறு என்னிடம் தந்தார்.

எனவே, நான் அந்த கடிதத்தை, Egyptia embassyக்கு அனுப்பி விட்டேன். பிறகு நான் என் வீட்டுக்கு சென்று என் பெற்றோருடன் சேர்ந்து அமர்ந்து கொண்டேன். அங்கே எல்லாமே அமைதியாகத்தான் இருந்தது. அல்ஹம்துலில்லாஹ் அவர்கள், என்னை மறுபடியும் ஏற்றுக் கொண்டார்கள். இறைவனுக்கே எல்லா புகழும்!

*அவர்களில் யாராவது, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்களா? உங்களுக்கு பிறகு?*

இன்று வரையிலும் இல்லை. என்னுடைய தந்தை இறந்துவிட்டார். அவருடைய கடைசி காலங்களில் அவர் என்னிடம் இப்படி கூறினார், "நான் உன்னுடன் வாழ ஆசைப்பட்டிருந்தால் நானும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருப்பேன்." என்று. ஆனால் என் குடும்ப சூழ்நிலையால் அது நடக்காமல் போனது.

*எந்த ஒன்றை உங்களால் புத்த சமயத்தில் புரிந்து கொள்ள முடியவில்லை?*

மறுபிறப்பு. இந்த மறுபிறப்பு என்ற சிந்தனைகள் இந்தியாவில் இருந்துதான் தொடங்கியது. புத்த மதத்தில் வேரூன்றி இருக்கும் இந்த மறுபிறப்பு என்ற சிந்தனையே இந்து மதத்திலிருந்து வந்த வாரிசுதான். அவ்வளவு ஏன் புத்தரே இந்து மதத்தின் புரட்சியாளராகத்தான் கருதப்படுகிறார்.

இந்த மறுபிறப்பு என்ற கொள்கை என்ன சொல்கிறது என்றால், உங்களுக்கு இருக்கும் இந்த உயிர் எப்போதும் மரணிக்காது. அந்த உயிர் இந்த உலகத்திலேயே நீங்கள் செய்யும் செயல்களை பொருத்தோ அல்லது வேலையை பொருத்தோ பல வடிவங்களில் எஞ்சியிருக்கும். உங்களது முந்தைய வாழ்க்கையில் நீங்கள் ஒரு மிருகமாக அல்லது ஒரு பூச்சியாக இருந்திருக்கலாம். அந்த வாழ்க்கையில் நீங்கள் எப்படி வாழ்ந்தீர்கள் என்ற அடிப்படையில் உங்களது அடுத்த வாழ்க்கையில் நீங்கள் வேறு ஒரு உயிராக அல்லது மனிதனாகக்கூட பிறக்கலாம். ஒருக்கட்டத்தில் இந்த பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த புரிதல்களையும் நீங்கள் அடைந்து விடும் போது இந்த மறுபிறப்பு சுழச்சியிலிருந்து நீங்கள் தப்பித்துவிடலாம். இதுதான் மறுபிறப்பு கொள்கை.

இங்கே கேள்வி என்னவென்றால், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மக்களின் எண்ணிக்கை மாறுபட்டுக் கொண்டே இருக்கும்.

அப்படியிருக்கும் போது ஒரே உயிர் திரும்ப திரும்ப பிறந்துகொண்டே இருந்தால் அந்தந்த காலக்கட்டத்தின் மக்களின் எண்ணிக்கை எப்படி சமன் ஆகும்?

மேலும் நான் புத்த மதத்தின் துறவியாக மாறுவதை விட்டும் என்னை தடுத்தது என்னவென்றால், இங்கே புத்த சமயத்தில் ஒரு சாமான்ய மனிதனின் வாழ்க்கையும், ஒரு துறவியின் வாழ்க்கையும் முழுவதுமாக பிரிந்துள்ளது. ஒரு சாமான்ய மனிதனின் நடைமுறை வாழ்க்கையும், நம்பிக்கையும் பிரிந்து கிடக்கின்றது. இந்த முரண்பாடுகளை நான் கண்டபோது துறவியாக மாறுவதை விட்டு விலகினேன்.

இஸ்லாத்தில் நீங்கள் வியந்து படித்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் இயல்பாக நீங்கள் எதை காண்கிறீர்கள்?


அவரது இரக்க குணம் தான். குறிப்பாக நபிகளாரின் தாயிஃப் நகர சம்பவம். அவர்கள் அந்த மக்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள அழைப்பு விடுத்தார்கள். அப்போது அந்த மக்கள் அவரை துன்புறுத்தினர். அங்கு வந்த ஜீப்ரீல்(அலை) அவர்கள், "அந்த மக்களை அப்படியே மலைகளுக்கு நடுவில் வைத்து நசுக்கிவிடவா?" என்று கேட்டபோது, நபியவர்கள் இப்படி சொன்னார்கள், "இல்லை வேண்டாம். ஒருவேளை இவர்களுக்கு பின்னால் வரும் தலைமுறையினர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளலாம். அவர்கள் ஓர் இறைவனை நம்பக்கூடியவர்களாக ஆகலாம்" என்று.

இன்றைக்கு இந்த 21ம் நூற்றாண்டில் மக்கள் இஸ்லாத்தை மிகவும் மூர்க்கத்தனமாக தாக்குதவற்கு என்ன காரணம் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

ஆம்! ஜப்பானில் கூட இப்படியான பல சம்பவங்கள் நடைபெறுகின்றது. அவர்களுக்கு நன்றாக தெரியும் இஸ்லாம் தான் சத்தியம் என்று. முதல் முறை அவர்கள் இஸ்லாத்தை குறித்து எதையோ படிக்கும்போது, அல்லது அறிந்து கொள்ளும்போதே அவர்களுடைய உள்ளம் புரிந்து கொண்டு விடுகிறது இது தெளிவான சத்தியம் என்று. இப்போது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்ற முடிவிற்கும் வருகின்றார்கள். ஆனால் அப்படி ஏற்றுக்கொண்டால் நிறைய சுமைகளை தாங்க வேண்டியிருக்கும். அந்த சுமைகளை தாங்க தயாராக இல்லாத சில மக்கள் தாம் இஸ்லாத்திற்கு எதிராக இருக்கின்றார்கள்.

நான் இந்த உலக மக்களுக்கு ஒன்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். "இஸ்லாத்தின் போதனைகள் நம் உள்ளங்களில் குடிபுகா விட்டால், நம்முடைய உள்ளங்கள் இரக்க மற்றதாக, கடினமாக, மூர்க்கத்தனமாக மாறிவிடும்." (Source: Overwhelming quran youtube Channel)

- *அஷ்ரஃப் அலீ*


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

**தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887**

# பெட்ரோலியத்தில்

## தனி சுதந்திரம் பெறும் முஸ்லிம் நாடுகள்




**Organisation of Petroleum Export Countries**

அன்பார்ந்த வாசகர்களே, நாம் அரபு நாடுகளுக்கு இடையேயும், முஸ்லிம் நாடுகளுக்கிடையேயும், வளர்ந்து வரும் ஒற்றுமையைப் பற்றி பேசி வருகின்றோம். அதில் இன்னொரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. Organisation of petroleum exports countries என்ற ஒரு அமைப்பு அதாவது, பெட்ரோலியத்தை ஏற்றுமதி செய்யக்கூடிய அமைப்புகளின் நாடுகளின் கூட்டமைப்பு.

இந்த கூட்டமைப்பில், இன்னும் பல புதிய நாடுகளை சேர்ப்பதாக அதனுடைய பொதுச்செயலாளர் அறிவித்திருக்கிறார். புதிதாக சேரப்படுகின்ற நாடுகள் அஸர்பைஜான், மலேசியா, புருனை,மெக்ஸிகோ.

Opec - organizations of petroleum export countries என்று சொல்லக்கூடிய, இந்த அமைப்பு ஒரு பெரிய பின்னணி கொண்டது. அதை முழுமையாக இங்கே சொல்லிவிட முடியாது. இருந்தாலும் சுருக்கமாக சொல்கிறோம்.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னால் ஆதிக்கம் செலுத்திய ஆதிக்க நாடுகள் குறிப்பாக, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் உலகெங்கிலும் உள்ள எண்ணெய் வளங்களை, நோக்கி பயணம் செய்து அவற்றில் கை வைத்தார்கள்.

கை வைத்து, Anglo, American company-கள் என்று சொல்லக்கூடிய ஆங்கில நாடும், அமெரிக்கா நாடும் சேர்ந்து உருவாக்கிய பல கம்பனிகள் உலகில் இருக்கின்ற எண்ணெய் வளத்தில் 80 சதவீதத்தைக் கொண்ட அரபு நாடுகளில் தங்களுடைய ஆலைகளை நிறுவினார்கள். அந்த மன்னர்களை தங்களுடைய கைகளில் போட்டுக் கொண்டு தேவையான எண்ணெயை அவர்கள் எடுத்திருந்தால் அதை, அனுமதித்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் பெட்ரோலியத்தை ஒரு ஆயுதமாக பயன்படுத்தி உலக பொருளாதாரத்தை தங்களுடைய கைகளிலே வைத்திருந்தார்கள் என்பதுதான் உண்மை. பெட்ரோல் உலகம் முழுவதும் தேவைப்படுகின்ற ஒரு பயங்கரமான சக்தி. அதை அதிகமாக உற்பத்தி செய்வதன் மூலம் அதன் விலையை குறைப்பதும், உலக நாடுகள் எல்லாம் நெருக்கடியில் இருக்கும்போது அதன் உற்பத்தியை குறைத்து விலையை கூட்டுவதும், இந்த Anglo American company-களின் வேலையாக இருந்தது.

இந்த கொடுமைகளில் இருந்தே அதை எப்படி சொல்லுகிறார்கள் என்று சொன்னால், ஆங்கிலத்தில் Monopoly என்பது உலகில் கிடைக்கின்ற இயற்கை வளங்களை எண்ணெய் வளங்களை சில நாடுகள் கைப்பற்றிக் கொண்டு, வேறு யாருக்கும் அதில் பங்கில்லை என்ற நிலையில் தாங்களே, விலையை நிர்ணயிப்பது.

இன்னும் புரியும்படியாக சொல்ல வேண்டும் என்று சொன்னால், நமது சந்தைகளிலே வருகின்ற பொருட்களை சந்தைகளுக்கு வெளியிலே வைத்து குறிப்பாக, அரிசி வருகிறது என்றால், எல்லா அரிசியையும் ஒரே வியாபாரி வாங்கிக் கொள்வார். பிறகு, அரிசி வேறு யாரிடமும் கிடைக்காது என்ற நிலை வந்த பிறகு அவர் நினைப்பதுதான் விலை என்றாகிவிடும். இதை Monopoly என்று சொல்லுவோம். இதை உடைக்கின்ற பல திட்டங்களை இஸ்லாமிய பொருளாதாரம் வைத்திருந்தது. அது வேறு விவகாரம்.

ஆனால், எண்ணெய் வளங்களை கைப்பற்றிக் கொண்டு Eight systems என்று சொல்லக்கூடிய இந்த Anglo American companyயினுடைய கிளை அமைப்புகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி உலக பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகளை கொண்டு வர நாங்கள் நினைத்தால் முடியும் என்று முடிவு செய்தார்கள்.

இந்த நிலையில் இருந்து அவர்களை கீழே தள்ளுவதற்கு அமைக்கப்பட்ட அமைப்புதான் OPEC என்று சொல்லக்கூடிய organisation of petroleum export countries. இதில் ஆரம்ப காலத்தில் Iran, Iraq, Saudi Arabia, Kuwait, Vencilia




போன்ற நாடுகள் அங்கம் வகித்தன. இந்த ஐந்து நாடுகள்தான் அதனுடைய founder fathers என்று சொல்வார்கள். 14/09/1960-ல் இது தொடங்கப்பட்டது.

அதன் பிறகு மெல்ல, மெல்ல இந்த அமெரிக்கா கம்பெனியிலிருந்து அவர்களுடைய கிடுக்குப்பிடியில் இருந்து தங்களை விடுவித்துக் கொண்டு petrol thinking விலையை மனிதாபிமானத்தோடு நியமிக்கின்ற இந்த அமைப்பு செயலில் வந்தது.

எழுபதுகளில் இது மிகவும் active-ஆக மிகவும் துடிப்போடு செயல்பட்டுக் கொண்டிருந்தது. மீண்டும் அரபு நாடுகளை அமெரிக்கா தன்னுடைய கண் அசைப்புக்கு கொண்டு வந்த பிறகு சற்று நிலை தடுமாறியது. இப்போது முஸ்லிம் நாடுகள் தங்களுக்குள்ளே உள்ள உறவை வலுப்படுத்தி இருக்கின்றன. வளர்த்திருக்கின்றன என்பதை நாம், பல பதிவுகளிலும் சொல்லிவிட்டோம்.

குறிப்பாக ஈரானுக்கும், சவுதி அரேபியாக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம், அதன் பிறகு கத்தார் போன்ற நாடுகள் UAE என்று சொல்லக்கூடிய, United Arab Emirates இவையெல்லாம் அமெரிக்காவினுடைய guardianship என்று சொல்லக்கூடிய பாதுகாப்பிலே இருந்து தங்களை விடுவித்துக் கொண்டு, தாங்களாகவே ஒரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வது என்ற நிலைக்கு வந்தார்கள்.

இதற்கு ஈரான் பல கப்பல்களை harmost பகுதியில் நிறுத்தியதும் America அவற்றை மீட்டுத் தர முடியாமல் போனதும் காரணமாக இருந்ததை விளக்கமாக இன்னொரு பதிவில் சொல்லி இருக்கிறோம். அந்த வகையில் முஸ்லிம் நாடுகளின் ஒற்றுமையின் அதாவது, 80 சதவீதம் எண்ணெய் வளங்களை ஒன்றாக

கொண்ட நாடுகளின் ஒற்றுமையின் ஒரு பகுதியாக ஒப்பந்தத்தினுடைய *organisation of petrol export countries* என்று சொல்லக்கூடிய பெட்ரோலை எண்ணெயை ஏற்றுமதி செய்கின்ற நாடுகளினுடைய அமைப்பில் இப்பொழுது அஸர்பைஜானும் இணைந்துள்ளது. இது *USSR* என்று அந்த காலத்தில் அறியப்பட்டு, இன்று சோவியத் என்று சுருங்கிக் கொண்ட, ரஷ்யாவிலிருந்து பிரிந்த பகுதி.

மலேசியா, இதுவும் ஓரளவுக்கு, எண்ணெய் வளங்கள் சார்ந்த நாடு. புருனே. இதுவும் ஓரளவுக்கு, எண்ணெய் வளங்கள் சார்ந்த நாடு. அதேபோல மெக்ஸிகோ. இந்த நாடுகள் எல்லாம் சேர்ந்த பின் இப்போது இந்த அமைப்பு, 28 நாடுகள் உள்ள அமைப்பாக வளர்ந்திருக்கிறது.

இன்னும் பல நாடுகள் இந்த அணியிலே சேரும் என்று சொல்லுகின்றார்கள். இதன் மூலம் குறைவாக எண்ணெய் உலக மக்களுக்கு கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும். ஏனென்றால் அமெரிக்காவின் அதே போன்று ஆதிக்க சக்திகளின் சுரண்டலில் இருந்து இந்த எண்ணெய் கிணறுகள், எண்ணெய் வளங்கள் விடுவிக்கப்படும் வாய்ப்புகள் இருக்கிறது.

இப்படி, OPEC சொல்லக்கூடிய, Organisation of Petroleum Export Countries னுடைய, அமைப்பு விரிவாகுவதில் ஒரு பெரிய அறிவிப்பை அவர்கள் செய்திருக்கிறார்கள். அதாவது Freedom From Natural Resources அல்லது Savernity of Natural Resources என்றொரு வார்த்தையை பயன் படுத்துகிறார்கள்.


நமது நாட்டில் இருக்கும் எல்லா இயற்கை வளங்கள் மீது முதலில் நமக்கு எல்லா ஆதிக்கங்களும், உரிமைகளும் இருக்க வேண்டும். இந்த OPEC அமைப்பின் புதிய பிரகடனத்தின் மூலம், நாங்கள் தன்னாட்சியை பெறுகின்றோம் என்று சொல்லியிருக் கின்றார்கள். இந்த பிரகடனத்தின் மூலம் முஸ்லிம் நாடுகள் தங்கள் இயற்கை வளங்களை இதுவரை யாருக்கு தாரைவார்த்து தந்து கொண்டிருந்தனர் என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆகவே முஸ்லிம் நாடுகளுக்கு நடுவே இப்போது ஏற்பட்டுள்ள இந்த புதிய உறவும், அதில் உள்ள வலிமையும் OPEC மூலம் இன்னும் வலிமை பெற்றுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். அல்ஹம்துலில்லாஹ்.

**MGM**


# இஸ்லாம் ஒன்றே வழி

**புத்தம் புதிய மறு பதிப்பு**




- ஒவ்வொரு நாடும். ஒவ்வொரு தனி மனிதனும் கிடைப்பதையெல்லாம் தமதாக்கிக்கொள்ள வேண்டும் என்றே ஆசைப்படுகின்றான். இதுதான் இன்று வல்லரசுகளிடையே காணும் ஊமைச் சண்டைகளுக்குக் காரணம். விவசாயத் துறையில் கண்டெடுத்திருக்கின்ற புதுமையான கண்டுபிடிப்புகள், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இயற்கை வளங்கள், பெட்ரோல், கச்சாப் பொருள்கள் இவையெல்லாம் மனித இனத்திற்கு நன்மை பயப்பதாக இல்லை. மாறாக மனிதனுக்குத் தீமை பயப்பதாகவே இவை மாறியுள்ளன.

- சிறிய நாடுகளெல்லாம் வல்லரசு களின் நயவஞ்சகத்திற்கும், சதிகளுக்கும் உட்பட்டுத் தங்களது மனித உரிமை களையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கின்றன. நாம் மேலே சொன்ன கண்டு பிடிப்புகள் பெரிய நாடுகளில் இடம் பெறுமேயானால் அந்தக் கண்டுபிடிப்புகள் மனித இனத்திற்கும் உலக அமைதிக்கும் ஒரு பெரும் ஆபத்தாகவே முடியும். இந்தக் கண்டுபிடிப்புகளெல்லாம் இந்தப் பெரிய நாடுகவர்களின் ஆயுத பலத்தையும் ஆதிக்க பலத்தையும் அதிகப்படுத்தவே பயன்படுத்தப்படும். இதனால்தான் நமது கல்வியறிவு, விஞ்ஞானம், இயற்கை வளங்கள், திறமைகள் இவையெல்லாம் மனிதனை அழிப்பதற்கும் இமைப்பொழுதில் இந்த உலகத்தையே அழிக்கின்ற விதத்திலும் பயன்படுத்தப்படுகின்றன எனக் கூறகின்றோம். - நூலிலிருந்து

மூலம்: அனிசுத்தீன் அஹமது

தமிழில் : மு.குலாம் முஹம்மது, M.A., in JMC.,

வேர்கள் வெளியீட்டகம்

விலை – ரூ.120/–

போன் : 7401213394 / 7358278146 / 8148129887

# அல்லாஹ் யாருடன் பேசமாட்டான்?

தலையங்கம்

இந்த உலகில் ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு செய்த துரோகத்தின் காரணமாக இருவரும் ஒருவர் இன்னொருவருடன் பேசாமல் இருப்பது போல இந்த உலகில் மனிதன் செய்த வரம்பு மீறிய காரியங்களால், பாவத்தால் இறைவன் அந்த மனிதனை நாளை மறுமையில் பார்க்கவும் மாட்டான், பேசவும் மாட்டான்.

அவ்வாறில்லை அந்நாளில் அவர்கள் தமது இறைவனை விட்டுத் தடுக்கப்படுவார்கள் என்று குறிப்பிடுகிறான்.(அல் முத•ப்•பி•பீன் : 15)

''மறுமை நாளில் அல்லாஹ் அவர்களுடன் பேசமாட்டான் அவர்களை தூய்மைப்படுத்தவும் மாட்டான் அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனையும் உண்டு. (அல் பகரா : 174)

அல்லாஹ் யாரைப் பார்த்து பேச மாட்டேன், பார்க்க மாட்டேன் என்று கூறுகிறானோ அவர்கள் மீது அல்லாஹ் மிகுதியான கோபம் கொள்கிறான். அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளான அந்த நரகவாதிகள் யார்?

**வேதத்தை மறைத்தோர்**

அல்லாஹ் அருளிய வேதத்தை மறைத்து அதை அற்ப விலைக்கு விற்போர் தமது வயிறுகளில் நெருப்பை தவிர (வேறு எதையும்) சாப்பிடுவதில்லை. கியாமத் நாளில் அல்லாஹ் அவர்களுடன் பேச மாட்டான். அவர்களை தூய்மைப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனையும் உண்டு. (அல்பகரா :174)

''வேதம் கொடுக்கப்பட்டோரிடம் அதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் மறைக்க கூடாது என்று அல்லாஹ் உறுதிமொழி எடுத்தபோது, அவர்கள் அதை தமது முதுகுகளுக்குப் பின் எறிந்தனர். அற்பமான விலைக்கு விற்றனர். அவர்கள் விலைக்கு வாங்கியது மிகவும் கெட்டது. (ஆலஇம்ரான் : 187)

**பொய் சத்தியம் செய்யும் வியாபாரி**

விற்பவரும் வாங்குபவரும் பிரியும் வரை (வியாபாரத்தை முறித்துக் கொள்ளும்) உரிமை படைத்திருக்கிறார்கள். அவ்விருவரும் உண்மையைக் கூறி (பொருளின் குறையைத்) தெளிவுபடுத்தினால் அவர்களின் வியாபாரம் பரகத் செய்யப்படும். அவர்கள் பொய் கூறி (பொருளின் குறையை) மறைத்தால் அவர்களின் வியாபாரத்தில் பரகத் நீக்கப்படும். (நூல் : புகாரி)

மூன்று பேர்களுடன் அல்லாஹ் மறுமையில் பேசவும் மாட்டான், அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவும் மாட்டான் (ஒருவன் தன் பொருளை அதிக விலைக்கு) விற்பதற்காக வாடிக்கையாளர் கொடுக்கும் விலையை விட அதிக விலை கொடுத்து வாங்கியதாக (பொய்) சத்தியம் செய்தவன். (நூல்: புகாரி)

**சுயநலத் தொண்டன்**

மூன்று நபர்களுடன் அல்லாஹ் மறுமையில் பேசவும் மாட்டான், ஏறெடுத்தும் பார்க்க மாட்டான் ( அந்த மூவரில் ஒருவன் ) அவன் தன் தலைவனிடம் உலக ஆதாயத்திற்காகவே பைஅத் (விசுவாச பிரமாணம்) செய்து கொண்டவன் அவர் கொடுத்தால் திருப்தி அடைந்தும் கொடுக்காவிட்டால் கோபம் கொள்வான். (நூல் : புகாரி )**செய்த உதவியை சொல்லிக் காட்டுபவன்**

மூன்று பேரிடம் அல்லாஹ் மறுமையில் பேச மாட்டான், அவர்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டான், அவர்களை தூய்மைப்படுத்தவும் மாட்டான், அவர்களுக்கு துன்பம் தரும் வேதனை உண்டு என்று மூன்று முறை நபி(ஸல்) கூறினார்கள். நான் அவ்வாறாயின் அவர்கள் இழப்புக்குள்ளாகிவிட்டனர், நஷ்டமடைந்துவிட்டனர் அவர்கள் யார் அல்லாஹ்வின் தூதரே என்று கேட்டேன். அதற்கு தமது ஆடையை (பெருமைக்காக) கீழே இறக்கிக் கட்டியவர், செய்த உபகாரத்தை சொல்லிக் காட்டுபவர், பொய் சத்தியம் செய்து சரக்கை விற்பவர் என்று நபி(ஸல்) கூறினார்கள். (நூல் : முஸ்லிம்)


**விபச்சாரம் செய்யும் முதியவன்**

மறுமை நாளில் மூன்று நபர்களிடத்தில் அல்லாஹ் பேச மாட்டான் அவர்களை தூய்மைப்படுத்தவும் மாட்டான் அவர்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டான் (அவர்களில் ஒருவர்) விபச்சாரம் செய்யும் கிழவன் என்று நபி(ஸல்) கூறினார்கள். ( நூல்: முஸ்லிம்)

பெருமையடிக்கும் ஏழை மற்றும் பொய் சொல்லும் அரசன் இவர்களுடனும் இறைவன் பேசவும் மாட்டான். ஏறெடுத்தும் பார்க்க மாட்டான் இவர்களுக்கும் துன்புறுத்தும் வேதனையும் உண்டு என நபி(ஸல்) கூறினார்கள்.

அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாவதோடு, நரக வேதனையும் தரக்கூடிய இப்படிப்பட்ட பாவமான காரியங்களை விட்டும் நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

# நூல் மதிப்புரை




நூல்:

**தமிழக முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும்.**

ஆசிரியர்:

**பேராசிரியர் முனைவர் ஆ.பசீர் அகமது.**

**பக்கங்கள்: 584 விலை: 450/-**

வெளியீடு:

**வளர்பிறை பதிப்பகம். 2/686 -7வது தெரு விரிவாக்கம் -1, G.R. நகர், K.புதூர் அஞ்சல், மதுரை -625 007.**

**தொடர்புக்கு:**

**98940 64783 , 70107 92614**

இந்தியாவில் வகுப்புக் கலவரங்களால் கந்தல் கந்தலாக ஆக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள். ஏதேனும் ஒரு மாவட்டத்தில் முஸ்லிம்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்கிறார்கள் என்று தெரிந்துவிட்டால் போதும் அம்மாவட்டத்திற்கென ஒரு செயல் திட்டம் போட்டு நிம்மதியை குலைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். பாசிஸ்டுகளின் கடந்த கால வரலாறுகள் இதற்கு சாட்சி.

கிபி.1893 முதல் இந்தியாவில் நடை பெற்றுள்ள வகுப்புவாத வன்முறைகளை ஆய்வு செய்த மகாராஷ்டிரா காவல்துறை முன்னாள் ஐ.ஜி எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் இப்படிச் சொல்கிறார் :

ஆரம்பத்தில் இது வகுப்புவாத கலவரங்களில் இந்துக்களை ஈடுபட வைப்பதன் மூலம் சமூக மற்றும் மத ரீதியான (பிராமணர்களின்) ஆதிக்கத்தை ஏற்படுத்துவது என்ற அளவில், இது குறுகித்தான் இருந்தது. ஆனால் முஸ்லிம்களுக்கு எதிரான வேலைகள் இவர்கள் எதிர்பார்த்ததை விடவும் அதிக வரவேற்பைப் பெற்றது அதனால் அது அவர்களுக்கு (பிராமினிஸ்டுகளுக்கு) அரசியல் பலத்தை தந்தது.

ராமஜென்ம பூமி போன்ற விஷயங்களை கையில் எடுத்து கொண்டு ஆக்ரோஷமாக மத துவேஷ சாட்டையை வீசவும் வைத்தது. (நூல்,: கர்க்கரேயை கொலை செய்தது யார்? முன்னுரை பக்கம் 19,20. ஐந்தாம் பதிப்பு)

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை முழக்கங்கள், மதவாத செயல் திட்டங்கள் பாசிஸ்டுகளுக்கு எதிர்பார்த்ததை விட கூடுதல் பலனைத் தந்துள்ளது என்கிறார் எஸ்.எம். முஷ்ரிப்.

காரணம் முஸ்லிம்களிடம் பாசிஸ்ட்டுகளை எதிர்கொள்ளும் செயல் திட்டங்கள் இல்லை.

சனாதனம் என்கிற ஓர் உளுத்துப்போன தத்துவத்தை வைத்துக்கொண்டு மக்களை அணிதிரட்ட பாசிஸ்ட்டுகளால் இயலுமொரு தேசத்தில் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய உன்னத லட்சியங்களை உலகோர்க்கு உரைத்த உயர்ந்த இஸ்லாத்தை, அது இவ்வுலகில் உருவாக்கிய சமுதாயத்தை நிலைநாட்டவும் அதை மேம்படுத்தவும்

முஸ்லிம்கள் படாத பாடுபடுவது விந்தையிலும் விந்தை.

இஸ்லாம் நம் தமிழ் நிலத்துக்கு வந்த வரலாறும் இங்கே அது தழைத்தோங்கிய வரலாறும், ஆதிக்க சாதிகளால் அடிமைப் படுத்தப்பட்ட மக்களுக்கு அது ஆசுவாசம் தந்த வரலாறும் நிகழ்கால சமுதாயத்துக்கு சொல்லப்பட வேண்டும்.

அதை செவ்வனே செய்திட உதவும் வகையில் இந்நூல் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. தமிழக வரலாற்றில் முஸ்லிம்கள் கடந்து வந்த பாதை ஏற்ற இறக்கங்கள் மிகுந்தவை. இங்கே அவர்கள் பதித்த தடங்கள் எவராலும் அழிக்க முடியாதவை என்பதை இந்நூல் பறைசாற்றுகிறது.

நூலை வாசிக்க வாசிக்க பிரமிப்பு கூடிக் கொண்டே போகிறது. மிகுந்த சிரமப்பட்டு தகவல்களை திரட்டியிருக்கிறார் நூலாசிரியர்.

பஞ்சுவெட்டி(பக்கம்:242), கலந்தர் (பக்கம்.116), தண்டையார்(பக்கம்.145), தூதே குலா பஞ்சுவெட்டி(பக்கம்.117), சோனகன்(பக்கம்.150) யர்புத் என்பது ஏர்வாடி ஆனது(பக்கம்.153 மற்றும் 121) நயினார் (பக்கம் 218) மாலுமி - முஅல்லிம் - மல்லிப் பட்டிணம்(பக்கம்.145) பேட்டை(பக்கம்.190) ஆகிய சொற்களுக்கு நூலாசிரியர் தரவு களுடன் தரும் விளக்கம் தெரிந்திட வேண்டியது.

இடைநிலை சாதி இந்துக்களுடன் முஸ்லிம்கள் கொண்டிருந்த நல்லுறவு, வியாபாரம், சமூக உறவுகள் குறித்து விரிவாக பேசுகிறது இந்நூல்.

ஆரியம் நிறுவத் துடிக்கும் வருணக் கோட்பாட்டுக்கு எதிராக இஸ்லாம் சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தியதால் சமணர்களும், பௌத்தர் களும் இஸ்லாத்தை ஏற்றனர் என்று கூறும் நூலாசிரியர், தமிழகம் வந்த அரபு முஸ்லீம் வியாபாரிகள் இஸ்லாமிய பிரச்சாரத்தை ஓர் இயக்கமாக நிறுவனமயமாக்காமல் தனிப்பட்ட முறையிலேயே பிரச்சாரம் செய்தனர் என்கிறார்.

தாவா எனும் இஸ்லாமிய அழைப்பு பணி நிறுவன மயப்படுத்தப்பட்டு செயல்படுத்தப் பட்டிருந்தால் இஸ்லாம் இங்கே எத்துணை பெரும் சக்தியாக நிலை கொண்டிருக்கும் என்று எண்ணிப் பார்க்கவே பிரம்மிப்பாக இருக்கிறது.


“தெலுங்கர் ஆட்சியும், தென்பாண்டி வேந்தர் மாட்சியும்” என்ற பதினொன்றாவது அத்தியாயத்தில் இந்து சமுதாய மக்களுடன் முஸ்லிம்கள் கொண்டிருந்த நல்லுறவை அழகுபட விவரிக்கிறார். இந்த பகுதி சமூக நல்லிணக்கத்தை நிலைநாட்ட விரும்புவோர் வாசித்து பரப்ப வேண்டிய பகுதியாகும்.

நிகழ்கால இந்தியாவின் அரசியல் தட்பவெப்பங்களை பார்த்து மிரட்சியுற்று விரக்திவயப்பட்டு விடாமல் தன்னம் பிக்கையுடன் எதிர்காலத்தை எதிர்கொள்ளும் உத்வேகத்தை இந்நூல் வாசிப்பவர்களுக்கு தரும்.

இது நமது மண், நம் நாடு. இங்கே நம் தியாகம் கொட்டப்பட்டிருக்கிறது. இதை எவருக்கும் விட்டுத்தரக்கூடாது என்கிற உணர்வை தட்டி எழுப்புவது இந்நூல்.

அந்த வகையில் அனைவரின் கவனத்தையும் பெற வேண்டும் மேடைப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் வாசிக்க வேண்டிய நூல்.

**- இல்யாஸ் ரியாஜி**


**நூலைப்பெற**

**போன்:**
**7401213394**
**7358278146**
**8148129887**

**விலை ரூ.50/-**

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து




# அல்காய்தா என்றொரு அமைப்பே இல்லை!

## அமெரிக்காவிலிருந்து வெளிவந்த ரகசிய அறிக்கை..!

அன்பார்ந்த வாசகர்களே! ஆப்கானிஸ்தானிலே அமெரிக்கா வாங்கிய அடி, அதை இன்னும் துரத்திக் கொண்டிருக்கிறது. அண்மையிலே அதாவது, ஜூன் 30ம் தேதி, 2023ம் ஆண்டு, அமெரிக்காவில் உள்ள சில ரகசிய ஆவணங்கள் CNN என்ற செய்தி நிறுவனத்தின் கையில் கிடைத்து, அது Associated, French Press என்ற செய்தி நிறுவனம் வழியாக நமது இந்து பத்திரிகையிலே ஒரு நான்கு லைன் செய்தியாக வந்தது.

அதில் Associated press என்னதான் சொல்லி யிருக்கிறது என்பதை, சகோதரர்கள் மூலம் தேடி எடுத்தோம். அது CNN என்ற செய்தி நிறுவனம் எடுத்த ஆவணங்களில் இருந்து கிடைத்தது. அந்த ஆவணத்தின் பெயர், Afghanistan, after action review report. Afghanistan-க்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் பற்றிய, பிற்கால மறுசீராய்வு அறிக்கை.

டிரம்ப்-உம். இப்பொழுது இருக்கின்ற அதிபர் பைடனும் இணைந்துதான் இந்த ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறுவது என்பதை முடிவு செய்தார்கள். இந்த இரண்டு பேரும் செய்த முடிவுகளால் அமெரிக்கா பல்வேறு விதமான, கசப்பான விளைவுகளை சந்திக்க வேண்டியதாகி விட்டது.

டிரம்ப் தன்னை மிகப்பெரிய இஸ்லாத்துக்கு எதிரான எதிரி எனக் காட்டிக் கொண்டவர். ஆனால் ஆப்கானிஸ்தானிலே தாக்கு பிடிக்க முடியாமல், வெளியே வந்து விடுவோம் என்ற முடிவை எடுத்தவர். ஆனால் அந்த முடிவை செயல்படுத்துவதில் அவர் எடுத்த நடவடிக்கைகள் தவறு. அதன் பிறகு வந்த அவர்கள் செப்டம்பர் வரைக்கும் காலம் தாழ்த்திவிட்டு ஆகஸ்டு 15ல், அவர்கள் வெளியே றினார்கள்.

ஆனால், அவர்கள் உண்மையான திட்டம் என்னவென்றால் செப்டம்பர் 2021 வரைக்கும் இழுத்தடித்து, பிறகு ஒரு Negotiated Settlement என்று சொல்லக்கூடிய, ஆப்கானிஸ்தான் நிர்வாகிகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, கீழே விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை என்ற கதியாக, அவர்களிடத்தில் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு, வந்து விடுவது என்று முடிவு செய்திருந்தார்கள்.

ஆனால், தாலிபான்களுடைய அல்லது ஆப்கானிஸ்தானுடைய விரைவான முன்னேற்றம் அவர்களுடைய திட்டங்களை தவிடு பொடியாக்கிவிட்டது. இவர்களுடைய கையாளாக இருந்த அஸ்ரப் கனி என்பவர் கிடைத்த பணத்தை எல்லாம் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டார்.

ஆகவே, முஜாஹிதுகளிடம் வேகமாக காபூலில் இருந்த ஏறத்தாழ 60,000 படை வீரர்களை(மூன்று லட்சம் என்று சொல்லுகிறார்கள்) சரணடைய செய்துவிட்டு, ஓடி விட்டார்கள். இப்பொழுது இந்த அறிக்கை இன்னொரு உண்மையைச் சொல்லுகிறது.

யார் யாரெல்லாம் அன்றைக்கு அந்த விமான நிலையத்திற்கு தப்பிக்க வந்தார்கள் என்று சொன்னால், அதுவரைக்கும் அமெரிக்காவுக்கு ஆள் காட்டியவர்கள் தான்.

அமெரிக்காவினுடைய இந்த Afghanistan, after action review report இவர்களுக்கு என்ன பெயர் வைக்கிறது? என்று சொன்னால், Afghans at the risk. அதாவது, அமெரிக்கா படைகள் அதோடு துணையாக நின்ற ஐரோப்பிய நாடுகளினுடைய நேட்டோ படைகள் எல்லாருமே தோற்றுவிட்டதால், சில ஆப்கானிஸ்தானிகள் தாலிபான்களால் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, தண்டனை கொடுக்கப்படுவார்கள். ஏனென்று சொன்னால், அவர்கள் ஆள்காட்டி வேலையை செய்து கொண்டிருந்தார்கள்.

இவர்களுக்கெல்லாம் இந்த அறிக்கையிலே என்ன பேர் வைக்கிறார்கள்? என்று சொன்னால் Afghans at the risk. அதாவது தங்களுடைய உயிர் ஆபத்தான நிலையில் இருப்பவர்கள். இவர்களுக்கு, Special immigration visa தருவதாக சொன்னார்கள். ஆனால் யாருக்கும் எதையும் கொடுக்க வில்லை. கிடைத்த வரைக்கும் அள்ளிக் கொண்டு போனார்கள்.

அங்கே, அமெரிக்காவில், அமெரிக்க குடியுரிமை தருவேன். நீங்கள் ஆள்காட்டுங்கள் என்று சொன்னார்கள். இவர்கள் அதை நம்பி ஆள் காட்டினார்கள். அங்கே கொண்டு போய் அகதிகள் முகாமிலே வைத்திருக்கிறார்கள்.

அடுத்ததாக இன்னொரு பெரிய உண்மையை, பைடன் சொல்லியிருக்கிறார். "அல்காய்தா என்றொறு அமைப்பு இல்லை."

இந்த அறிக்கையில் அவர் சொல்லும் போது, "இப்பொழுது அல் கொய்தா அமைப்பு ஆப்கானிஸ்தானில் இல்லை என்று எடுத்துக் கொள்ளலாம். அல்லது அல்காய்தா என்றொன்று இல்லவே இல்லை" என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

சகோதரர்களே, மூன்று ஆண்டுகளுக்கு அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், ரம்ஸ் பரோடி என்ற Palestine Chronicle என்ற பத்திரிகை நடத்திக் கொண்டிருப்பவர். அவர் நமது Radiance என்ற ஆங்கிலப் பத்திரிகையில், ஒரு கட்டுரை எழுதுகிறார். "அல்காய்தா உருவானது எப்படி?" இதே தலைப்பில் நான் வைகறை வெளிச்சத்தில் நீளமாக ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறேன்.

ஐநூறு மில்லியன் டாலரை ஒதுக்கி மீடியாக்களில் அல்காய்தா என்ற ஒரு அமைப்பை இவர்கள் கொண்டு வந்தார்கள். அந்த அல்காய்தாவுக்கு பின்லேடன் தலைவர் என்று சொன்னார்கள்.

அதன் பிறகு பின்லேடனை கொலை செய்தார்களா? என்றால் தெரியாது. அவர் எப்பவோ இறந்துவிட்டார். அஹமதாபாத் பாகிஸ்தானில் வைத்து கொலை செய்தோம். ஆனால் அவரை காட்ட மாட்டார்களாம். இப்படி எல்லாம் சொல்லி நம்மை பைத்தியக் காரன் ஆக்கினார்கள்.

இதையெல்லாம் இணைத்துதான் இப்பொழுது அமெரிக்காவினுடைய போர் வீரர் ஒருவர் ஒரு புத்தகத்தை எழுதி இருக்கிறார். Life Wars and dead bodies. நான் ஏற்கனவே இந்த புத்தகத்தை, சொல்லி இதனுடைய ஒரு சுருக்கத்தை, வைகறை வெளிச்சத்திலே போட்டிருக்கிறேன்.

இப்பொழுது அல்காய்தாவை நாங்கள் தான் உருவாக்கினோம் என்று மறைமுகமாக சொல்லியிருக்கிறார்கள். அதனால் தான், "அது இல்லை" என்று அவரால் சொல்ல முடிகிறது. நாம்தானே உருவாக்கினோம். இப்போது முஜாஹிதுகள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றி விட்டதால் அல்காயிதா என்ற பேச்சு வராது. அதனால் would not be there, and it is there and I say, it is not there. "அது இல்லை. நான், உறுதியாக சொல்லுகிறேன்" என்று ஒரு அறிக்கையே வெளியிட்டுள்ளார்கள்..

இப்போது, இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இந்த அல்காய்தாவை வைத்து உலகம் முழுவதும்

உள்ள உளவுத்துறைகள் Islamophobiaவை வளர்ப்பதற்கு பயன்படுத்தியது மட்டுமல்ல. உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்களை சிறையில் வைப்பதற்கும் அவர்கள் சொல்வதற்கு எந்த காரணமும் இருக்காது. அவர்கள் எந்த தீவிரவாத செயலிலே ஈடுபட்டு இருக்கமாட்டார்கள். சாதாரண வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப் பார்கள். அவர்களை அல்காய்தா என்று சொல்லிவிடுவார்கள்.

அல்காய்தா என்று சொன்னவுடன் நமது நீதிமன்றங்கள் எப்படி தீர்ப்புகளை எழுதும் என்று சொன்னால், he has got, international link And he conspired against India or the particular country. Along with international terrorist என்று சொல்வார்கள். சர்வதேச அளவில், இப்பொழுது கூட ஒரு தீர்ப்பு அப்படி வந்திருக்கிறது.


மேலும் அல்காயிதா, சர்வதேச சதி என்று சொன்னவுடன் எந்த ஆதாரமுமில்லாமல் அவர்கள் மீது உடனே யு.ஏ.பி.ஏ. வழக்குகளை போட்டு விடுவார்கள். சமீபத்தில் இரண்டு நபர்கள் மீது யூ.ஏ.பி.ஏ. வழக்கை போட்டார்கள். அந்த இரண்டு நபர்கள் உயிரோடு இல்லை. The dead UAPA என்று டைம்ஸ் ஆப் இந்தியா தலைப்பிட்டு செய்தி வெளியிட்டிருந்தது.

அதேப்போல ISIL என்று சொல்வார்கள். நமது இந்திய உளவுத்துறை டெக்கான் முஜாஹிதுகள் என்றொரு அமைப்பை கைச்சரக்காக வைத்திருகின்றது. எல்லா அமைப்புகளும் பொய்த்து போன பின் அதை பயன்படுத்துவார்கள் போலும்! இப்போது ISKB என்றொரு இயக்கத்தை கண்டுபிடித்துள்ளார்கள்.

யாரையாவது கூட்டிவந்து நீதிமன்றத்திலே நிறுத்தி இவன் அல்காயிதா, ISKB என்று சொன்னால் நமது நீதிபதிகளும் ஆதாரங்கள் ஏதேனும் இருக்கின்றதா? என்றெல்லாம் பார்க்காமல் அப்படியே ரிமாண்ட் செய்து விடுகிறார்கள். பின்பு 20 அல்லது 25 வருடங்கள் கழித்து அவன் நிரபராதி என்று விடுதலை செய்யப்படுகிறான்.

ஆக, இனி வரக்கூடிய காலங்களிலாவது ஆதாரமில்லாமல் யாரையும் ரிமாண்ட் செய்வதை தவிர்க்க வேண்டும். இதுபோல இதுவரை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களை நாம் வெளியில் எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கு இழப்பீடுகளை பெற்றுத்தர வேண்டும். பொய்யான கைது நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அப்போது தான் இந்த நாட்டில் சிறுபான்மை சமூகத்தின் உரிமைகள் உறுதிய செய்யப்பட்டதாக ஆகும் என்பதை நாம் எடுத்து சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

**MGM**


வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

விலை 150/-

**தாலிபானின் பிடியில்**

யுவான்னி ரிட்லி மேலை நாடெங்கும் பிரபல்யமான ஓர் பெண் பத்திரிகையாளர். அவர், பிரிட்டன் நாட்டிலிருந்து வெளிவரும் பல்வேறு பத்திரிகைகளிலும் பணியாற்றியவர். 2001 செப்டம்பர் 11 அன்று அமெரிக்காவின் இரண்டு பெரிய கோபுரங்கள் தகர்க்கப்பட்டன. அவற்றை தகர்த்தவர்கள் ஆப்கானிஸ்தானில் அடைக்கலம் புகுந்துள்ளார்கள் என அமெரிக்கா அறிவித்தது. அதனால் ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுக்கத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் உள்ளே புகுந்து அங்கு நடப்பனவற்றை அறிந்து கட்டுரைகளை எழுதி தனது பெருமையை உயர்த்தி கொள்ள முன்வந்தார் யுவான்னி ரிட்லி. முறையான அனுமதி இல்லாமல் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்தார். ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்து கொண்டிருந்த தாலிபான்களிடம் சிக்கிக் கொண்டார்.

இந்நிகழ்வு அவரது மொத்த வாழ்க்கையையும் புரட்டிப் போட்டது......!

**போன் : 7401213394 / 7358278146 / 8148129887**

# வாசகர்கள் எண்ணங்கள்

Kaliyan Mani
அன்று குஜராத்தில் நடந்ததுதான் இன்று மணிப்பூரிலும் நடக்கிறது.பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை.மானபங்கப்படுத்தப்படுகின் றனர்.பாலியல் வல்லுறவு செய்கின்றனர்.நிர்வாணமாக அழைத்துச் செல்கின்றனர்.இவை எல்லாம் உலகமகா அட்டூழியம்.மத்தியில் ஒன்றிய அரசு இருக்கிறதா இல்லையா? பாஜக நாட்டை இவ்வளவு சீரழிவுக்கு உள்ளாக்கிவிட்டதே!
1w Like Reply Hide

**உதுமானிய கிலாஃபத்தை வீழ்த்த கிளம்பிய சில இளைஞ...**



@MMVV-fl2xy • 1 month ago
இதையெல்லாம் மதரஸாக்களின் பாடப்புத்தகங்களில் இணைக்காதது வருத்தமாக உள்ளது.

**ஸூரா அத்தீன் விளக்கவுரை | பேரா.கே.எம்.இல்யாஸ் ரியாஜி ...**



@RizwanAhmed-xw3oi • 1 month ago
Masha Allah 🖤🖤🖤🖤, அருமையான விளக்கம்.

**பொது சிவில் சட்டம் | நிராகரித்தது Law Commission**



@MohammedAnwaar-kk8eh • 2 weeks ago
ஆட்சி மாற்றம் நிச்சயம் வரும் செய்த கொலைகள், அநீதி, கொடுமைகளுக்கு தண்டனை பெற தயாராகிவிடுங்கள். ஆண்டவனால் உங்கள் ஆணவத்தின் நாட்கள் எண்ணப்படுகிறது

Vaigarai Velicham Official
@VAIGARAIVELICHAMOFFICIAL 4.16K subscribers 608 videos
More about this channel >
https://www.youtube.com/@VAIGARAIVELICHAMOFFICIAL/featured

VJkumar Vjk Kumar
சிறந்த அறிவுரை சிறந்த பதிவு
1w Like Reply Hide 2

Tiger An Tiger
அண்ணன் MGM அவர்கள் மீது ஏக இறைவனின் சாந்தியும் உண்டாகடும்
1d Like Reply Message Hide

**ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு தடையா? | கிழியும் பாஸிச பா.ஜ...**



@amanullahibrahim2085 • 1 month ago
இன்னும் சில தினங்களில் மாற்றம் வரும் இந்த மதிகெட்ட மதவெறிபிடித்த வந்தேரி பாசிச கும்பலுக்கு மக்கள் ஒன்றுபட்டு சாவுமணி அடிப்பார்கள். அப்போது இந்தியாவுக்கே நீதி கிடைக்கும் இது உறுதி ஆமீன் ஆமீன் ஆமீன்

**சவுதியை மிரட்டும் அமெரிக்கா | சவுதியை தொடர்புகொண்ட இ...**



@RizwanAhmed-xw3oi • 1 month ago
Masha Allah,, அற்புதமான தகவல்கள்.. 🖤

**பொது சிவில் சட்டம் | நிராகரித்தது Law Commission**



@bmz8018 • 3 weeks ago
அருமையான நெத்தியடி விளக்கம்...வாழ்த்துக்கள்.BMZ .
1

**ஈத் மிலன் - பெருநாள் சந்திப்பு - சமூக நல்லிணக்கக் கூட்டம்!...**

Post

@mushthaqumari5998 • 3 days ago
அல்லா தங்களுக்கு அருள் தங்களுடைய மார்க்கப் பணி மென்மேலும் சிறந்து வளர அல்லா துணை புரிவானாக ஆமீன்

Vaigarai Velicham Official
4.1K likes • 20K followers
https://www.facebook.com/vaigaraivelichamofficial

சிறப்பு கட்டுரை



# மணிப்பூர் நிகழ்வுகள்...!


## இதற்கு தீர்வுதான் என்ன...?

சகோதரர்களே! மணிப்பூர் எரிந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. ஆங்கில நாளிதழ் ஹிந்து, *Ground zero report* என்றொன்றை மிகவும் ஆழமாக ஆய்வு செய்து போட்டிருக்கிறது. அது அத்தனையும் இங்கே எடுத்துச் சொல்வது தேவையில்லை என்பது என்னுடைய முடிவு. காரணம் என்னவென்று சொன்னால், எல்லாமே திரும்பத் திரும்ப, அந்த பழைய கதையை சொல்வதாகத்தான் இருக்கிறது. “கூட்டிட்டு போனான், கற்பழித்தான். அந்த கற்பழிப்பு பல்வேறு தடங்களாக நடந்தது. பிறகு அந்த பெண்களை, எரித்துப் போட்டான்.” இப்படி அங்கே நடந்து கொண்டிருக்கின்ற கொந்தளிப்பை விதவிதமாக விவரிப்பது. வேறு, வேறு கோணங்களில் இருந்து அதை பார்ப்பது என்று தான் ஆய்வுகள் நடக்கின்றது.

இந்த மணிப்பூர் இன்றுதான் எரிகிறதா? என்று கேட்டால், இல்லை. மிக நீண்ட நெடுங்காலமாக எரிந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற இனப்படுகொலைகளை இன்றைக்கு, அதை முன்னின்று செய்கின்ற சங்கபரிவாரத்தினர், அதனால் உற்சாகமூட்டப்பட்ட மாநில காவல்துறை, இவையெல்லாம் இங்கே மட்டும்தான் செய்திருக்கிறதா? என்று கேட்டால், இல்லை. இந்தியாவின் பல்வேறு சம்பவங்களை நாம் குறிப்பிட முடியும். நெல்லி படுகொலைகள், பாகல்பூர் படுகொலைகள், பம்பாய் படுகொலைகள், குஜராத் படுகொலைகள், சாரன்பூர் படுகொலைகள், முசாபர் நகர் படுகொலைகள், இப்படி நிறையவே நாம் சொல்ல முடியும். இதற்கெல்லாம் என்ன தீர்வு? இந்தியாவில் தீர்வு இருக்கிறதா? இல்லையா?

ஒன்று, ஜாதிய ஏற்றத்தாழ்வுகள் இதற்கு மிக முக்கியமான காரணம். அதற்கு, ஆயிரத்தெட்டு சட்டங்களை கொண்டு வந்த பிறகும் அந்த கொடுமைகளில் இருந்து, அதற்கு இலக்காகப்படுபவர்களை நாம் காப்பாற்ற முடியவில்லை. இதற்காக, அரசாங்கம் எடுத்த முடிவுகளை விட, நடவடிக்கைகளை விட, சில மனித உரிமை அமைப்புகள் எடுத்த நடவடிக்கைகள், மிகவும் அழுத்தமானவை, ஆழமானவை.

குறிப்பாக தீர்வைத் தேடி ஒரு *case study* என்று நாம் எடுத்துக் கொண்டால், நம்முடைய நோக்கம் தீர்வைத் தேடித்தானே தவிர, அங்கே இன்னும் என்ன நடந்தது? அந்தப் பெண்கள்




எப்படி எல்லாம் மானபங்கப்படுத்தப் பட்டார்கள்? என்பதை விரித்துரைத்து கொண்டிருப்பதற்கும், ஒப்பாரி வைப்பதற்கும் உள்ள நேரம் அல்ல. ஒவ்வொரு இந்திய குடிமகனும் இதைப் பற்றி சிந்தித்தாக வேண்டும். இது போன்ற நடவடிக்கைகள், இது போன்ற கூட்டுக் கொலைகள், இது போன்ற *Crime against humanity,* மனித இனத்துக்கு எதிரான கொடுமைகள் நடக்காமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

இதற்காக ஒரு *Case ready*-ஐ நாம் எடுத்துக் கொண்டால் குஜராத் 2002 இனப்படு கொலைகளை எடுத்துக் கொள்ளலாம். நான் ஏன் அதை சொல்கிறேன் என்றால் அது, இன்றைக்கு 23 ஆண்டுகளுக்கு பிறகும், அன்றைக்கு முதலமைச்சராக இருந்து அந்த இனப்படு கொலைக்கு தலைமை ஏற்றவரை துரத்திக் கொண்டிருக்கிறது.

அதில் சிறுபான்மையினர், இன்றைக்கு மணிப்பூரிலே கஷ்டப்படுபவர்களே அவர்கள்தான். இவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் மீது ஒரு பெரிய தாக்குதல் குஜராத்தில் நடக்கவிருக்கிறது என்பதை ஆய்வு செய்து, தன்னுடைய பத்திரிக்கையில் *Communism Compact* என்ற பத்திரிக்கையில் எழுதுகிறார். அதை அரசு அதிகாரிகளுக்கெல்லாம் அனுப்புகிறார் டீஸ்டா செட்டல்வாட். யாரும், எந்த நடவடிக்கையும், எடுக்கவில்லை.

இன்றைக்கு இருக்கின்ற பிரதம அமைச்சர், அங்கே முதலமைச்சராக பதவியேற்று தன் கையில் எல்லா அதிகாரத்தையும் கைப்பற்றி வைத்துக் கொண்டு அதற்காக முஸ்லிம்களை “களை” எடுத்துக் கொண்டிருக்கும் போது, “ஒரு தலையங்கத்தை சிறப்பாக எழுதிய நான், இவ்வளவு கட்டுரைகளை எழுதி விட்டேன். இவ்வளவு ஆய்வுகளை, இவ்வளவு ஆதாரங் களை தந்து விட்டேன். இருந்தாலும் யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விரை விலேயே அங்கே ஒரு இனப்படுகொலை நடக்கப் போகிறது” என்பதை எழுதினார். அரசாங்கத்துக்கும் தெரிவித்தார். எந்த அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை. கடைசியில் அவர்கள் நினைத்தபடி சில சம்பவங்களை நிகழ்த்திவிட்டு கோத்ரா ரயில் எரிப்பு சம்பவமும் அரங்கேறியது.

இன்றைக்கு என்னவெல்லாம் மீடியாக்கள் மூலமாக பொய்யை பரப்ப முடியுமோ, மணிப்பூரில் அதையெல்லாம் பரப்பியிருக் கிறார்கள். ஒரு குக்கி இன பெண்ணையும், ஒரு மித்தாய் இன பெண்ணையும் இப்படி செய்துவிட்டார்கள். அப்படி, இப்படி எல்லாம் சொல்லி போலியாகத்தான் இதை ஆரம்பித்திருக்கிறார்கள். அதே பாணியில்தான், கோத்ரா இனப்படுகொலை சம்பவமும் அரங்கேறியது. இரயில் நிலையத்தில் ஒரு பொண்ணை, இந்து பெண்ணை அவமானப் படுத்திவிட்டார்கள் என்று பொய்யை கட்டி விட்டுத்தான் அந்த சம்பவங்களை நிகழ்த்தினார்கள்.

பின்னர், இதையெல்லாம் கள ஆய்வு செய்து டீஸ்டா ஒரு பெரிய அறிக்கையாக தயார் செய்து, ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட நீதிமன்றங்களில் நிற்கக்கூடிய சாட்சியங்களை உருவாக்கினார். இதுபோன்ற *Human rights group*-கள்தான், இன்றைக்கும் உதவ முன்வருகிறார்கள். அதிலும் *Citizens for Justice and Peace, CJP* என்று, அழைப்பார்கள். இது ஒன்றும், பெரிய அளவில், *Recognise* செய்யப்பட்ட அமைப்பு அல்ல. அது எதற்காக அமைக்கப்பட்டது என்றால் குஜராத்துக்காக அமைக்கப்பட்டது.

அதில் அவர் ஒரு சவாலை முன்வைத்து செயல்படுகின்றார். இந்தியாவில் உண்மை யிலேயே, இந்திய சட்டங்கள், மதம் இல்லாமல், மதசார்பற்று பாயுமா? பாயாதா? அது ஒரு மதத்துக்கு சாதகமாகவும், இன்னொரு மதத்துக்கும், சிறுபான்மை சமுதாயத்துக்கும்

எதிராகவும் தான் இருக்குமா? என்பதை இங்கே முடிவு செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், அவர் களத்தில் இறங்குகிறார். ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட, நீதிமன்றங்களில் நிற்கக்கூடிய சாட்சியங்களை தயார் செய்து குஜராத் நீதிமன்றத்தில் வழக்கை நடத்தினார். ஆனால் அந்த குஜராத் நீதிமன்றம் அவற்றையெல்லாம் நிராகரிக்கக்கூடிய வகையில் நடந்து கொள்கின்றது. அதுமட்டுமல்லாமல், அங்கே, கற்பழிக்கப்பட்டு, உயிர் பிழைத்த பெண்களை கொண்டு வந்து கூண்டிலே நிறுத்திவிட்டு மிகவும் விகாரமான கேள்விகளை எல்லாம் வழக்கறிஞர்களை விட்டு கேட்க வைத்தார்கள்.

"எப்படி கற்பழித்தான்? முதலில் என்ன செய்தான்? எப்படி துணியை கழட்டினான்?" இப்படி எல்லாம் கேட்டார்கள். சில சகோதரிகள் அழுதார்கள். "எங்களை விட்டிருங்க. நாங்க ஒரு தடவை அவமானப்பட்டாச்சு. நீதிமன்றத்தில் தினமும் நாங்கள் கற்பழிக்கப் படுவதாக எங்களுக்கு தோன்றுகிறது." என்று அழுதார்கள்.

ஏனென்று சொன்னால் ஒவ்வொரு முறையும் மேற்சொன்னதைப் போன்ற கேள்விகளையே கேட்டார்கள். அப்படியென்றால் அந்த நீதிமன்றத்திலே நீதி கிடைக்காது என்று 1800 வழக்குகளை உச்சநீதிமன்றத்துக்கு கொண்டு சென்று, குஜராத் மாநிலத்திலிருந்து அந்த வழக்குகளை மாற்ற வேண்டும் என்று, மராட்டிய மாநிலத்துக்கு மாற்றி, இன்றைக்கு இருக்கின்ற பிரதம அமைச்சர் குஜராத்தில் முதலமைச்சராக இருந்தபோது அந்த வழக்குகளை அவர் நடத்தி, ஐநூறுக்கும் மேற்பட்ட பாஸிஸ்டுகளுக்கு தண்டனை வாங்கி கொடுத்தார். அதில் ஒரு மந்திரியும் உண்டு. பெண் மந்திரியும் உண்டு. அவருடைய அமைச்சரவைக்கு கீழே இருந்தவர்.

அவர் women and child development அமைச்சர். ஆனால் பெண்கள் கற்பழிப்புகளை மிகவும் லாவகமாக வேடிக்கை பார்த்தவர். அவர் அந்த இடத்திலே நின்றார் என்றெல்லாம் சொல்லி 29 வருடம் தண்டனை. இது ஒரு மிக மகத்தான பெரிய சாதனை.

Gulbarg Society-இல் நடந்ததும் இதே தான். அப்பொழுது இருந்த முதலமைச்சர் மோடிக்கு, போன் போகுது. அவர் போன் எடுக்கல. போலிஸ் வருமென்று எதிர்பார்த்தால், கும்பல்களே வந்து இறங்கி அங்கே கொலைகளைச் செய்து கொண்டிருந்தனர். அந்த சாட்சியங்களை எல்லாம் திரட்டி நீதிமன்றங்களுக்கு கொண்டு சென்று, அவர் தண்டிக்கப்படக்கூடிய நேரத்தில் என்ன ஆகிறது? என்று சொன்னால், உச்சநீதிமன்றம் காப்பாற்றி விடுகிறது. அப்போதும் அதை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கு முயற்சி செய்தார் டீஸ்டா.

ஆனால் உச்சநீதிமன்றம், "இங்க கொடு. வழக்கை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று வாங்கி, SIT-ன்னு ஒரு குழுவை போட்டு, கடைசியில் அதை ஒன்றும் இல்லாமல் ஆக்கி, பிறகு அவர் எடுத்த இந்த முயற்சிகளை எல்லாம் மேற்கோள் காட்டியே அவர் சிறையில் இருந்தார்.

இன்றைக்கு மணிப்பூர் பெண்கள் இரண்டு பேர் கற்பழிக்கப்பட்டதைவிட கோரமாக கற்பழிக்கப்பட்டவர் பில்கிஸ் பானு. உங்களுடைய கவனம் இங்கே வரவேண்டும் என்பது என்னுடைய நோக்கம் இல்லை, ஆனால் இதற்கெல்லாம் தீர்வு என்ன? எனக்கு தெரிந்து ஒரு Case Study-ஐ எடுத்துக் கொண்டாலும், இந்த அம்மா எடுத்த முயற்சி மிகப்பெரிய முயற்சி. அரசாங்கம் எடுத்திருக்க வேண்டிய இந்த முயற்சியை டீஸ்டா எடுத்திருந்தார். குஜராத் கலவரங்கள் நடந்து அதன் பிறகு பத்தாண்டுகள் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசாங்கமும் அதைப்பற்றி பெரிதாக கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. டீஸ்டா ஓடி, ஓடி, சாட்சியங்களை கொண்டு வந்து, ஒரு நீதிமன்றத்திலிருந்து, இன்னொரு நீதி மன்றத்திற்கு என போராடினார்.

ஜாகிரா ஷேக் என்கிற சகோதரியோடு அவள் குடும்பத்தை சேர்ந்த 14 பேர் எரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். அந்த பெண் சாட்சி சொல்ல வந்தாள். அவளை சாட்சியமாக மாற்றி டீஸ்டாவுக்கு வாரண்ட். பின்னர் பெயில். இப்படி எல்லாம் அந்த காலத்திலேயே கஷ்டப்படுத்தினார்கள். இப்போது இந்த வழக்கில் தான் அவருக்கு நிரந்தர பெயில் கிடைத்தது. அதுகுறித்து தனி வீடியோ பதிவொன்றை நமது யூடியூப் பக்கத்தில் வெளியிட்டுள்ளோம்.

பில்கிஸ் பானு வழக்கில், அவரை 15 முறை திரும்பத் திரும்ப கற்பழித்தார்கள். அந்த குற்றவாளிகளை எல்லாம் கண்டுபிடித்து அவர்களுக்கு மராட்டிய நீதிமன்றத்தில் தண்டனை வாங்கி கொடுத்தார். அவர்கள் அனைவரும் மேல் ஜாதியினர் என்று சொல்லப்

படுகிறது. தண்டனை வழங்கிய அந்த நீதிபதி, நமது தமிழ்நாட்டில் தலைமை நீதிபதியாக பதவி வகித்தவர். அவருக்கு உச்ச நீதிமன்றத்தில் பதவி வழங்காமல் அவமானப்படுத்தினார்கள்.

மூன்று நீதிபதிகள் இருக்கக்கூடிய ஒரு மாநிலத்திற்கு மாற்றி அவரை அவமானப் படுத்தியதால், அவர் பதவியை ராஜினாமா செய்தார். உடனே சி.பி.ஐ ரெய்டு அவர் மீது பாய்ந்தது. அதிலும் அவர் கலங்கமற்றவர் என்று தன்னை நிரூபித்து தமிழ்நாடு தான் தனக்கு பாதுகாப்பு என்று கருதி இங்கேயே இருந்து விட்டார்.

இப்போது அந்த குற்றவாளிகள் வெளியில் இருக்கின்றார்கள். அவர்கள் வெளியில் வந்ததற்கு உறுதுணையாக இருந்தது உச்சநீதிமன்றம். இந்த வழக்குகள் எல்லாம் நமக்கு என்ன சொல்கிறதென்றால், இந்தியாவில் மனித உரிமைகள் அமைப்புகள் மட்டும் தான், இந்த வழக்குகளை எடுத்து, தேவையான ஆதாரங்களை தயாரித்து, குற்றவாளிகளை கூண்டிலே நிறுத்தி, குறைஞ்சபட்சம் ஒரு பத்து, பதினோரு மாசமாவது தண்டனை வாங்கி கொடுத்து ஜெயிலில் இருக்கக்கூடிய சூழலை உருவாக்க முடிந்தது.

அரசு என்ன செய்தது? குற்றவாளிகளை வெளியில் சுதந்திரமாக சுற்றவிட்டது. ஆக ஒரு அரசாங்கம் செய்ய வேண்டியதை எல்லாம் இந்த மனித உரிமைகள் அமைப்புகள் செய்தது. இதனால் டீஸ்டா செட்டல்வாட்டை 70 நாட்கள் ஜெயிலில் வைத்து பின்னர் அவருடைய எல்லா செயல்பாடுகளையும் முடக்க நினைக்கிறார்கள். ஆனால் அந்த சகோதரி இதெற்கெல்லாம் அஞ்சுபவரல்ல. அவள் எப்போதும் நீதிக்காக போராடுபவர். குஜராத் படுகொலை வழக்கை பொருத்தவரை டீஸ்டா செட்டல்வாட் முஸ்லிம்களுக்காகத்தான் போராடினர். இது எத்துனை முஸ்லிம்களுக்கு தெரியும் என்று தெரியவில்லை. நாங்கள் தான் 16 வருடங்களாக அவருக்காக எழுதி வருகின்றோம். அவருக்காக வீடியோக்களை பேசி வருகின்றோம்.

இப்போது மணிப்பூர் குறித்து நிறைய பேசுகிறார்கள். சில சகோதரிகள் கடுமையான வார்த்தைகளில் சிறப்பாக பேசுகிறார்கள். ஆனால் என்ன செய்ய வேண்டுமென்றால், நமக்குள் ஒரு டீஸ்டா செட்டல்வாட்டை உருவாக்கி, அந்த குற்றவாளிகளையும், ஏற்கனவே நிறைய துசுபடித்த முதல் தகவல் அறிக்கைகள் இருக்கின்றன. அதையெல்லாம் எடுத்து அதில் உண்மையான குற்றவாளிகள் தான் தண்டிக்கப்பட்டுள்ளனரா? என்பதை யெல்லாம் ஆய்வு செய்து, ஒரு தெளிவான சாட்சியங்களை சேகரித்து பா.ஜ.க ஆட்சியில் இல்லாத ஒரு மாநிலத்திற்கு கொண்டு வரவேண்டும். இது பெரிய வேலை. ஆனால் செய்து காட்ட முடியும். அதைத்தான் டீஸ்டா செட்டல்வாட் நமக்கு உணர்த்துகிறார். இன்றைக்கு உள்துறை அமைச்சராக இருந்தவர் அன்றைக்கு சிறையில் இருந்தாரென்றால், அதற்கு காரணம் ரானா அய்யூப் என்ற சகோதரி மேற்கொண்ட புலனாய்வு அறிக்கைதான் காரணம்.

இவர்கலெல்லாம் சாதித்த அளவிற்கு கூட இன்றைக்கு நீட்டி முழங்குபவர்கள், ஒப்பாரி வைப்பவர்கள், அது எப்படியெல்லாம் நடந்தது என்று ஆய்வு செய்பவர்களால் சாதிக்க முடியவில்லை. ஒரு பரபரப்பு செய்தியாகவே அது மடிந்து போய் விடுகின்றது. இன்னும் ஆயிரம் மணிப்பூர் சம்பவங்கள் நடக்கின்றது அவ்வளவுதான்.

ஆக, இதுபோன்ற முறையான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தான் மணிப்பூர் போன்ற பிரச்சனைகளுக்கு நமக்கு தீர்வு கிடைக்கும். அதிலும் உச்சநீதிமன்றம் நியாயத்தின் பக்கம் நின்றால்! ஏனென்றால் நான் ஏற்கனவே இந்த உச்சநீதிமன்ற நீதிபதிகளை குறித்து எழுதியிருக்கின்றேன். இவர்கள் எந்தளவிற்கு ஆளும் பாசிச பா.ஜ.க. அரசிற்கு பயந்து தீர்ப்புகளை வழங்கியுள்ளார்கள் என்று.

இப்போது எதிர்கட்சிகளெல்லாம் சேர்ந்து ஒரு தீர்வை முன்வைக்கின்றது. அது பிரதமர் வாய் திறக்க வேண்டுமாம். அவர் வாய் திறந்தால் எல்லாம் மாறிவிடுமா? இழந்த உயிர்கள் எல்லாம் திரும்ப வந்துவிடுமா? அவர் குஜராத்திலும் தான் வாய் திறக்காமல் இருந்தார். அவர் வாய் திறந்தால் இன்னும் அதிகமாக இழப்புகள் நேரிடுமோ என்ற பயம் தான் பத்திரிகையாளர்களிடம் எல்லாம் இருக்கின்றது.

ஆக, டீஸ்டா செட்டல்வாட் குஜராத் வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தந்ததை ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும். ஏனென்றால் பாசிசத்திற்கு எதிராக வெற்றிப் பெற்ற ஒரே வரலாறு டீஸ்டாவுக்கு மட்டும் தான் உண்டு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**MGM**




## இவன் முஸ்லிமா? பொய்களை பரப்பிய பாஸிச ஊடகம்





# மணிப்பூர் பற்றி பொய் செய்திகளை பரப்பிய ANI NEWS

## அன்றே எச்சரித்த வைகறை வெளிச்சம்

காந்தி கொலையில் தொடங்கி நாடாளுமன்ற தாக்குதல், மும்பை தாக்குதல் இப்படி நாட்டில் நடக்கக்கூடிய மிகப்பெரிய நிகழ்வுக்கெல்லாம் உடனேயே ஒரு முஸ்லிமுடைய பெயரைச் சொல்லி முஸ்லிம்களுடைய சொத்துக்களை நாசமாக்குவது, சில முஸ்லிம்களை கொலை செய்வது என்பது இன்றைய பாசிஸ்டுகளினுடைய நீண்ட, நெடிய கால தந்திரம். அதே போல இப்பொழுதும் ஒன்றை பரப்பினார்கள். அது ஒரு முஸ்லிமும் சேர்ந்துதான் மணிப்பூரில் அந்த பெண்களை துன்புறுத்தினார் என்பது போல ஒரு செய்தியை பரப்பினார்கள்.

இந்த செய்தி எங்கிருந்து கிடைத்தது? என்று சொன்னால், ANI என்ற செய்தி நிறுவனத்திலிருந்து கிடைத்ததாக நமக்கு சொன்னார்கள். இந்த ANI பற்றி ஒரு சிறப்பு கட்டுரையை நாங்கள் மார்ச் 2023ல் வைகறை வெளிச்சத்தில் ஒரு அட்டைப்பட கட்டுரையாக போட்டிருக்கின்றோம்.

ANI நிறுவனம் என்பது முஸ்லிம்களுக்கு எதிராகவும், சீனாவுக்கு எதிராகவும், பாகிஸ்தானுக்கு எதிராகவும் செய்திகளை பரப்புகின்ற ஒரு நிறுவனம். இந்த ANI news-ஐ எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். அதிலும் குறிப்பாக, print, business standard, digital news போன்றவர்கள், கண்ணை பொத்திக்கொண்டு ANI NEWS கொடுக்கக்கூடிய செய்தியை போடுகிறார்கள்..




A previous report revealed that IFFRAS had officially dissovled in 2014.

ஆனால் இந்த செய்தி நிறுவனம் பரப்புவது அத்தனையும் பொய். இதனை European Union, Disinformation lab, என்று நம் Alt News ஜுபைர் செய்வது போன்று, செய்திகளினுடைய அடி ஆழம் வரை சென்று ஆதாரத்தை நோண்டிப் பார்க்கிற ஒரு நிறுவனம்.

இது பல உண்மைகளைக் கண்டுபிடித்து, கொண்டு வந்ததைத்தான், வைகறை வெளிச்சம் மார்ச் 2023இல் பொய்களை செய்திகளாக, என்று நாங்கள் போட்டோம். ANI news, முழுக்க, முழுக்க பாசிஸ்டுகளுடைய கைகளில் உள்ளது. பாசிஸ்டுகளுடைய உதவியோடு நடத்தப்படுவது. இது அடிக்கடி ஒரு செய்தி நிறுவனத்தைச் சொல்லும். அந்தச் செய்தி நிறுவனம் என்னவென்றால், EP today, U chronicles. இப்படி இரண்டு ஆதாரத்தைச் சொல்லி நிறைய பொய்களைச் சொல்லுவார்கள்.


இந்த EP today என்ற செய்தி நிறுவனம் எப்போதோ கலைக்கப்பட்டுவிட்ட ஒரு செய்தி நிறுவனம். அப்படி ஒன்று இல்லை. அதேபோல, U chronicle செய்தி நிறுவனமும் இல்லை. இவர்கள் அவையெல்லாம் உயிரோடு இருப்பதாக காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்தது இவர்களுடைய செய்திக்கு, இவர்கள் காட்டுகின்ற இன்னொரு ஆதாரம் என்னவென்று சொன்னால், Think Tang என்று சொல்லக்கூடிய சிந்தனையாளர்கள் குழுமம் என்று சொல்வது வழக்கம். இந்த சிந்தனையாளர்கள் குழுக்கள் யார், யார் என்பதை European Union Disinformation lab வெளிக்கோண்டு வந்தார்கள். இவர்கள் சொல்லக்கூடிய ஆதாரங்களில் பார்த்தால் அப்படி ஒரு சிந்தனை குழுக்களே இல்லை.

சில நேரங்களில் இவர்கள் பேராசிரியர்கள் எல்லாம் சேர்ந்து, முஸ்லிம் சகோதரத்துவம் என்ற இயக்கத்தைப் பற்றி, இவர்கள் ஒரு பெரிய கூட்டம் நடந்ததாகவும், அதில் அவர்கள் எல்லா செய்தியையும் கொண்டு வந்ததாகவும், ஒரு பொய்யை கட்டிவிட்டார்கள். அது யார் சொன்னதென்று கேட்டால், Think Tank சொன்னதென்று சொன்னார்கள்.

European Union Disinformation lab வந்து அதை ஆராய்ச்சி செய்து பார்த்தபோது, இவர்கள் சொல்லக்கூடிய Thing Tank, 2014ல் கலைக்கப் பட்டது. ஆனால் 2020, 2023 வரைக்கும் இவர்கள் இந்த பொய்யை பரப்பிக் கொண்டிருந்தார்கள்.

உடனே இவர்கள் IFRAS என்றொன்றை சொல்லுவார்கள். International forum for rights and securities. அதாவது, உலகளாவிய ஒரு தளம். இது எதற்காக என்றால் உரிமைகளுக்கும், பாதுகாப்புகளுக்காகவும் உள்ளது. இது 2012ல் கலைக்கப்பட்ட ஒரு நிறுவனம். ஆனால், 2023 வரைக்கும், இந்த IFRAS-ஐ சொல்லியே இவர்கள் செய்திகளை போடுகிறார்கள். பல பத்திரிக்கைகள் இதை நமக்கு எடுத்து சொல்லுகின்றன.

இவர்கள் அடுத்து என்ன சொல்வார்கள் என்றால், அனைத்திற்கும் ஐரோப்பாவே மூலம்




The report shows how bad sourcesgain legitimacy.

(Source: EUDisinfoLab)

என்று காட்டுவார்கள். அதில் 2020 ஜனவரி 29ல் ஒரு கூட்டம் நடந்தது. அதில் நான்கு பேராசிரியர்கள் உரையாற்றினார்கள் என்றும், அதில், இஹ்வானுல் முஸ்லிமின் இயக்கம் உலகம் முழுவதும் பரவிவிட்டது. அதை தடுக்க வேண்டும் என்று அவர்கள் கருத்து சொன்னதாகவும். எழுபது பேர், அந்த நான்கு பேராசிரியர்களுடைய உரையை கேட்டதாகவும் ஒரு செய்தியை பரப்பியது.

ஆனால், அப்படி எழுபது பேச்சாளரும் இல்லை. இப்படி ஒரு நாள்., இவர்கள் சொன்ன பெயரில், நான்கு பேராசிரியர்களும் இல்லை. இதையும் கண்டுபிடித்து 2014ல் ஒரு அறிக்கை, 2020ல் ஒரு அறிக்கை, European Union disinformation lab வெளியிட்டு இருக்கிறது. அதைத்தான் நாங்கள் வைகறையிலேயும் போட்டிருக்கின்றோம்.

இவர்கள் அந்த ஐரோப்பிய நாடுகளிடையே இப்படி பொய்யை பரப்புவதற்கும், மக்களை கொலை செய்வதற்கும், நாடுகளை கபளிகரப் படுத்துவதற்கும், இந்த செய்தி நிறுவனம் பயன் படுகிறதே, நீங்கள் அதை ஏன் தடுக்கக்கூடாது? என்று கேட்டால், அவர்கள் எங்களிடத்திலே அதற்கான சட்டங்கள் இல்லை என்கிறார்கள்.

ஆனால், United Nations உடைய chart-ல், பொய்யை பரப்பக்கூடிய எந்த செய்தி நிறுவனத்தையும் தண்டிக்கலாம் என்று இருக்கிறதே என்று சொன்னால், அவர்கள், நாங்கள் அந்த அளவுக்கு போவதற்கு எங்களுக்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்று சொல்லு கிறார்கள். ஆனால் அதுவும் பொய். இப்போது, EU disinformation lab இவர்கள் எப்போதெல்லாம், பொய்யை சொல்வார்கள் என்பதை கண்டுபிடித்து சொல்கிறது.. அப்படி அதை கண்டுபிடித்து சொல்லும் போது, ஒரு முஸ்லிமும், ஒரு கம்யூனிஸ்டும் சேர்ந்துதான் அந்த கொடூரத்தை (மணிப்பூர் பெண்கள் சம்பவம்) செய்தார்கள் என்று சொன்னவுடன், உடனே அல்ட் நியூஸ் ஜுபைரும், இன்னும் பலரும் உண்மையை கண்டுபிடித்து வெளியிட்டார்கள்.

EU, disinformation lab-உம் அதை சொல்லியது. உடனே மன்னிப்பு கேட்டுவிட்டார்கள். ஏனென்றால் பின்னால் வரக்கூடிய விளைவுகளை கண்டு பயந்துவிட்டார்கள். ஆனால் 12 மணி நேரம் அந்த பொய் பரப்பப்பட்டு முஸ்லிம்கள் இழப்புகளுக்கு ஆளானார்கள். கம்யூனிஸ்டுகள் எந்தளவிற்கு இழப்புகளுக்கு ஆளானார்கள் என்பது தெரியவில்லை. இந்த ANI NEWS செய்தியை பயன்படுத்திய பல தளங்கள், குறிப்பாக புதிய தலைமுறை போன்ற செய்தி நிறுவனங்கள் எல்லாம் இப்போது மன்னிப்பு கேட்டு என்ன பயன்?

இங்கே தமிழ்நாட்டில் நாம் மக்கள் மத்தியில் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தி வைத்துள்ளோம். நாடாளுமன்ற தாக்குதல்கள் குறித்த அருந்ததி ராய் அவர்களுடைய ஆய்வு, PUDR - People Union for

*Democratic Rights*-னுடைய ஆய்வுகளையெல்லாம் நாம் புத்தகங்களாக தந்துள்ளோம். இவையெல்லாம் அதிகளவில் மக்கள் மத்தியில் சென்று சேர்ந்துள்ளது. பலமுறை தொலைக்காட்சி விவாதங்களும் நடந்துள்ளது.

அதேப்போல கர்கரேயை கொலை செய்தது யார்? இப்போது ஐந்தாவது பதிப்பை கொண்டு வந்துள்ளோம். அதில் பல அதிர்ச்சியை தரக்கூடிய தகவல்கள் இருக்கின்றன. கர்கரேயின் கழுத்துகளில் குண்டுகளை பாய்ச்சியது ஒரு காவல்துறை அதிகாரி என்பதை எஸ்.எம்.முஸ்ரிப் அவர்கள் கண்டுபிடித்து, அந்த காவலரின் பேரையும் போட்டு அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார்.

*IAS, IPS Officers Association* என்று சொல்லக் கூடிய அமைப்பிற்கும் கடிதம் எழுதியிருக்கின்றார். ஆனால் இதுவரைக்கும் எந்த பதிலுமில்லை. இவை அனைத்தையும் இணைத்து கர்கரேயை கொலை செய்தது யார் என்ற நூலை கொண்டு வந்துள்ளோம். இவையெல்லாம் மக்கள் மன்றத்திற்கு கொண்டு வந்ததற்கு காரணம்; “நாம் நீதிமன்றங்களில் தொடுத்த பல வழக்குகளை நீதிமன்றங்கள் புறக்கணித்ததால் தான்.”

இந்த வழக்கில் நீதிமன்றத்தில் என்ன நடந்தது என்பதையும் எஸ்.எம்.முஸ்ரிப் அவர்கள் ஒரு நூலாக தந்துள்ளார். அதையும் தமிழில், 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்? என்ற தலைப்பில் கொண்டு வந்தோம். அதேப்போல பல சகோதர, சகோதரிகள் அடிக்கடி தொலைக்காட்சி விவாதங்களில் பயன்படுத்தும் நூல், “இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு”. இதுவும் நாம் கொண்டு வந்ததுதான்.


இப்போது, பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப் பட்டார்கள் என்ற நூலை கொண்டு வந்துள்ளோம். அதுவும் இரண்டாவது பதிப்பை தாண்டி சென்று கொண்டிருகின்றது.

இப்படி நாம் தொடர்ந்து ஏற்படுத்தி வந்த விழிப்புணர்வு தான், தமிழ்நாட்டில் பாசிஸ்டு களின் பொய்கள் எடுபடாமல் போனதற்கு காரணமாக அமைகின்றது. இந்த பாஸிஸ்டுகளின் கொடூரங்களெல்லாம் வட இந்தியாவோடு நிற்கட்டும். தமிழகத்தில் இவர்களை காலூன்ற செய்து விடக்கூடாது. இல்லையென்றால் இவர்கள் நமக்குள்ளாகவே குழப்பத்தை ஏற்படுத்தி விடுவார்கள்.

இந்த பாஸிஸ்டுகளுக்கு எதிராக நிற்பவர்களோடு நாமும் கைகோர்த்து நிற்கவேண்டும். பாஸிஸ்டுகளுக்கு ஆதரவாக நிற்பவர்களுக்கு தேர்தலில் மரண அடி கொடுத்து விரட்ட வேண்டும். இன்ஷா அல்லாஹ்.

**MGM**


இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




விலை ரூ.30/-

வேர்கள் வெளியீட்டகம்

மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்.......

– இந்த நூலிலிருந்து

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் – பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்


போன் : 7401213394 / 7358278146 / 8148129887

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west's Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**






இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம், முதல் நாள் தொட்டே நடைபெற்று வருகின்றது. இதற்கு அந்தந்த காலத்தில் கிடைக்கும் அத்தனை ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன.

ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக இவை நடைபெறவில்லை. நிரந்தரமான திட்டங்கள், பெரிய அளவில் அந்த நிதி தங்குதடையின்றி கிடைத்திட நிரந்தர ஏற்பாடுகள், அதற்காக 24×7 என உழைத்திட மனித ஆற்றல். அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு-ஓவர் டைம், சம்பளம் முதல் ஓய்வூதியம் வரை நிரந்தர ஏற்பாடு என அத்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன.

வரலாற்றில் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

வெறுமனே இஸ்லாத்தின் எதிரிகள், எப்படி எல்லாம் செயல்படுகின்றார்கள் என்பதை மட்டும் வெளியிடவில்லை அந்த வெறுப்பை, எப்படி முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்கள்.

எப்படியெல்லாம் முஸ்லிம்கள் இந்த வெறுப்பு பிரச்சாரத்தை தூள் தூளாக்கினார்கள், தவிடு பொடியாக்கினார்கள் என்பதையும் நாம் திகட்டவே கோடிட்டுக் காட்டி வருகின்றோம்.

அந்தத் தொடரை படித்தால் நிறையவே அறிவையும், ஆக்கபூர்வமான செயல் திட்டங்களையும் பெறலாம்.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**



# இன்றைய கட்டுக்கதைகள்

ஜான் பெஃப்பர் கூறுகின்றார்: மத்திய காலக்கட்ட இலக்கியங்களில் இஸ்லாத்தைப் பற்றி நாம் சொன்ன பொய்கள் (கிருஸ்தவ உலகம் சொன்ன பொய்கள்) தவறான தகவல்களுக்காக மட்டும் இணைக்கப்பட்டதல்ல. மாறாக ஒரு பெரும் தேவையை முன்னிட்டே அந்தப் பொய்கள் வரலாற்றில் இணைக்கப்பட்டன.


ஒரு கிருஸ்தவர் தன்னுடைய கொலை பாதகச் செயல்களை எதைக் கொண்டும் நியாயப்படுத்திட இயலாது. அவற்றில் கொலை செய்யப்படுபவர்களைப் பாவிகள் எனப் பறைசாற்றிடாத வரை, பாவத்தின் காரணமாகவே கொலை செய்யப் பட்டவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள் என வெகுஜனங் களை நம்பிடச் செய்திட வேண்டும். அப்போது மட்டுமே அவர்களுடைய கொலை நியாயப்படுத்தப்படும்.

ரோமர்களைச் சார்ந்த "ஹம்பர்ட்" என்பவர் 1274-இல் இப்படிக் குறிப்பிட்டார். “முஸ்லிம்கள் உச்சப்பட்ச தண்டனைக் குரியவர்கள்.” இதேக் காலக்கட்டத்தில் இன்னொருவர் இப்படிக் குறிப்பிட்டார். “கிருஸ்தவத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்பவர்கள். தவறான மத நம்பிக்கை உடையவர்கள். முஸ்லிம்கள் இவர்கள் மீது கிருஸ்தவ ஆலயம் தனது வாளை சுழற்றும் உரிமையை உடையது.”

“கிருஸ்தவர்களின் நடவடிக்கைகளை முஸ்லிம்களின் பாவங்கள் நியாயப் படுத்துகின்றன.”

ஆன்றுபோல, இன்றும், இன்றுபோல, என்றும் இஸ்லாத்திற்கெதிராகப் பரப்பி வரும் பொய்கள் நமது அச்சத்தை அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாத்தால் நாங்கள் ஆட்கொள்ளப்பட்டு விடுவோமா என்ற அச்சம் எம்மை ஆட்டிப்படைத்து வருகின்றது. இதனால் நாம் தொடர்ந்து பொய்களை இஸ்லாத்தின் மீது பரப்பி வருகின்றோம். தொடர்ந்து நாங்கள் முஸ்லிம்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றோம். இந்த வன்முறைகளை நாங்கள் நியாயப்படுத்தியாக வேண்டும். இதனால் நாங்கள் எங்களிடம் பிரபல்யமானவர்களைக் கொண்டு, “இஸ்லாம் வன்முறையைப் போதிக்கின்றது” என மூச்சுவிடாமல் பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தோம்.

எங்கள் தொலைக்காட்சிகளின் வழி பிரபல்யமான பேட் ராபர்ட்சன் என்பவர் 2005இல் இப்படி குறிப்பிட்டார். “திருக்குர்ஆன் வன்முறையைப் போதிக் கின்றது. பெரும்பாலான முஸ்லிம்கள்,




நடுவுநிலையான முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்ளும் முஸ்லிம்களும் வெளிப்படையாக வன்முறையில் நம்பிக்கையுடையவர்களாகவே இருக்கின்றார்கள்."

"Pat Robertson Claimed that Islam 'at Its core, teaches violence" *(medina matters, July 18, 2005, http://medinamatters.org/mmtv/200507180003)*

அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றிய வரும், புகழும் பெற்றவர், மேஜர் ஜெனரல் 'ஜெரி கொறி' என்பவர். இவர் அமெரிக்க ஜனாதிபதிகள், கார்ட்டர், ரீகன், புஷ் சீனியர் ஆகியோருடைய காலங்களில் அமெரிக்கா வின் இராணுவத்தில் பணியாற்றியவர். இவரும், "இஸ்லாம் வன்முறையை போதிக்கின்றது. முஸ்லிம்கள் அனைவரும் வன்முறையாளர்களே" எனப் பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தார். இவரது பிரச்சாரம் மக்கள் மன்றத்தில் பெரிய அளவில் எடுபட்டது.

Jerry Curry, "Islam is a Violent Religion", (*Web Today, sep 11, 2010, http:/www.audacityof hypocrisy.com/2010/09/11/)*

இன்னொரு தொலைக்காட்சி பிரபல்யம் கெற்றி ஃபாவல். இவரும் அமெரிக்க இராணுவத்தைச் சார்ந்தவர். இவர் "60




நிமிடங்கள்" என்றொரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை நடத்தி வந்தார். இந்த நிகழ்ச்சியில் அவர், "முஹம்மத் ஒரு தீவிரவாதி. அவர் போர் களை மட்டுமே நடத்திக் கொண்டிருந்தவர். அவர் ஜீஸஸ் அவர்களைப் போன்றவரோ, மோஸஸ் அவர்களைப் போன்றவரோ அல்ல." எனப் பேசிக் கொண்டே இருந்தார்.

முதல் சிலுவைப் போரை நிகழ்த்திட நாங்கள் பரப்பிய பொய்களைப் போலவே, இரண்டாவது சிலுவைப் போருக்காகவும் சொன்ன பொய்கள் பெரிய அளவில் 2006ஆம் ஆண்டில் எடுபட்டன. இந்த 2006ஆம் ஆண்டில், போப் பெணிடிக்ட் - 16 அவர்கள் ரிஜன்ஸ்பர்க் என்ற பல்கலைக் கழகத்தில் உரையாற்றினர். அந்த உரையில் அன்றைய பைசாந்திய மன்னர் மேனுவேல் 2 என்பவரின் சொற்களை அப்படியே மேற்கோள் காட்டிப் பேசினார். அதில், "முஹம்மத்-இன் வழிமுறையே தீமையானது, மனிதாபிமான மற்றது. அவர் தன்னுடைய மார்க்கத்தை வாளைக் கொண்டு பரப்பிடவே கட்டளை யிட்டார்."

போப் பெணிடிக்ட் 16 இப்படி பேசியதும், உலகெங்கிலும் முஸ்லிம்கள் கிளர்ந் தெழுந்தார்கள். கட்டுக்கடங்காத எதிர்ப்புகள் வரவே போப் பெணிடிக்ட் அவர்கள்

மன்னிப்புக் கேட்டார்கள். தன்னுடைய “பேச்சை மக்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள்” என்றார்.

Pop “Sorry” for offence to Islam”, *(bbc news, sep 16, 2006, htt:/news.bbc.co.uk/2hi/5351988. stm.)*

ஆனால் போப் அவர்கள் இப்படி தான் சொன்னவற்றிலிருந்தே, தன்னை விடுவித்துக் கொண்டது முதல் முறையல்ல. இவருக்கு முந்தைய போப் ஜான் பால் 2 அவர்களும் இப்படித்தான் தன்னை விடுவித்துக் கொண்டார்.


போப் ஜான் பால் 2 அவர்கள் முதலில் தான் விரும்பியதெல்லாம் சொல்லிவிட்டார். பின்னர் கிருஸ்தவர்கள் - முஸ்லிம்கள் - யூதர்கள் எல்லோரையும் ஒன்றிணைக்க பயங்கர முயற்சிகளை மேற்கொண்டார்கள். *(Akbar.S.Ahamed, “Bridgebuilder to the Muslim World” April 2005, http:/www.beliefnet.com/faith/ Islam/2005/04/)*

போப் ஜான் பால் 2 அவர்கள் கூறியவற்றில் முத்தாய்ப்பானது, “முஸ்லிம்களை நாம் ஓர் பன்முகச் சமுதாய அமைப்பில் ஒன்றிணைக்க இயலுமா?” என்பதே! இதே கேள்வியை போப் பெனிடிக்ட் 16 அவர்களும் கேட்டார்கள். இந்த விவகாரங்களில் போப் பெனிடிக்ட் அவர்கள் தன்னை ஓர் போப் அர்பன் 2 ஆகவே ஆக்கிக்கொண்டார்கள். முஸ்லிம்களை கிருஸ்தவர்களாக ஆக்கிடும் முயற்சிகளையும் மேற்கொண்டார்கள். அத்தோடு “அரசியல் களத்தில், துருக்கியை ஐரோப்பிய நாடுகளின் அணியில் சேர்க்க கூடாது. காரணம் அது ஓர் கிருஸ்தவ நாடல்ல” எனக் கூறினார். *(Christopher Caldwell, Reflection on the Revelution in Europe.(Newyork Doubleday, 2009), 187*

இன்ஷா அல்லாஹ்...தொடரும்....

**குறிப்புகள்**

போப் அர்பன் 2 என்ற கிருஸ்தவ மத தலைவர் அவர்கள் தாம் முதல் சிலுவைப் போரை 1095ல் தொடங்கி வைத்தார்கள். இதற்காக அவர் முஸ்லிம்கள் அனைவரும் பாவிகள். அவர்களைக் கொலை செய்பவர்களுக்கு பாவங்கள் கழுவப்படும் என்றார். பாலஸ்தீன் என்பது கிருஸ்தவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி எனப் பரப்பினார்.



நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து




நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து



# தென்முடியனூர் தீ

## எப்போது தணியும் தீண்டாமை

### வைகறையின் கள ஆய்வு

வைகறை வெளிச்சம் மே மாத இதழில் தென்முடியனூர் தலித் சமூக மக்களுக்கு நடந்த வழிபாட்டு உரிமை மறுப்பு, அதனை தொடர்ந்து நடந்த ஆலய பிரவேசம், அதனால் ஏற்பட்ட ஆதிக்க சாதியினரின் சமூக புறக்கணிப்பு பற்றி விரிவாக எழுதியிருந்தோம்.

கள நிலவரத்தை அறிந்து வர நமது வைகறை வெளிச்சம் நிருபர் குழு 15.07.2023 அன்று தென்முடியனூர் சென்றது. சுமார் 12 மணியளவில் தென்முடியனூரை சென்றடைந்தோம்.

அம்பேத்கர் சமூக எழுச்சி படை என்ற அமைப்பை நடத்திவரும் குபேந்திரன் அவர்களின் கடை எங்கே உள்ளது, அவர் எங்கு உள்ளார்? என்று ஊரில் சிலரிடம் வினவினோம். சரியான விலாசம் கிடைக்கவில்லை. பின்பு ஒரு முதியவர் சரியான விலாசத்தை தந்தார். வேறு யாரிடமும் கேட்க வேண்டாம். நேரடியாக நான் கூறிய இடத்திற்கு சென்றால் அவரை காணலாம் என்றார்.

**குபேந்திரன் - டாக்டர் அம்பேத்கர் எழுச்சிப் படை**

நாங்கள் அம்பேத்கர் நகர் அடைந்தபோது பறை சத்தம் மேலோங்கி இருந்தது. ஒருவருக்கு இறுதி மரியாதை நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒரு தேநீர் கடையில் சென்று குபேந்திரன் என்பவரை சந்திக்க வேண்டும் என்று கூறியபோது, அவர் நான் தான் குபேந்திரன் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். பத்திரிக்கை சார்பாக, நாங்கள் சென்னையில் இருந்து வந்துள்ளோம். ஊரு எப்படி இருக்கிறது என்று கேட்டபோது.? இப்போது கேட்கும் பறை சத்தம் கூட கடந்த ஆறு மாதங்களாக தடை செய்யப்பட்ட நிலை தான் இருந்தது.

நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி கொண்டு செல்கின்றது என்று கூறினார். அந்த இடத்தில் பேசுவதற்கு சூழல் இல்லாத காரணத்தால் அவர்கள் பகுதியில் இருக்கும் ஒரு கோவிலுக்கு எங்களை அழைத்துச் சென்றனர்.

**பள்ளி மேலாண்மை குழு தேர்தல்:**

நடந்த விவரங்களை ஆதங்கத்துடன் எங்களிடம் பகிர ஆரம்பித்தார். கூறினார்.

தென்முடியனூரில் 70 வருடமாக 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளி நடைபெற்று வந்தது. 2016-2017 கல்வியாண்டில் இது அரசு உயர் நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப் பட்டது. இங்கு படிக்கும் மாணவர்களில் 70% மாணவர்கள் தலித் சமூகத்தை சேர்ந்தவர்கள். பள்ளி மேலாண்மை குழு பொறுப்புகளில் இதுவரை ஆதிக்க சாதியினரே பதவி வகித்துள்ளனர். முறைப்படி தேர்தல் நடந்தால் தலித் சமூகத்தை சேர்ந்தவர்கள் பொறுப்புகளில் வந்து விடுவார்கள் என்பதால் குழப்பம் விளைவித்து மூன்று முறை தேர்தலை நடத்த விடாமல் தடுத்து விட்டார்கள். எனவே தேர்தலை நடத்த வேண்டும் என்றும் அதற்காக காவல்துறை பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றும் மனு ஒன்றையும் தண்டாரம்பட்டு காவல் ஆய்வாளரிடம் கொடுத்ததாக குபேந்திரன் கூறினார்.

30/04/2022 அன்று நடந்த தொடக்க பள்ளிக்கான மேலாண்மை குழு தேர்வு கூட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை அநாகரிகமான வார்த்தைகளால் தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியரும் திட்டியதாகவும் பின்னர் எங்களை வெளியே அனுப்பி விட்டனர் என்றும் கூறினார். தேர்தல் நடைபெற விடாமல் தடுத்து விட்டனர் என்றார்.

எனவே மேற்கூறிய இருவர் மீது நடவடிக்கை எடுக்க கூறி திருவண்ணாமலை முதன்மை கல்வி அலுவலருக்கு மனு ஒன்றையும் குபேந்திரன் அளித்துள்ளார்.

காலம் காலமாக அடிமைப்பட்டு கிடக்கும் மக்கள் எந்த வித பொறுப்புக்கும் வந்து விடக் கூடாது. அவர்களை தாழ்ந்த நிலையிலே வைத்திருக்க வேண்டும் என்ற மனோபாவம் ஆதிக்க சாதியினரிடம் இன்றளவும் மிகைத்து



நிற்பதை தான் மேற்கூறிய சம்பவம் உணர்த்துகிறது.

உங்கள் பாட்டன் கேட்கவில்லை, உங்கள் அப்பன் கேட்கவில்லை தலைவர் பொறுப்பு, நீங்கள் கேட்கிறீர்களா? என்றும் தன்னிடம் ஆதிக்க சாதியினர் கேட்டதாகவும் குபேந்திரன் கூறினார்.

**ஆலய நுழைவு:**

பொறுப்புகளில் மட்டுமல்ல, வழிபாட்டு உரிமையிலும் தலித் சமூக மக்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதை உணர்ந்த அவர்கள், அரசு தங்களுக்கு வழங்கியிருக்கும் உரிமைக் காக போராட தொடங்கி உள்ளனர். இதன் பின்னரே முத்து மாரியம்மன் கோவிலில் சென்று வழிபட முயற்சி எடுத்துள்ளனர் அம்பேத்கர் சமூக எழுச்சி படையினர்.

தொடர்ந்து எடுத்த முயற்சியின் பயனாக, கடந்த ஜனவரி 30 ஆம் தேதி, மாவட்ட கலெக்டர் B.முருகேஷ், காவல்துறை கண் காணிப்பாளர் (SP) கார்த்திகேயன், வருவாய் கோட்டாட்சியர் (RDO) மந்தகினி ஆகியோர் உதவியுடன் தலித்கள் கோவிலுக்குள் சென்று வழிபட்டனர்.

அதன் பின்பு ஆதிக்க சாதியினர் மறியல் செய்ததால் இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் கோவிலை பூட்டி சாவியை எடுத்து சென்று விட்டனர்.

பட்டியிலன மக்கள் கோவிலில் சென்று வழிபட்டதால் தானே இன்று வரை கோவிலை பூட்டி வைத்துள்ளார்கள் என்று ஆவேசத் துடன் கேள்வி எழுப்பினார் குபேந்திரன்.

திமுக அரசு ஆட்சியில் இருப்பதால், எங்களால் கோவிலுக்குள் சென்று ஒரு முறையாவது வழிபட முடிந்தது. வேறு அரசு இருந்தால், நாங்கள் கோவிலுக்குள் சென்று வழிபட எந்த முயற்சியும் எடுத்திருக்க மாட்டார்கள் என்றனர் அம்பேத்கர் சமூக எழுச்சி படையை சேர்ந்தவர்கள்.

இதனோடு சேர்த்து இன்னொரு சவாலையும் நாங்கள் எதிர்கொண்டு வருகின்றோம் என்றார். அது, தற்போது உள்ள இடத்தில் இருந்து அரசு உயர்நிலை பள்ளியை ஊர் பகுதியில் (உயர் சாதியினர் வசிக்கும் பகுதியில்) மாற்றவும் முயற்சி மேற்கொள்ள பட்டுள்ளது. நீர் நிலைகளுக்கு அருகில் அப்பகுதி வருவதால் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என கூறினார் குபேந்திரன். அப்படி கட்டினாலும் பிரேயர் அங்கே நடத்த முடியாது , அதற்கான வசதி இல்லை என அப்பகுதியை ஆய்வு செய்த D.O.அரவிந்த் தெரிவித்ததாகவும், எனவே தற்போது இயங்கி வரும் இடத்திலேயே புதிய கட்டிடத்தை கட்டலாம் என்றார்.

இன்னும் எத்தனை ஆண்டு காலம் ஆனாலும் சரி, இந்த தீண்டாமை, சாதி பாகுபாடு ஒழிய போவதில்லை என்றார் முத்துவேல். இவர் அம்பேத்கர் சமூக எழுச்சி படையின் பொருளாளர்.

அமெரிக்கா மாகாணமான கலிபோர்னி யாவில் ஜாதி பாகுபாட்டிற்கு தடை விதிக்கும் மசோதா கொண்டு வரப்பட்டுள்ளதை அறிவீர்களா ? வளர்ந்த நாட்டில் சென்று குடி யேறினாலும் தீண்டாமையை தான் இவர்கள் ஏற்றுமதி செய்துள்ளனர். எனவே நீங்கள் சொல்வது சரி தான் , எத்தனை ஆண்டு காலம் ஆனாலும் தீண்டாமை ஒழியாது போல என்றோம். உரையாடலில் கலந்து கொண்ட இன்னொரு நபர், இஸ்லாமியர்கள் இங்கே இல்லாதது வருத்தமாக உள்ளது என்றார். ஏன் அவ்வாறு கருதுகிறீர்கள் என்று கேட்டதற்கு, இஸ்லாம் வந்தால் சமத்துவம் வந்துவிடும் அல்லவா என்றார்.

**சிறையில் அடைப்பு :**

கோவிலில் நுழைந்தது தவறு என்று மன்னிப்பு கடிதம் எழுத தலித்களில் சிலரை கைவசப் படுத்தியுள்ளனர் ஆதிக்க சாதியினர். தவறு என்று எழுதியும் வாங்கி உள்ளனர். இதனை அறிந்த நான் தலித்களில் 99 பேர் எழுதி கொடுக்கட்டும். நான் கோவிலுக்குள் சென்று வழிபட விரும்புகிறேன் . இதற்கு சட்டம் என்ன சொல்கின்றது என காவல்துறை விசாரணையில் கேள்வி எழுப்பினேன் என்றார் குபேந்திரன். இப்படி ஒரு வாக்குவாதம் காவல் துறையில் நடக்கவே, பணி செய்ய விடாமல் தடுத்த குற்றத்திற்காக குபேந்திரன் உட்பட 30 பேர் மீது வழக்கு போட்டுள்ளனர். வழக்கு போடப்பட்ட 30 பேரில் பெண்களும் உண்டு. தலித் மக்கள் என்றால் சட்டம் சீறிப் பாய்கிறது. 20 நாட்களுக்கு பின் குபேந்திரன் பிணையில் வந்துள்ளார். சிறையில் இருந்த நேரத்தில் மற்ற வழக்குகளில் (VO கொடுத்த புகாரின் அடிப்படையில்) அவரின் பெயரை இணைத்துள்ளனர்.

சிறையில் இருந்தவர்களை ஜாமீனில் எடுக்க கம்யூனிஸ்ட் தோழர்களே உதவினர் என்று குபேந்திரன் கூறினார்.

எதிர் தரப்பில் யாராவது கைது செய்யப் பட்டுள்ளார்களா என கேட்டோம். ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் மேற் கூறிய பிரச்சனைக்கும் இந்த கைதுக்கும் சம்பந்தமில்லை. தலித்களில் ஒருவரை தரக்குறைவாக பேசியதற்காக இந்த கைது என்றார் குபேந்திரன்.

**இஸ்லாம் பற்றி:**

எல்லோரும் சமத்துவம் என்ற நிலை தான் இஸ்லாத்தில் உள்ளதா என்று கேள்வி எழுப்பினர். அதற்கு சிலரின் வாழ்க்கை உதாரணங்களை எடுத்து கூறினோம். குறிப்பாக T.M.உமர் பாரூக், கூரியூர் முஹம்மது அலி ஜின்னா, ஜக்கரிய்யா பாய், அமீர் பாஷா போன்றோர் இஸ்லாத்தை தழுவிய பின் அவர்கள் எவ்வளவு சமத்துவத்துடனும் சகோதரத்துவத்துடனும் நடத்த பட்டனர் , நடத்தப்படுகின்றனர் என்பதை சுருக்குமாக விவரித்தோம். அவர்கள் குறித்த இலக்கியங் களையும் வழங்கினோம்.



மாட்டோம் என்கின்றனர் ஆதிக்க சாதியினர். அதற்காகவே பணியிடம் நிரப்ப படாமல் உள்ளது என்றார் வெங்கடப்பன். ஏட்டில் இருக்கும் சட்டங்கள் தீண்டாமையை ஒழிக்கவில்லை என உணர முடிந்தது.

இவர்களுக்கு எதிர் அணியில் பயணிக்கும் நல்லதம்பி அவர்களை சந்தித்து விவரங்களை கேட்கலாம். அவர்கள் தரப்பு என்ன சொல்கின்றது என கேட்க அலை பேசியில் தொடர்பு கொண்டோம்.

அவர் பக்கத்து ஊரில் இருப்பதாக சொல்லி நம்மை தவிர்த்தார். மீண்டும் தொடர்பு கொண்டு அங்கே வந்து சந்திக்கின்றோம் என்றோம். அதற்கு அவர், இப்பிரச்னை குறித்து பேச ஒன்றும் இல்லை என மீண்டும் தவிர்த்தார்.

அவர்களிடம் பேசியதில் இருந்து தென்முடியனூரில் கள நிலவரத்தை அறிந்து கொண்டோம். வைகறை வெளிச்சம் மே மாத இதழில் குறிப்பிட்ட பிரச்னைகளில் முன்னேற்றம் ஏற்பட வில்லை என்பதை அறிய முடிந்தது.

வேலை செய்வதற்கு வெளியூரில் இருந்து ஆட்கள் வர வழைக்கப்படுகின்றனர். காலை உணவு திட்ட பணியிடம் நிரப்பப்பட்டு அதில் தலித் சமூக மக்கள் சமைக்கும் நிலை ஏற்பட்டால் அந்த உணவை உண்ண



**உளவு துறையின் மிரட்டல்:**

நமது பத்திரிகையாளர்கள் குழு தென்முடியனூர் சென்று வந்ததற்கு பின்பு, அடுத்த நாள் 16/07/2023 முதல் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் உளவு துறையை சேர்ந்தவர்கள் குபேந்திரன் அவர்களிடம் சென்றுள்ளனர். நீங்கள் மதம் மாறுவதாக தகவல் கிடைத்தது. வரும் ஆகஸ்டு 15 அன்று மத கலவரத்தை தூண்ட திட்ட மிடுகிறீர்களாமே! என்று அதட்டியுள்ளனர். முத்துவேலையும் உளவு துறை தொடர்பு கொண்டுள்ளது.

சமத்துவத்தை நிலைநாட்ட முடியாதவர் கள், தலித் மக்கள் அடிமை பட்டு கிடக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் மதக் கலவர சதி என்று கூறி பிரச்னையை மடைமாற்றம் செய்ய முயற்சிக்கின்றனர். அவர்கள் அதற்கான திட்டத்தை வைத்து கொண்டு ஆள் தேடுவது போல் இருக்கின்றது இவர்களின் பொய். ஸ்டாலின் ஆட்சியில் அப்படி ஒன்று நிகழ அவர்கள் விரும்புவது போல் தெரிகின்றது. அவர் ஆட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்த உளவு துறையை சேர்ந்த சிலர் முயல்வது ஏனோ?

- நமது நிருபர்கள்

## 30/07/2023 அன்று சென்னை கொருக்குப்பேட்டையில்

## தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் நடத்திய

# ஈத் மிலன்



# பெருநாள் சந்திப்பு – சமூக நல்லிணக்க கூ

30/07/2023 (ஞாயிறு) சென்னை கொருக்குப் பேட்டையில், பெருநாள் சந்திப்பு மற்றும் சமூக நல்லிணக்க கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.



தாருல்இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் நடத்திய இந்நிகழ்வுக்கு மூத்த பத்திரிக்கையாளர் மு. குலாம் முஹம்மது தலைமையேற்றார்.

ரா.ரஞ்சித், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,(எழும்பூர் பகுதிச் செயலாளர்,), மணிகண்டன்,(ஆர்.கே.நகர் தொகுதி தலைவர் பகுஜன் சமாஜ் கட்சி), அசோக் குமார்,(தாய் தந்தை அறக்கட்டளை நிறுவனத்தலைவர்),பன்னீர் செல்வம் (எ) அமீர் பாஷா,(திமுக முன்னாள் மாவட்ட செயலாளர் திரு.வி.க. நகர்) ஆகியோர் கருத்துரை வழங்கினர். மௌலவி இல்யாஸ் ரியாஜி நிறைவுரையாற்றினார்.

அம்பேத்கரிஸ்ட்கள், பெரியாரிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் அனைவரும் ஃபாசிஸம் சனாதனம் குறித்த தெளிவான பார்வையுடன் உரையாற்றியது சிறப்பு. மனதுக்கு நிறைவான நிகழ்ச்சி. அறிவார்ந்த நிகழ்ச்சி. ஃபாசிஸ எதிர்ப்பு போராளிகளுக்கு நம்பிக்கையூட்டிய நிகழ்ச்சி. இஸ்லாம் ஒரு மதமல்ல சீர்திருத்த இயக்கம். வாழ்க்கை நெறி என்று உணர்த்திய நிகழ்ச்சி.

சிறப்பு விருந்தினர்களுக்கு,

- கர்கரேயை கொலை செய்தது யார்? இந்திய தீவிர வாதத்தின் உண்மை முகம்.
- பிராமனிஸ்டுகள் குண்டு வைத்தார்கள். முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்.
- இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு. ஆகிய நூல்கள் நினைவுப்பரிசாக வழங்கப்பட்டன.



வேர்கள் வெளியீட்டகம் ஆர்வமுடன் வாங்கிச் செல்லும் பெண்கள்





நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள் அன்பளிப்பாக வழங்கபட்டது



பன்னீர் செல்வம் (எ) அமீர் பாஷா



ரா.ரஞ்சித்,



நிகழ்ச்சி நிறைவுற்ற பின் பன்னீர் செல்வம் என்ற அமீர் பாஷாவுடன் உரையாடிக்கொண்டிருந்த போது அவர் கூறியவை:

“இன இழிவு நீங்க இஸ்லாம் ஒன்றே நன்மருந்து என்று தந்தை பெரியார் கூறியதைக் கேட்டு இஸ்லாத்தை ஏற்றவன் நான். 1948ஆம் ஆண்டு சென்னை புளியந் தோப்பு பகுதியில் உரையாற்ற பெரியார் வந்திருந்தார். மேடையில் மின்விளக்கு, மைக்செட்டுக்கு தேவையான மின்சாரம் வழங்க எவரும் முன் வரவில்லை”.

“அங்கே தேனீர் அங்காடி வைத்திருந்த முராத் கான் என்ற முஸ்லிம், தன் கடையிலிருந்து மின்சாரம் வழங்கினார். இதை அறிந்த பெரியார் அவரைப் பாராட்டினார். நம் இயக்கத் தோழர்கள் இவர் கடையில் தினமும் தேநீர் பருகி இவரை ஆதரிக்க வேண்டும்” என்றும் தன் உரையில் குறிப்பிட்டார்.

பெரியார் எவ்வளவு வெளிப்படையான மனிதர்!

நிக்ழச்சியில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது.

அல்ஹம்துலில்லாஹ்..!

- நமது நிரூபர்






# இஸ்லாம் தான் ஒரே தீர்வு...!

**தஞ்சையில்....!**
**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் நடத்திய**
**ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும் நூல் வெளியிட்டு நிகழ்ச்சியில் வழக்கறிஞர் சின்னசாமி அவர்கள் ஆற்றிய உரை...!**

மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு. தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் இரண்டு நூல்கள் வெளியிடப்படுகிறது. ஒன்று, சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து மக்கா மாநகரம் வரை என்கிற ஒரு நூல்.

அந்த நூல் ஒரு சாதி எதிர்ப்பு போராளி ஜக்கரியா பாய் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு. அவர், இந்த சனாதான இந்து மத கோட்பாட்டை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய, இந்த பார்ப்பனிய மதம், தனக்கு என்ன கொடுமைகள் எல்லாம் செய்தது? அதிலிருந்து எவ்வாறு அவர் வெளியேறினார்? என்பதை சொல்கிற ஒரு நூல்.

அந்த நூலைப் பற்றி பேசுவதற்காக என்னை அழைத்திருந்தார்கள். அதற்காக கும்பகோணம் சென்றதால் பிரேமுடைய நிகழ்ச்சியில் கலந்து கொள்ளமுடியவில்லை. அதனால் மிகவும் வருத்தமாக இருந்தது எனக்கு. பிரேமுடைய நிகழ்ச்சியை தவிர்த்துவிட்டு சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து மக்கா மாநகரம் வரை நூல் வெளியீட்டு நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டேன்.

அங்கே அந்த நூல் பற்றி நான் பேசியதை, நான் பேசி முடித்த உடனேயே, அந்த நிகழ்ச்சிக்கு வந்தவர்கள் எல்லாம் சொல்லி, இதை நூலாக வெளியிட வேண்டும் என்று கேட்டபோது, பெருமதிப்பும், மரியாதைக்கும் உரிய குலாம் முஹம்மது அவர்கள் என்னிடம் சொன்னார், "உங்களது உரையை நூலாக போடுகின்றோம்" என்று. போடுங்கள் என்று சொன்னேன்.

வைகறை வெளிச்சம் மாத இதழில் அந்த கட்டுரை முதலில் வந்தது. நான் அந்த நிகழ்ச்சியில் பேசிய அந்த பேச்சு அப்படியே எழுத்து வடிவில் வந்தது. நான் படித்து பார்த்தேன். நன்றாக வந்திருந்தது. அதுதான் இப்போது, "ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும்" என்கின்ற நூலாக வெளிவந்திருக்கின்றது.

இப்போது நமக்கு முன்னாள் பேசிய ஜக்கரியா பாய் மிகப்பெரும் போராளி. இந்த சாதிய கொடுமைகளை எதிர்த்து தன்னால் முடிந்த வரைக்கும் எல்லாவற்றையும் செய்து பார்த்து விட்டு, இப்போது அதிலிருந்து வெளியில் வந்து இந்து மதத்துக்கு Good bye சொல்லிவிட்டார்.

நான் போகிறேன், உன்னை விட்டு வெளியேறுகிறேன் என்று சொல்லி, இந்து மதத்திலிருந்து வெளியே வந்துவிட்டார். இப்போது இங்கிருக்கும் இந்த கூட்டம் மிகவும் அற்புதமான ஒரு கூட்டம். இந்த கூட்டம் எங்களோடு வந்து இணைந்து கொள்ளுங்கள். எங்களோடு சேர்ந்து இந்த இஸ்லாமிய கடலில் கலந்து விடுங்கள் என்று அழைக்கும் ஒரு கூட்டம்.

இந்த இந்து மதத்தின் தாக்கத்தினால், இந்து மத கொடுமைகளினால், கோரத்தாண்டவத்தால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு சமூகம், "நாங்க உங்களோட இணைஞ்சுக்குறோம்னு" சொல்கிற அருமையான தருணம்தான் இந்த கூட்டம். இந்த இந்து மத கொடுமைகளில் இருந்து., நாம் எப்போது விடுதலை அடையப் போகின்றோம்?

நான் ஒரு ஜாதி இந்துக்கு சமம் என்று சொல்கின்ற என்னுடைய கோரிக்கை அவன் காதில் எப்போது விழும்? அதை அவன் எப்போது ஏற்றுக்கொள்வான்? அவன் ஏற்றுக்கொள்ளும் காலம் வரை, அவனோடு எவ்வளவு காலம் போராடுவது? அதனுடைய முடிவு என்ன? என்று கேட்டுவிட்டு இந்த கேள்விக்கு பதில் சொல்கிறார் அம்பேத்கர். என்ன சொல்கிறார் என்றால்,

"கடைசியாக இருக்கின்ற தீண்டத்தகாதவன் சாகும் வரை போராடுவது தான். அப்படி யென்றால், தீண்டத்தகாதவன் யாரும் இருக்க மாட்டான்னு" அர்த்தம். ஆகவே, தோழர்களே! நமக்காக பாடுபட்ட இரண்டு தலைவர்கள், ஒருவர் அம்பேத்கர். இன்னொருவர் பெரியார். இந்த இருபெரும் தலைவர்களும் நம்

வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், தங்களுடைய இறுதி நாள் வரை உழைத்த தலைவர்கள். இவர்கள் நமக்கு ஒரு தீர்வை சொல்லியிருக்கிறார்கள்.

அது என்னவென்று சொன்னால், இந்து மதத்தை விட்டு வெளியேறு என்பது. அப்படி இந்து மதத்தை விட்டு நாம் வெளியேறுவது என்று சொன்னால், நீங்கள் ஒரே நொடியில் இந்து மதத்தையும், ஒரே நொடியில் ஜாதியையும் விட்டு நீங்கள் வெளியேறிவிடலாம். அதற்கு, நம்முடைய தலைவர்கள் முன் வைத்த ஒரே ஒரு கோரிக்கை என்ன? மதமாற்றம்! இந்த மதமாற்றம் கோரிக்கை யாராலும் முன்னிறுத்தி பேசப்படுவது இல்லை. உங்களுக்கெல்லாம் தெரிந்து ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. புதுக்கோட்டையின் வேங்கை வயல் சம்பவம்.

குடிநீர் தொட்டியில் மனிதன் என்று சொல்லப்படுவன் மலம் கழிந்து வைக்கிறான். அந்த மலம் கலந்த தண்ணீரை இன்னொரு மனித கூட்டம் அருந்துகிறது. இந்த மனிதன் ஒரு குடிநீர் தொட்டியில் ஏறி மலம் கழிக்க அவனுக்கு அனுமதி கொடுத்தது எது? இந்து மதம் தான்!

ஒரு ஜாதி இந்து, தாழ்த்தப்பட்டவன் மீது எந்த அளவிலும் ஆதிக்கம் செலுத்த இந்த இந்து மதம் வழி வகுத்திருக்கிறது. ஒரு ஜாதி இந்துவுக்கு அனுமதி கொடுத்திருக்கின்றது. அவன் என்ன செய்யலாம்? ஒரு தீண்டத்தகாதவன் மேல் ஒரு இந்து, ஜாதி இந்து என்னவெல்லாம் செய்யலாம்? என்ன வன்முறை எல்லாம் செய்யலாம்?

ஒரு தனிப்பட்ட முறையில எனக்கு கெடுதல் செய்யலாம். என்னுடைய குடும்பத்துக்கு செய்யலாம். என்னுடைய குழந்தை, குட்டி, பொண்டாட்டிக்கு கெடுதல் செய்யலாம். என் சமூகத்துக்கே செய்யலாம். என் சமூகத்தினர் வீடுகளை கொளுத்தலாம். என்னுடைய உடைமை களை எரிக்கலாம். இப்படி எது வேண்டு மானாலும் செய்யலாம். இத்தகைய உரிமையை ஒரு ஜாதி இந்துக்கு இந்து மதம் வழங்கி இருக்கிறது.

வேங்கைவயலில் என்ன செய்தான்? மலம் கழித்து அதை எடுத்து, மேலே போய், அந்த தண்ணீர் தொட்டியில் கலந்து விடுகின்றான்.. அந்த தண்ணீரை ஒரு கூட்டம் குடிக்கிறது. இரண்டு குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள்.. அந்த குழந்தைகளை மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது. மருத்துவர் சொல்கிறார், "அந்த தண்ணீரை, நீங்க பரிசோதித்து பாருங்கன்னு". அப்போது, அந்த தண்ணீரை பரிசோதித்து பார்த்தால், அதில் மலம் கலந்திருக்கிறது.

இந்த மலம் கலந்த தண்ணியை குடித்ததனால், இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஆய்வில் தெரிய வருகிறது. இப்போது என்ன நடக்கின்றதென்றால் அங்கே ஒரு புது தொட்டி கட்டி கொடுக்கிறார்கள்.

இதற்காக பல தலைவர்கள் பேசி இருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் அதெல்லாம் தீர்வு அல்ல. இந்த மலம் கலந்த தண்ணீரை நாம் குடித்திருந்தால், என்ன செய்திருப்போம்? இங்கே இருக்கின்ற நம் எல்லோரையும் நான் கேட்கிறேன். நமக்கு தெரியாமல் ஒரு ஜாதி இந்து மலத்தை கழிந்து வைத்து, அந்த தண்ணீரை நாம் குடித்திருந்தால்? நம்முடைய மனநிலை என்னவாக இருக்கும்? என்றும் நான் உங்களை கேட்கிறேன்.

இந்த மதத்தை விட்டு உடனே வெளியேறி போயிருக்க வேண்டாமா? இவன் இப்படி நம்மை எதிர்த்து செய்திருக்கின்றான் என்று தெரிந்த அடுத்த நொடியிலேயே அவ்வளவு பேரும் இந்த மதத்தை விட்டு வெளியேறி இருக்க வேண்டும்.

அதற்கு இன்னொரு தொட்டி கட்ட திரும்பவும் அனுமதிப்பது தவறு. உன்னுடைய மதத்தில் நான் இல்லை. நீ என்னை ஆக்கிரமிப்பு செய்ய, என் மீது வன்முறை செலுத்த, உனக்கு உரிமை இல்லை என்று சொல்லிவிட்டு, நாம் இன்னொரு மதத்துக்கு போய்விடலாம். இப்போது இன்னொரு மதம் என்று சொல்லும் போது எல்லோரும் புத்த மதம் என்று சொல்கிறார்கள்.. இப்போது புதிதாக பா.ரஞ்சித் போன்றோர்கள் இந்த கருத்தை சொல்லிக் கொண்டிருக்கின்றார். புத்த மதம் என்பது என்னவென்று சொன்னால், இந்து மதத்தின் ஒரு பகுதி. கிறிஸ்தவ மதம் என்று சொன்னாலும், அதிலும் அப்படியே அந்த ஜாதி இருக்கிறது.

கிறிஸ்தவ பறையர், கிறிஸ்தவ சக்கிலியர், கிறிஸ்தவ வண்ணர் என்று சொல்லி விடுகின்றான். ஆக, கிறிஸ்தவ மதத்துக்கு போய் உங்களுக்கு எந்த விதமான தீர்வும் ஆகப்போவதில்லை. சீக்கிய மதத்துக்கு போனால், அதுவும் பல இந்து மத கோட்பாட்டுகளை உள்வாங்கிய மதமாக உள்ளது. இனிமேல் நீங்கள் புதிதாக ஒரு மதத்தை உருவாக்கி அதற்கு இந்த மக்கள் கூட்டத்தை திரட்டி, இந்த அரசாங்கத்திடம் நீங்கள் அனுமதி வாங்கி என அதற்குள் உங்களுடைய ஆயுள் முடிந்து விடும்.

நீங்கள் இங்கு இஸ்லாத்தில் கலந்து விட்டால், அந்த நொடியிலிருந்து உங்களுடைய ஜாதி, இந்து மதம் என்கிற இந்த மதம், இரண்டும் உங்களை

விட்டுவிடுகிறது. நான் உங்களுக்கு சொல்லுகிறேன், உங்களை நோக்கி ஒரே ஒரு கேள்வியைக் கேட்கிறேன். நாமெல்லாம் எப்போது இந்து ஆனோம்? நாம் ஏற்றுக் கொண்டோமா?

ஒரு கிறிஸ்தவர் தேவாலயத்திற்கு சென்று ஞானஸ்தானம் எடுத்துக் கொண்டு கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டது போல, நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோமா? இல்லை! இஸ்லாத்துக்கு சென்று, குர்ஆனை ஓதி, கலிமா ஓதி, நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லுகிற அளவில், அது போல நாம் ஏதாவது இந்து மதத்தில் செய்து உள்ளே போயிருக்கிறோமா? என்று கேட்டால், நாம் எதுவும் செய்யவில்லை.

ஆனால், நாம் இந்து. எப்படி இந்து ஆனோம் என்று சொன்னால், அதுதான் மிகப்பெரிய மோசடியான மதமாற்றம். நம் மீது இந்து மதம் திணிக்கப்பட்டது இருக்கிறதே, அதுதான் மிக மோசமான மதமாற்றம். இந்த மதமாற்றம் எப்படி நிகழ்ந்தது என்று சொன்னால், அவன் இந்து சட்டத்தில் என்ன சொல்கிறான்? யாரெல்லாம் முஸ்லிம் இல்லையோ, யாரெல்லாம் கிறிஸ்தவன் இல்லையோ, எவனெல்லாம் சீக்கியன் இல்லையோ, அவனெல்லாம் இந்து என்று சொல்கிறான்.

சரி நடைமுறையில் உண்மையில் இந்து என்பவன் யார்? என்று சொன்னால், பார்ப்பான். அந்த 3% சதவிகிதம் பேரை காப்பாற்றுவதற்கு 97% சதவிகிதம் பேரை பிடித்து, இந்துவாக்கி வைத்திருக்கின்றான். இதில் தாழ்த்தப்பட்டவன் ஓட்டு மற்றும் முஸ்லிம்களின் ஓட்டு எனக்கு வேண்டாம் என்கிறது பா.ஜ.க. ஆக 30% சதவிகிதம் ஓட்டு எனக்கு வேண்டாம். எனக்கு மீதி இருக்கின்ற, 70% சதவிகிதத்துக்கு நான் வேலை பார்த்தால், போதும் என்று சொல்கிறான்.

இதுவே ஒரு வெறுப்பு அரசியல் இல்லையா? இந்த வெறுப்பு அரசியலில் இருந்து கொண்டு, இந்த பாஸிஸ்டுகள் பெண்களுக்கு எதிராக, தலித்துகளுக்கு எதிராக, எவ்வளவோ கொடுமை களை, செய்துகொண்டு இருக்கின்றார்கள். இப்போது அதையெல்லாம் நான் பேசினேன் என்றால் இன்னும் ஒரு மணிநேரம் ஆகிவிடும். நீங்கள் இப்பவே மிகவும் சோர்வாக இருக்கிறீர்கள். உங்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அதனால் நான் இந்த வேங்கைவயல் சம்பவம் மட்டும் உங்களுக்கு சொல்கிறேன். இதை விட கொடுமையான வன்முறைகளை இந்த பா.ஜ.க. அரசு நிகழ்த்தி இருக்கிறது.

இப்போது இந்த வன்முறைகளை கண்டிப்பதற்கு, SC, ST, atrocity act என்று ஒன்று இருக்கிறது. அந்த SC, ST, atrocity actல் எப்படி எல்லாம் இந்த வன்கொடுமைகளை தடுப்பது? என்று அதுக்கு தண்டனைகள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், அந்த சட்டம் செயல்பட முடியவில்லை. இப்போது சொல்கிறேன். அந்த வேங்கைவயலில் நீர்தொட்டியில் யார் மலம் கழிச்சான்னு இன்னும் கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடித்தால், அவன் மேல், SC, ST act பாயும். இவ்வளவுதான் நம்முடைய சட்டம். அவனைக் காப்பாற்றுவதற்கு அரசு என்ன செய்கிறது? என்று சொன்னால், "ஒரு தாழ்த்தப்பட்டவனே ஏறி, அதுல பேண்டுட்டான்னு" வழக்கை முடிக்க போறாங்க. நம்முடைய தோழர் ஒருவர், ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். அதில் இதை அழகாக, எடுத்து சொல்லியிருக்கிறார்.

ஆகவே, தோழர்களே, நண்பர்களே, நம் முன்னாடி இருக்கக்கூடிய ஒரே வழி, நாம் ரொம்ப கஷ்டப்பட வேண்டாம். கத்தி எடுக்க வேண்டாம், துப்பாக்கி தூக்க வேண்டாம், ரத்தம் சிந்த வேண்டாம், நாம் ஒரே ஒரு கலிமாவை ஓதி அந்த நிமிடத்திலேயே, இந்து மதத்தையும், அது வைத்திருக்கக் கூடிய ஜாதியையும, தூக்கி எறிந்து விடலாம்.

மனிதனோடு மனிதனாக நாம் கலந்து கொள்வதற்கு, நம்மை அனைத்துக் கொள்வதற்கு, ஒரு சமூகம் இருக்கிறது. அந்த சமூகத்தை நோக்கி நாம் போய்விடலாம். அதற்கு ஒரே வழி, நம்முடைய தந்தை பெரியார் அவர்கள் சொன்ன, "இஸ்லாமே அருமருந்து" என்கிற அந்த முடிவை நோக்கி நாம் செல்ல வேண்டி இருக்கிறது. அதைத் தவிர வேறு ஒரு வழியோ, கதியோ இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரே நொடியில் தீண்டாமையை ஒழித்து விடும் என்கிற இந்த நூலை, நான் பேசியதை ஒரு நூலாக போட்டிருக்கிறார்கள். இந்த நூலை கொண்டு வந்து எனக்கு பெருமை சேர்த்தவர், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய நமது தலைவர் குலாம் முஹம்மது அவர்கள். அவர் எனக்கு எப்படி அறிமுகமானார் என்றால், தலைவர் உமர் பாரூக் மூலமாக எனக்கு அறிமுகமானார். அவர் மூலம் கிடைத்த ஒரு அளப்பரிய, அரிய நட்பு. நம்முடைய குலாம் முஹம்மது அவர்களோடு நான் உமர் பாரூக் இருந்த காலத்திலிருந்து தொடர்ந்து பயணித்து வருகிறேன். எனக்கு தெரிந்து, இரண்டு பேர் தமிழ்நாட்டில் இருக்கின்றார்கள்.

ஒருவர் ஜாதி ஒழிப்பே தன்னுடைய வேலை என்று செய்து கொண்டிருக்கின்றார். அவர், என்னுடைய நண்பர் வழக்கறிஞர், குணசேகரன். அவரை நான் “சேகு” என்று கூப்பிடுவேன். அவர் ஜாதி ஒழிப்பு திருமணங்களை தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றார். நான் மதிக்கின்ற, மிகவும் போற்றுகின்ற ஒரு செயலை செய்பவர். இன்னொருவர் யாரென்றால், அண்ணன் குலாம் முஹம்மது அவர்கள்தான்.

“நீ ஏன் இந்து மதத்துல போய் போராடிட்டு கிடக்குற? இந்த ஜாதிகளை போட்டு ஏன் உழன்று கொண்டிருக்கிற? உனக்கு ஒரே ஒரு தீர்வு இருக்கு. நான் இருக்குறேன். ஓடியாந்துருங்க” என்று சொல்கிறார். இந்த பணியை அவர் தலையாய பணியாக எடுத்துக்கொண்டு செய்து கொண்டிருக்கிறார்.

ஆக, தமிழ்நாட்டில் இரண்டு பேர், ஒருவர் வழக்கறிஞர் குணசேகரன். அவர் Intercast Marriageக்கு வேலை செய்கிறார். அவரோடும் நாம் வேலை செய்கிறோம். இந்து மதத்தினுடைய இந்த ஜாதியையும், இந்து மதத்தையும், ஒரே நேரத்தில், ஒரே அடியாக அடித்து, அதிலிருந்து நம்மை விடுவிக்க வேலை செய்பவர் தான் நம்முடைய குலாம் முஹம்மது அவர்கள். இந்த மதமாற்றம் என்பது, பணத்துக்கோ, பொருளுக்கோ, தவறான உறுதிமொழி கொடுத்தோ நம்மை மதம் மாற்றுவது என்றெல்லாம் இல்லை.

நாம் சுதந்திரமாக யோசித்து, நம்முடைய சிந்தனையில் எடுத்துக்கொண்டு செய்ய வேண்டிய ஒரு காரியம் இருக்கிறது என்று சொன்னால், அதுதான் மதமாற்றம். மதம் மாறுவதற்கு முன்பு யோசிக்கலாம். என்ன மதத்துக்கு நாம் போகலாம் என்று! அதில் நாம் பரிந்துரைப்பது இஸ்லாத்துக்கு மாறுங்கள் என்று! ஏனென்றால் அதுதான் சகோதரத்துவத்தை போதிக்கின்றது.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற முழக்கத்தை முன்வைக்கின்றது. ஆகவே, நாம் எல்லோரும் இஸ்லாத்துக்கு சென்று விடுவோம். இந்த தீண்டாமையையும், சாதியையும், இந்து மதத்தையும் புறக்கணித்து விடுவோம் என்று உங்கள் முன்னால் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழர்களே, இந்த நிகழ்வை நடத்துவதற்கு, எனக்கு எல்லா அளவிலும் உதவி செய்த, LV ரங்கராஜன். அவர் இன்றைக்கு கலிமா ஓதி தன்னை முஹம்மதியராக, இஸ்லாமியராக மாற்றிக் கொண்டார் என்ற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். அவருடைய பெயர் இன்று முதல் LV ரங்கராஜ் அல்ல. அவர் முஹம்மது சுல்தான். அவரோட பெயர் சுல்தான், அவர் அரசன் ஆகிவிட்டார்.

அடுத்ததாக, என்னுடைய தம்பி மாயன், இந்த நிகழ்வு நடப்பதற்கு பெரிய அளவில் வேலை செய்தவர். அடுத்து நம்முடைய ஆதித்தமிழர் பேரவை, மாவட்ட செயலாளர், சிவா அவர்கள், திமுகவில் இருக்கக்கூடிய நம்முடைய மாப்பிளை, மாவீரன் அவர்கள், உங்களிடம் குறிப்பிட்டு ஒன்றை சொல்ல வேண்டும்.

அப்துல் ரவூஃப் என்னிடம் சொன்னார், “இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு, நான் உங்களோடு வேலை பார்க்கின்றேன். அவர் என்னை விட சீனியர். என்னை விட மூத்தவர். ஆனால், அவர் சின்னப் பிள்ளை மாதிரி வேலை செய்து கொண்டிருக்கின்றார். இத்தனை பேருடைய முயற்சியினாலும், இந்த நிகழ்விலே கலந்து கொண்டிருக்கக்கூடிய, மாமா செல்லத்துரை, தம்பி சின்னையன், முனுசாமி, அண்ணன் செல்வராஜ், மாப்பிளை சுப்பிரமணி, யோகராஜ், அண்ணன் உமா நாகராஜ், ரேவதி பாபு, ராமன், இவர்களுக்கும், நாத்திகன் அவர்களுக்கும், என்னுடைய அன்புத் தம்பி, தங்கமணி அவர்களுக்கும், இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐயப்பன் அவர்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்ததாக, மதுரையில் இருந்து, இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்து, இந்த இரு நூல்களிலும் ஆய்வுரை நிகழ்த்திய அன்பிற்குரிய நம்முடைய தோழர், விடுதலை வீரன் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்விற்கு வந்து எனக்கு எல்லா உதவிகளையும் செய்த பிரேம் அவர்களுக்கும், ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக, இந்த நிகழ்விற்கு, வல்லப்பகுதியில் இருந்து வந்திருக்கக் கூடிய, என்னுடைய சொந்தங்களுக்கும், அம்பேத்கர் நகரிலிருந்து வந்திருக்கக்கூடிய, என்னுடைய சொந்தங்களுக்கும், எல்லையம்மன் கோயிலில் இருந்து வந்திருக்கக்கூடிய, என்னுடைய அருமை தாய்மார்களுக்கும், சொந்தங்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொண்டு, வாய்ப்பளித்ததற்கும் நன்றி கூறிக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி! வணக்கம்!

**தஞ்சையில் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் நடத்திய நூல் வெளியீட்டு விழாவில் வழக்கறிஞர்.சின்னசாமி அவர்கள் ஆற்றிய உரை**

# நீர் சுருக்கு



**மருத்துவம் - தொடர்**

வெயிலின் தாக்கத்தினால் பாதிக்கப் படுபவர்கள், குழந்தைகளும் வயதானவர்களுக்கு, முதியோர்களுக்கு அடிக்கடி நீர் சுருக்கு ஏற்படும். சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் மற்றும் நீர் அடர் மஞ்சள் நிறத்தில் இருக்கும். சில சமயம் அடிவயிற்றில் வலி இருக்கும்.

இது எதனால் ஏற்படுகிறது? வெளிப்புற வெயில் சூட்டினாலும், போதுமான நீர் அருந்தாமையாலும், சிறுநீரை அதிக நேரம் அடக்குவதாலும் ஏற்படும்.

✧ சித்த மருத்துவத்தில் நீர் சுருக்கு நீங்க சாத்துக்குடி சாறு, ஆரஞ்சு சாறு கலந்து வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிக்க எரிச்சல் தணியும். வாழைத் தண்டு சாறு 30 மி.லி.. குடிக்கலாம்.

✧ நீர்முள்ளி கஷாயம் 30 மி.லி., குடிக்கலாம்.

✧ நெருஞ்சி குடிநீர் இருவேளை குடிக்க சிறுநீர்க் கடுப்பு குறையும்.

✧ சிலாசத்து பற்பமாத்திரை, வெடியுப்பு கண்ணம், வெங்கார பற்பம், குக்கில் பற்பமாத்திரை, ஜலோதாரி மணி போன்ற மருந்துகளை மருத்துவரின் ஆலோசனைப்படி உட்கொள்ளலாம்.

✧ சர்க்கரைநோய் இல்லாதவர்கள் இளநீர், தர்ப்பூசணி உட்கொள்ளலாம்.

✧ சர்க்கரை நோயாளிகள் உடல் சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைப்பது நல்லது. மேலும், மோர் நிறைய குடிக்கலாம்.

✧ முள்ளங்கியை வேகவைத்து அந்த நீரை வடிகட்டிக்குடிக்க நீர்க்கடுப்பு குறையும், மேலும், சுரைக்காய், பீர்க்கு போன்ற நீர்க் காய்களை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ள, சிறுநீர் பெருகும்; நீர் சுருக்கு குறையும்.

✧ வெள்ளைப் பூசணிக்காயை எடுத்து அதன் சதைப் பகுதியை அரைத்து வடிகட்டிக் குடிக்க, நீர் சுருக்கு குறையும். சிறுநீர் நன்கு கழியும். உடல் சூடும் தணியும்,

✧ எந்த வேலையில் இருந்தாலும், நிறைய நீர் அருந்த வேண்டும்.

**Dr.S.அருள் சொருபி**
M.D.(S).,M.A.,(Yoga)
சித்த மருத்துவர் - மேல்மருவத்தூர்



# தோல் அரிப்பு வியர்க்குரு தீர..!

மே முதல் ஆகஸ்ட் வரை தமிழகத்தில் வெயில் அதிகமாக இருக்கும். இதனால் அதிக அளவில் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகளும் வயதானவர்களுமே.... குழந்தைகளுக்கு மருத்துவம் செய்வது எளிது.

ஆனால் வயதானவர்களுக்குச் சிறுநீரகக் கோளாறு. இதய, சர்க்கரை, பி.பி. போன்ற நோய்களுடன் தோல் பிரச்னை சேரும்போது அதனுடன் வெயில் சேர்ந்து அரிப்பு, வியர்வை, வலி எனப் பாடாகப் படுத்தும். வீட்டில் ஏசி இருந்தால் கொஞ்சம் தப்பிக்கலாம். வயதான தாத்தா - பாட்டிகள், திண்ணை மற்றும் முற்றத்தில் படுக்கும் வழக்கமுடைய பெரியவர்கள் ஏசி அறையில் படுக்கமாட்டார்கள்.

**தோல் அரிப்பு, வியர்க்குருவுக்கு...**

அறுகன் தைலம், புங்கன் தைலம் மேல் பூச்சாக காலை, மாலை பூசி ஊறவிட்டுச் சீயக்காய் போட்டுக் குளிக்கலாம்.

உள்ளுக்கு குக்கில், சிலாசத்து, பலகறை, மாத்திரை, பரங்கிப்பட்டை மாத்திரைகளை மருத்துவரின் அறிவுரையின் பேரில் எடுக்கலாம்.

ஏதாவது கை வைத்தியம் சொல்லுங்க டாக்டர். இதுக்குப் போய் நான் மருத்துவமனைக்குப் போகச் சிரமமாக இருக்குன்னு சொல்றவங்களுக்கு.

சந்தனத்தைப் பால் விட்டு அரைத்து உடல் முழுவதும் தேய்த்து ஊறவிட்டுப் பாசிப்பாறு மாவு போட்டுக் குளிக்கவும்,

வேப்பிலை, மஞ்சள் இரண்டையும் அரைத்து அதனுடன் பசுவெண்நெய் கலந்து தேய்த்துக் குளிக்க அரிப்பு, வியர்க்குரு போகும்.

நிறைய தண்ணீர், மோர், இளநீர் குடித்து உடலைக் குளிர்ச்சியாக வைத்துக்கொண்டால் அரிப்பும் வராது.

வேனில் கட்டிகள் வந்தால் அந்தி மல்லி இலையை வதக்கி கட்டி மேல் போட உடையும். மஞ்சளுடன் சோப்பை உரைத்து போட, கட்டி உடையும்.

எந்தத் தோல் பிரச்னை வந்தாலும் பொதுவான மருந்து ஒன்றை நாமே தயார் பண்ணி வைத்துக் கொள்ளலாம்.

அரை லிட்டர் நல்லெண்ணையைப் புகை வரும் அளவு சூடுபடுத்தி அதில் ஒரு கைப்பிடி வேப்பிலை, ஒரு கைப்பிடி குப்பைமேனி இலை, ஒரு கைப்பிடி அருகம்புல் போட்டுப் பொறிந்து வரும் அளவு விட்டுப் பின்பு அடுப்பை அணைத்து விடவும். பின்னர் அதில் மஞ்சள் ஒரு கால் டீஸ்பூன் கலந்து வடிகட்டி எடுத்து வைத்துக்கொண்டு தோல் வியாதிக்கு மேலே பூசி சியக்காய்பொடி கொண்டு கழுவ தோல் நோய் தீரும்.

**நன்றி : முதுமை எனும் பூங்காற்று**

# கருப்பட்டி பயன்கள்



**மருத்துவம் - தொடர்**

உடன்குடி அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் உமாசங்கரி கூறுகிறார்...

'உணவே மருந்து' என்ற கூற்றுப்படி கருப்பட்டி சிறந்த உணவாகவும், மருந்தாகவும் பயன்படுகிறது. இதில் இரும்பு கால்சியம், பொட்டாசியம் சத்துக்கள் அதிகளவில் உள்ளள.

✪ வைட்டமின் பி மற்றும் அமினோ அமிலங்களும் உள்ளதால் நீரிழிவு நோயாளிகள்கூடத் தாராளமாக கருப்பட்டியைப் பயன்படுத்தலாம்.

✪ இது நமது உடலில் ரத்தத்தைச் சுத்தம் செய்து, நாள் முழுவதும் நம்மைச் சுறுசுறுப்புடன் செயல்பட வைக்கிறது.

✪ உடலுக்குக் குளிர்ச்சியையும் தருகிறது.

✪ சீரகத்தை வறுத்துப் பொடித்துக் கருப்பட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால் நன்கு பசி எடுக்கும்.

✪ கருப்பட்டியில் உள்ள கால்சியம் சத்துக்கள் நமது பற்கள், எலும்புகளுக்கு வலுவைத் தருகின்றன. கருப்பட்டியுடன் புளி, ஏலக்காய், எலுமிச்சை பழச்சாறு கலந்த கரைசலான பானகாரம் அருந்துவதால் நீர்க்கடுப்பு, நீர் எரிச்சல் நீங்குகிறது.

✪ கருப்பட்டியில் நார்ச்சத்து உள்ளதால் மலச்சிக்கல் மற்றும் அஜீரணக் கோளாறைப் போக்குகிறது.

✪ பருவமடைந்தபெண்களுக்குச் சம்பா அரிசி, ஏலக்காய், வெந்தயம், உளுந்து, கருப்பட்டி சேர்த்து உளுந்தங்களியாகச் செய்துகொடுக்க கர்ப்பப்பை ஆரோக்கியமாக இருக்கும்.

✪ குழந்தைபிரசவித்த பெண்களுக்கு சுக்கு, மிளகு பொடியுடன் கருப்பட்டி சேர்த்துச் சாப்பிடக் கொடுத்தால் தாய்ப்பால் நன்கு சுரக்கும்..

✪ தாய்ப்பாலை அருந்தும் குழந்தைக்கும் போதிய ஊட்டச்சத்து கிடைக்கும்.

நன்றி : முதுமை எனும் பூங்காற்று





# இஞ்சி துவையல்

**தேவை:** இஞ்சி - ஒரு பெரிய துண்டு, உளுத்தம் பருப்பு - *1* டேபிள் ஸ்பூன் வரமிளகாய் புளி - சிறு நெல்லிக்காய் அளவு, தேங்காய் துருவல் - *1/2* கப், கடுகு - *1* டீஸ்பூன், கறிவேப்பிலை - சிறிதளவு, உப்பு, எண்ணெய் தேவைக்கு,

**செய்முறை:** இஞ்சியைத் தோல்சீவி, கழுவி, சிறு துண்டுகளாக நறுக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும், வரமிளகாய், உளுத்தம் பருப்பு, இஞ்சித் துண்டுகளைப் போட்டு வதக்கவும். சற்றே வதங்கியதும் புளி, தேங்காய்த்துருவல் போட்டு வதக்கவும்: ஆறியதும் மிக்ஸி ஜாரில் போட்டு, தேவையான உப்பு சிறிதளவு தண்ணீர் சேர்த்துக் கெட்டியாக அரைத்தெடுக்கவும். தாளிப்புக் கரண்டியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும், கடுகு, உளுத்தம்பருப்பு சிறிதளவு, கறிவேப்பிலை சேர்த்து தாளித்துக் கொட்டவும். சுவையான இஞ்சித் துவையல் ஜீரணத்துக்கு உகந்தது.

## மதுரையில் ஈத் மிலன் நிகழ்ச்சி

தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் 23/07/2023 அன்று நடத்திய

கடந்த 23-07-2023 அன்று மதுரையில் ஈத் மிலன் நிகழ்ச்சி நடைபெற்றது. இஸ்லாத்தை நோக்கி மக்களை அழைக்கும் இந்த நிகழ்ச்சியில் சகோதர சமூகத்தார்களுக்கு இஸ்லாமிய விருந்தோம்பல் குறித்தும் இஸ்லாம் குறித்தும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் 130க்கும் மேற்பட்ட சகோதர சமூகத்தவர்கள் கலந்து கொண்டார்கள். மதுரை தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் நிர்வாகிகள், ஜாகிர் உசைன், ரஃபீன் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் ஹாஜி முஹம்மது ஜக்கரிய்யா அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.











# ஏழைகளின் தாய் அன்னை ஸைனப்(ரழி)

ஈகை, ஈரமனம், இரக்க குணம், நற்பண்பு இறையச்சம் இவற்றின் நிலைக்களனாக நின்றியங்கிய ஒரு மாதரசியை வரலாறு நமக்கு இனம் காட்டுகிறது.

மக்காவில் உயர்குலம் என்றறியப்பட்ட குரைஷி குலத்தில் உச்ச அந்தஸ்தைப் பெற்ற ஹாசிம் கிளை யில் பிறந்தார். இவரின் தாய் உமைமா அவர்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்களின் தந்தை அப்துல்லாஹ்வின் உடன் பிறப்பு. இவரின் தாய் மாமன் ஹம்சா(ரழி) அல்லாஹ்வின் சிங்கம் என்ற புகழுக்குரியவர். இவரின் சகோதரர் அப்துல்லாஹ்(ரழி) இஸ்லாத்தின் படைத்தளபதி. அண்ணல் நபி(ஸல்) அவர்களின் மாமி மகள் தான் அந்த மாதரசி. இவர் தான் ஸைனப் பின்த் ஜஹ்ஷ்(ரழி) அவர்கள்.

இஸ்லாமியச்சுடர் மக்கா மண்ணில் வெளிச்சம் காட்டத் தொடங்கிய தொடக்க நாட்களில் தெளிந்த இதயம் கொண்ட சிலர் அந்த தூய நெறியை ஏற்க முன் வந்தனர். அன்னை ஸைனப்(ரழி) அவர்கள் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள். அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறுதித் தூதராக, இறைத்தூதர்கள் என்ற அருள் வெளிப்பாட்டுச் சங்கிலித் தொடரின் இறுதிப் பெருங்கருணையாக அங்கீகாரம் பெற்றபோது ஸைனப்(ரழி) அவர்களுக்கு ஏறக்குறைய வயது முப்பது. அந்த வயதிலேயே அறியாமையின் இழிவையும் ஏகத்துவத்தின் ஒளியையும் தரம்பிரித்தறியும் ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தார் அன்னை ஸைனப்(ரழி).

இதனால் மாதர் குலத்தின் மணிமகுடமாக, ஒழுக்கம், ஈகை, பேணுதல், நல்லறம் இவற்றின் வடிவமாக அவர்கள் திகழ முடிந்தது.

மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்கள் போன்று சமமானவர்களே என்ற கோட்பாட்டை நிறுவினார்கள் அண்ணல் நபி(ஸல்). வெறும் முழக்கமாக கோஷமாக மட்டுமே அது இல்லாமல் நடைமுறையில் செய்து காட்டவும் முனைந்தார்கள். முடித்தார்கள். ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் ஸைனப் பிந்த் ஜஹ்ஷ்(ரழி)வின் இல்லத்துக்கு வருகை புரிந்தார்கள். தன் முன்னாள் அடிமையும் வளர்ப்பு மகனுமான ஸைத் பின் ஹாரிஸா(ரழி) அவர்களுக்கு ஸைனப்(ரழி)யை பெண் கேட்டார்கள். அடிமை எஜமான், உயர்குலம் தாழ்குலம் என்ற பாகுபாட்டில் மூழ்கித் திளைத்திருந்த ஒரு சமுதாயத்தில் சமத்துவப் புரட்சியை சாதித்திட முனைந்தார்கள் முஹம்மது நபி(ஸல்) அவர்கள். அதுவும் தன் குடும்பத்திலிருந்தே அந்தப் புரட்சியை தொடங்க வேண்டும் என விரும்பினார்கள்.

அண்ணலாரின் இந்தநோக்கத்தை அன்னை ஸைனப்(ரழி) அறிந்திருக்கவில்லை. ஸைதை மணமகனாக ஏற்க நான் விரும்பவில்லை என்றார்கள். மறுக்க வேண்டாம் ஸைனபே... ஸைதை வாழ்க்கைத்துனையாக ஏற்றுக் கொள் என மீண்டும் வலியுறுத்தினார்கள். நபி(ஸல்) அவர்கள் வலியுறுத்துவதை உணர்ந்த அன்னை ஸைனப்(ரழி) கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதரே... என்னிடம் இதை நீங்கள் கட்டளை யாகக் கூறுகிறீர்களா? இருவருக்குமான உரையாடல் இப்படித் தொடர, அல்லாஹ்வின் வசனம் வாகாய் இறங்கியது.

அல்லாஹ்வும் அவனின் தூதரும் ஏதேனும் ஒன்றை முடிவு செய்துவிட்டால் இறைநம்பிக்கையுள்ள ஆண் பெண் யாருக்கும் தங்களின் விஷயத்தில் சுய கருத்துக் கொள்ள உரிமையில்லை. அல்லாஹ்வும் அவனின் தூதருக்கும் மாறு புரிவோர் நிச்சயம் தெளிவான வழிகேட்டில் உள்ளனர். (அல்குர்ஆன் 33:36)

இந்த வசனத்தைச் செவியுற்றதும் அன்னை ஸைனப் கேட்டார்கள்:

அல்லாஹ்வின் திருத்தூதரே.. நான் ஸைதை மணமுடித்துக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? ஆம் என்றார்கள் நபியவர்கள். அன்னை ஸைனப்(ரழி) கூறினார்கள். நான் ஸைத்(ரழி)யை கணவராக ஏற்றுக் கொள்கிறேன். இறைத்தூதரின் வார்த்தைக்கு மாறு செய்ய ஒரு போதும் துணிய மாட்டேன். (நூல் இப்னு கதீர், ஃபீழிலாலில் குர்ஆன்)

திருமணம் நடந்தேறியது. ஆனால் ஸைத்(ரழி) ஸைனப்(ரழி) தம்பதியின் வாழ்க்கை சிறப்பாக அமையவில்லை. ஸைத்(ரழி) ஸைனப்(ரழி)யை விவாக விடுதலை செய்தார். தம்பதியர் இருவரும் மனமொப்பி வாழ்ந்திட இயலாத நிலை ஏற்படும் போது ஊருக்காக ஒப்பனை வாழ்க்கை வாழ முயல்வது பென்னம் பெரும் பிரச்சனைகளுக்குக் காரணமாகிவிடுகிறது. எனவேதான் தலாக் என்றொரு வழியை இஸ்லாம் காட்டுகிறது. ஆயினும் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோவென தலாக்கை வீசுவதை மாபாவம் எனக் கண்டிக்கிறது இஸ்லாம். விவாக விடுதலை என்ற உரிமையை ஆணுக்கும் பெண்ணுக்கும் தந்துள்ளது இஸ்லாம்.

ஹஜ்ரத் ஸைத்(ரழி) யிடமிருந்து விவாக விடுதலைபெற்று இத்தா (காத்திருப்பு ) காலம் முடிவடைந்த பின் அண்ணல் நபி(ஸல்) அவர்களுக்கும் அன்னை ஸைனப்(ரழி)க்கும் திருமணம் நடைபெற்றது. இந்தத் திருமணத்தை எல்லாம் வல்ல அல்லாஹ்வே நடத்திவைத்தான். இதை அல்குர்ஆன் 33: 37 வசனம் எடுத்துரைக்கிறது. பெண்ணின் காப்பாளர் (வலீ) சாட்சிகள் ஏதுமின்றி நடந்த திருமணம் அது. அன்னை ஸைனப் அவர்கள் அண்ணல் நபி(ஸல்)யின் மற்ற மனைவியரிடம் இப்படி பெருமை பொங்கக் கூறிடுவார்கள்: உங்களையெல்லாம் உங்கள் குடும்பத்தினர் திருமணம் செய்து வைத்தனர். ஆனால் என் திருமணத்தை ஏழு வானங்களுக்கு மேலிருந்து எல்லாம் வல்ல அல்லாஹ் நடத்தி வைத்தான். (நூல்: புகாரி)

தன் தாய் மாமனின் மகனான அண்ணல் நபி(ஸல்) அவர்களையே கணவராகப் பெற்றதிலிருந்து உம்முல் முஃமினீன் இறை நம்பிக்கையாளர்களின் தாய் என்ற உச்ச நிலைக்கு உயர்ந்தார்கள் அன்னை ஸைனப்(ரழி) அவர்கள். இவர்களின்

மாண்புகளை அன்னை ஆயிஷா(ரழி) கூறுகிறார்கள்.

எங்களின் அன்புக் கணவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களிடத்தில் அன்பையும் நெருக்கத்தையும் பெறுவதில் ஸைனப்(ரழி) என்னை மிகைத்துவிடுவார். இறைவனுக்கு அஞ்சுவதில், மெய்யுரைப்பதில், உறவினரைச் சேர்ந்து வாழ்வதில், வாரிவழங்குவதில், கொள்கைப்பிடிப்பில் ஸைனப் பின்த் ஜஹ்ஷ்(ரழி)யை விடச் சிறந்த எந்தப் பெண்ணையும் நான் கண்டதேயில்லை. (நூல்: முஸ்லிம்)

ஈகையில் ஈடுஇணையற்றுத் திகழ்ந்தார்கள். தோல் பதனிட்டு அதனைத் தைத்து விற்பனை செய்து வருமானம் ஈட்டி ஏழைகளுக்கு அதனை வழங்குவார்கள். தர்மம் வழங்குவதில் அவர்கள் காட்டிய சிரத்தையினால் அந்த உம்முல் முஃமினீன் (இறைநம்பிக்கையாளர்களின் தாய்) அவர்களுக்கு வரலாறு இன்னொரு பெயரையும் வழங்கிற்று. உம்முல் மஸாகீன், ஏழைகளின் தாய் என்ற பெயரிலும் வரலாறு இவர்களை வர்ணிக்கிறது.

ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் தம் மனைவியரிடம் உரையாடிக்கொண்டிருக்கும் போது சொன்னார்கள்: உங்களில் யாருடைய கைகள் நீளமாக இருக்கின்றனவோ அவர்தான் நான் அல்லாஹ்விடம் சென்றடைந்தபின் என்னிடம் விரைவாக வந்தடைவார். (அதாவது, நான் இறந்தபின் என் மனைவிமார்களில் முதன் முதலாக மரணத்தைத் தழுவுபவர் யாரெனில் யாரின் கரங்கள் நீண்டிருக்கின்றதோ அவர்தான்) அன்னை ஆயிஷா(ரழி) கூறுகிறார்கள். அண்ணலார்(ஸல்) இப்படிக் கூறியதிலிருந்து அவர்களின் மனைவியரான நாங்கள் எங்களின் கைகளை சுவரில் வைத்து அளந்து பார்த்துக் கொண்டிருந்தோம். அண்ணலார்(ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின்னர் நாங்கள் சந்தித்துக் கொள்ளும் போதெல்லாம் அப்படி அளந்து பார்த்துக் கொள்வதுண்டு.

அன்னை ஸைனப் பின்ந் ஜஹ்ஷ்(ரழி) அவர்களோ குட்டையானவர்கள். ஆனால் அவர்கள் தான் நபி(ஸல்) அவர்களின் மறைவுக்குப்பின் முதல் முதலாக இறைவனிடம் சென்றடைந்தார். பின்னர் தான் எங்களுக்குப் புரிந்தது நீண்ட கரங்களுடையவர் என்பதன் பொருள் அதிகமாக தானதர்மம் செய்பவர் என்று.

தங்களின் வாழ்வாதார வசதிகளைப் பூர்த்தி செய்துகொள்ள போதுமான வாய்ப்புகள் இருந்த போதும் தர்மம் செய்வதற்காகவே கைத்தொழில் செய்து லாபமீட்டி அதை ஏழைகளுக்கு வழங்கி மகிழ்ந்திட்ட அந்த மாதர்குல மாணிக்கம் தனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவைகளையும் வாரி வழங்கிடவே செய்தார்கள்.

பரஸா பிந்த் ராபிஃ(ரழி) என்ற பெண்மணி கூறுகிறார். ஹஜ்ரத் உமர்(ரழி) அவர்கள் ஏராளமான அன்பளிப்புக்களை அன்னை ஸைனப்(ரழி) அவர்களுக்குக் கொடுத்து அனுப்பினார்கள். இவையனைத்தும் உங்களுக்கே. நீங்களே பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றும் கூறி அனுப்பியிருந்தார்கள். பொருள்கள் வந்து சேர்ந்தன, அவற்றைக் கண்ட அன்னை ஸைனப்(ரழி) சுப்ஹானல்லாஹ். என்னை விட தேவையுடையோர் அதிகமாக இருக்க, இந்த அன்பளிப்புகளை எனக்கு அனுப்பி வைத்திருக்கிறாரே இந்த உமர்! உமர்(ரழி)யை அல்லாஹ் மன்னிப்பானாக! எனக் கூறியபடியே அருகிலிருந்த எங்களிடம், அவற்றை கீழே கொட்டி அவைமீது ஒரு துணியைப் போட்டு மூடுங்கள் என்று கூறினார்கள். அப்படியே செய்தோம்.

பின்னர் அதை உறவினர்களுக்கும் அனாதைக் குழந்தைகளுக்கும் கொடுத்தனுப்பினார்கள். எனக்கும் தந்தார்கள். எனக்குத் தந்ததை நான் எண்ணிப்பார்த்தேன். அதில் எண்பத்து ஐந்து வெள்ளிக்காசுகள் இருந்தன. எல்லாவற்றையும் வழங்கி தீர்த்துவிட்ட பின்னர் வானத்தை நோக்கி தன்னிரு திருக்கரங்களையும் உயர்த்திக் கூறினார்கள்: “என் இறைவா... இனி உமர்(ரழி)யிடமிருந்து அன்பளிப்பு எதுவும் எனக்கு வர வேண்டாம்.”

மரண வேளையிலும் தர்மம் கொடுப்பதிலேயே நாட்டம் கொண்டிருந்தார்கள். எல்லாம் வல்ல இறைவனை நோக்கிய அந்த இறுதிப் பயணத்தின் போது தன் தோழிகளிடம், இதோ நான் எனக்குரிய கஃபன் ஆடையை ஏற்பாடு

செய்து விட் டேன். ஆனால் ஆட்சித் தலைவர் உமர்(ரழி) அவர்கள் என் இறப்புச் செய்தியைச் செவியுற்றால் எனக்கொரு கஃப்பன் துணியை அனுப்பி வைப்பார். அப்போது கஃப்பன் துணி இரண்டாக ஆகிவிடும். எனவே அதில் ஒன்றை தர்மம் செய்துவிடுங்கள், என்று வலியுறுத்திக் கூறினார்கள். அது மட்டுமா? அதனைத் தொடர்ந்து அன்னை உதிர்த்த இன்னொரு சொற்றொடர் நம் நெஞ்சங்களில் அவைகளை கல்வெட்டு போல் பதிய வைத்துவிடுகின்றது. என்னை நீங்கள் கப்ரில் அடக்கம் செய்தபின் இப்போது நான் உடுத்தியுள்ள ஆடைகளையும் தர்மமாக வழங்கிவிடுங்கள்.

இறுதி மூச்சுவரை ஏழைகளுக்காக இரங்கிய ஏழைகளின் தாய் அன்னை ஸைனப் பிந்த் ஜஹ்ஷ்(ரழி) அவர்கள் உமர்(ரழி) ஆட்சி காலத்தில் ஹிஜ்ரி 20ம் ஆண்டில் தனது 53வது வயதில் அழியாத உலகத்தை நோக்கிப் பயணம் மேற்கொண்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இஸ்லாமிய வரலாற்றில் வரையிட்டுக் காட்டப்படும் அன்னையின் தயாள குணம் நம் அனைவரையும் ஆட்கொள்ளவேண்டும். (இன்ஷா அல்லாஹ்)

இஸ்லாமிய வரலாற்றில் அதன் முதல் தலைமுறையைச் சார்ந்த பெண்கள் ஒவ்வொருவரும் ஒரு சாதனையாளராகவே வாழ்ந்தார்கள். ஒருவர் வீரத்தின் வரலாறாய் வாழ்ந்தார் என்றால் மற்றவர் ஈகையின் இலக்கணமாய் வாழ்ந்தார்கள். மற்றவரோ பொறுமையைப் போதித்தார்கள், அதில் சாதனை படைத்தார்கள். இப்படி சாதனைப் பெண்களின் குழுமமாக அவர்கள் வாழ்ந்து சென்றார்கள். இன்றும் வரலாறாய் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நம்மையும் சாதிக்க தூண்டுகின்றார்கள்.

இந்தப் பென்னம்பெரிய பெண்ணினத்தைப் பார்த்து அவர்களுக்கு உரிமையே இருக்கவில்லை என்கின்றபோது அவர்களைப் பார்த்துச் சிரிக்கத் தோன்றுகின்றது.

நூல்கள்: புகாரி, முஸ்லிம், இப்னு கதீர், ஃபீழி லாலில் குர்ஆன், இப்னு சஅத்.

**எம்.ஜி.எம்.**


**குஜராத்:2002**

**பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான கொடூரங்கள்**

**விலை 150/-**




- கற்பழிப்புக்கு சம்பவங்களை (சிறுமிகள் உள்ளிட்ட) நேரில் கண்டவர்களின் வாக்குமூலங்கள் :
- நரோதாபாட்டியா, அஹமதாபாத், பிப்ரவரி 28, 2002. "கங்கோத்ரி குடியிருப்பிலிருந்து எங்களை வெளியேற்றிய பிறகு எரியும் டயர்களோடு கும்பல் எங்களைத் துரத்த ஆரம்பித்தது. அப்போதுதான் பல சிறுமிகளை அவர்கள் கற்பழிப்பு செய்தார்கள், நாங்கள் 8–10 சம்பவங்களைக் கண்டோம். பதினாறு வயது மெஹருன்னிஸாவின் ஆடைகளை உரித்ததை நாங்கள் பார்த்தோம். தங்களின் ஆடைகளை அவிழ்த்து விட்டு அவர்கள் பெண்களை நோக்கி அழைத்தார்கள். அதன் பிறகு அங்கங்கே தெருவிலேயே வைத்து அவர்கள் பெண்களை கற்பழிப்பு செய்தார்கள். ஒரு சிறுமியினுடைய பெண் உறுப்பு வெட்டி பிளக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். பிறகு எல்லோரையும் எரித்து விட்டார்கள். எந்த ஆதாரத்தையும் விட்டு வைக்க வில்லை."

கூறியவர் : குல்சும் பீவி, ஷா ஆலம் முகாம் – மார்ச் 28, 2002.

**வேர்கள்**
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

**போன் : 7401213394 / 7358278146 / 8148129887**

# அப்பாஸியப் பேரரசி
# சுபைதா

நபிகள் நாயகம் மறைவுக்குப்பிறகு 100 ஆண்டுகளுக்குப்பின் ஆட்சிபுரிந்த கலீபாக்களில் மிகவும் புகழ்வாய்ந்தவர் அப்பாஸிய கலீபா ஹாரூன் அல்ரஷீது ஆவார்.

ஆப்ரிக்கா கண்டத்தில் மொரோக்கோ முதல் கிழக்கே மத்திய கிழக்கு வரையிலும் பாரசீகம் உட்பட்ட பரந்து விரிந்த நிலபரப்பை ஆண்ட ஆட்சியாளர் கலீபா ஹாரூன் அல்ரஷீது.

கி.பி 752-ம் ஆண்டு அல்மன்சூர் அப்பாஸியா பேரரசை நிறுவினார். இவர் உம்ராவை நிறைவேற்ற மக்கா சென்றார். மாறு வேடம் பூண்டு நகர் சுற்றும்போது அடிமைகளை ஏலமிடும் சந்தையை பார்த்தார். அழகிய ஓர் அடிமை நாலு வயது சிறுமியை ஏலத்தில் வாங்கி பக்தாது அழைத்து வந்தார்.

கலிபா அல்மன்ஸீர் காலமாகி மகன் அல்மஹ்தி அப்பாஸிய கலீபாவானார் அரண்மனையில் வளர்ந்த அடிமை கைசுரன் இளம்மங்கையாக இருந்தார். கி.பி. 775 -ல் கலீபா அல்மஹ்தி கைசுரனை திருமணம் செய்தார். அடிமை பெண்ணாக வந்து பேரரசியானார். இத்தம்பதிகளுக்கு ஒரு மகளும், இரண்டு ஆண்மக்களும் பிறந்தனர். இரண்டாவது மகன் மூஸா அல்ஹாதி இளம் வயதில் காலமானார். மூன்றாவது மகனே ஹாரூன் அல் ரஷீது ஆகும்.



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

கலீபா அல்மஹ்தி காலமாகி கி.பி 782 -ல் மகன் ஹாரூன் அல் ரஷீது வயது அப்பொழுது 7. இவ்வயதில் பட்டம் சூட்டப்பட்டு தாய் கைஸூறன் நிர்வாகத்தை நடத்தினார். தாய் கைசுரன்சி கி.பி 789 -ல் காலமானார். அரசிமறைவுக்குப்பிறகு 11 வயது மகன் ஹாரூன் அல் ரஷீது கலீபாவானார். புத்தி கூர்மை, கல்வி அறிவு, வீரம் யாவும் அமையப்பெற்றவர் இளம் கலீபா ஹாரூன் அல்ரஷீது. வாலிப வயதடைந்ததும் பெரும் படை நடத்தி மத்திய கிழக்கு நாடுகள் பாரசீகம் மேற்கே மொராக்கோ வரையிலும் வட

ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள அனைத்து நாடுகளும் இன்று இஸ்லாமிய நாடுகளாகவும் அரபி ஆட்சி மொழியாகவும் பேசும்மொழியாகவும் ஆனதற்கு காரணமாவர்.

பேரரசி சுபைதா அப்பாஸிய கலீபா அல்மன்சூரின் மகள் வழி பேத்தியாகும். இவரின் அழகில் மயங்கியோர்வெண்ணெய் பந்து என செல்லமாக இவரை அழைத்தனர். இவர் எந்த உடை அணிந்த போதிலும் வெளியே செல்லும்போது புர்கா அணியக்கூடியவராக இருந்தார். மேலும் குர்ஆனை மனனம் செய்ததோடு ஐவேளை தொழுது இறையச்சமுடையவராக வாழ்ந்தார்.

அரண்மனையில் உள்ள தோழி பெண்களையும் பணி பெண்களையும் அடிமை பெண்களையும் குர்ஆனை மனனம் செய்ய வைத்து தாமும் தோழிகளும் அதன்படி ஒழுக வைத்தார்.

திருமணத்திற்குப்பிறகு கலீபா ஹாரூன் அல்ரஷீதிடம் மக்கா சென்று உம்றா செய்ய வேண்டிய போது நாட்டுநிலை இப்போதைக்கு சரியில்லை நீங்கள் சென்று உம்ரா செய்யுங்களென கலீபா சொன்னார். தோழிகள் புடைசூழ அரசி சுபைதா புறப்பட்டார்.

பாதை சரியில்லாததால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. வீரர்களே நீங்கள் ஏன்? இவ்வழி வருகிறீர்கள். வழி கரடுமுரடாக இருக்கிறதே என ராணி வினா எழுப்பினார். இவ்வழியாகத்தான் நாங்களும் கலீபாக்களும் சென்று வருகிறோம். என வீரர்கள் சொன்னார்கள். சுமார் 75 நாட்களுக்குபிறகு ராணியும் குழுவினரும் மக்காநகர் வந்தனர்.

மக்கா சேர்ந்த ராணி சுபைதா குழுவினர் உம்ரா செய்து அரண்மனையில் தங்கினர். அவர்களைப் பார்க்க முக்கிய பிரமுகர்கள் அரண்மனை வந்தனர். மக்கா நகரில் குடிநீர் பஞ்சம் அதிகமாக உள்ளது. நீர் பஞ்சம் நீங்க ஆவணச் செய்ய வேண்டினர்.

புனித ஜம்ஜம் கிணறு இருக்கிறது ஆனால் நீர் குறைவு என்றனர்.

நீரூற்று நிபுணர்களை அழைத்து விசாரித்து அவர்கள் அபிப்பிராயப்படி மக்களுக்கு பொருளாதார வசதி இல்லாததால் ஆளப்படுத்த முடியவில்லை. மேலும் அரபா மைதானில் துல்ஹஜ் 9 -ல் ஹஜ்ஜில் மக்கள் கூடும்போது நீருக்காக கஷ்டப்படுகிறார்கள் நீங்கள் நீருக்காக ஏற்பாடு செய்யுங்கள் என வேண்டுகோள் விட்டனர்.

மக்கா நகரின் கிழக்கே அல்ஹுனைன் நீரூற்றுள்ளது. அங்கிருந்து 95 கிலோ மீட்டர் நீளமுள்ளது மக்கள் அரபாவிற்கு பீப்பாய்களிலும் தோல்பைகளிலும் நீர் கொண்டு வருகிறார்கள் இது ராணி நினைத்தால் நடக்கும்மென நீரூற்று நிபுணர்கள் கூறினர்.

நீரூற்று நிபுணர்கள் அல்ஹுனைன் நீரூற்றிலிருந்து கால்வாய் வெட்டி அரபா கொண்டு போகலாமென ஆலோசனை சொன்னார்கள். மேலும் ஸம் ஸம் ஆளப்படுத்தவும் நீரை அரபா கொண்டு போகவும் சுமார் 20 லட்சம் தீனார் ஆகுமென கூறினார்கள்.

இருபணிகளையும் விரைவாக நிறைவேற்றுங்கள் இன்ஷா அல்லாஹ் அடுத்து நான் உம்ரா செய்ய வரும்போது பணி நிறை வடைந்திருக்கவேண்டுமென கட்டளையிட்டார்.

சுபைதா பாதை (Dash Sabayda) ராணி சுபைதா கலீபா ஹாரூன் அல்ரஷீதிடம் விபரங்களை சொன்னார். அவர் நீங்கள் உம்ராவுக்குச் சென்று தண்ணீர் பஞ்சத்தை போக்க ஏற்பாடு செய்தமைக்கு பாராட்டுகிறேன். மக்களும் பாராட்டுவார்கள். யாருக்கும் தோன்றாத மக்கள் சேவையை செய்ய துணிந்துள்ளீர்கள் என பாராட்டினார்.

கூஃபா நகரிலிருந்து மக்கா நகர் வரை 1500 கிலோமீட்டர் மேலும் பலவழிகள் அமைக்கப்பட்டு தங்கும் விடுதிகளும் அமைக்கப்பட்டது. நாங்கள் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்த போது மலைகளை ஒட்டியபகுதியில் பெரிய நீரோடை தென்பட்டது (கட்டுமானத்தோடு) எங்களோடு இருந்த மௌலவி அல்தாப் தாவூதி இது ராணி சுபைதா காலத்தில் நீர் கொண்டு போன ஓடையென்றார்.



குழந்தை வளர்ப்பு - தொடர்

# குழந்தைகளும் – தொலைக்காட்சியும்

பள்ளிகளும், கல்லூரிகளும் திறந்து ஒரு புதுப்பொலிவோடும், புது உத்வேகத்தோடும், புது உற்சாகத் தோடும், புது ஆடைகளோடும் கல்விக் கூடங்கள் நோக்கி விரைந்து கொண்டிருப்பார்கள் மழலைகள்.

அவர்கள் மனமும் அறிவும் வளர்ந்திட அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்!

இந்த ஓட்டத்தில் - விறுவிறுப்பான வாழ்க்கையில் அவர்கள் நேரத்தை, காலத்தை கண்போல் காத்திட வேண்டும். தங்களுக்கு கிடைக்கும் நேரத்தை கணக்குப்பார்த்து செலவு செய்திட வேண்டும். எதை வேண்டுமானாலும் விரயம் செய்யலாம். ஆனால் அவர்கள் நேரத்தை மட்டும் விரயம் செய்திடக் கூடாது.

இப்படி அவர்கள் நேரத்தை காலத்தை கணக்குப்பார்த்து செலவு செய்வதில் குறுக்கே நிற்பது தொலைக்காட்சிகள். அதுபோல் மலிவாகக் குவிந்து கொண்டிருக்கும் சி.டி. என்ற குறுந்தட்டுகள் என்பனவை தாம்.

உண்மையான தொலைக்காட்சி (RealTelevision) என்ற நிறுவனம் நடத்திய ஆய்வு ஒன்றில் பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்திருக்கின்றன. இந்த உண்மைகள் பெற்றோர்கள் அறிவார்ந்த மாணவர்கள் இவர்களின் கண்களைத் திறக்கும் என்பதால் அவற்றை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்.

மாணவர்கள் - இளைஞர்கள் இவர்கள் தொலைக்காட்சியில் செலவு செய்யும் நேரம்தான் மிகவும் அதிகம்.

மழலைகள் - மாணவர்கள் மாணவிகள் ஒரு நாளைக்கு நான்கு வேளைகள் தொலைக்காட்சியில் நேரத்தை தொலைக்கின்றார்கள்.

அ) காலையில் ஆ) மதிய உணவு இடைவேளையில் இ) மாலையில் வீடு திரும்பியவுடன் ஈ) இரவில், சில நாள்களில் இரவின் பிந்தியப் பகுதி வரை என தொலைக்காட்சியில் செலவு செய்யும் நேரம் தொடருகின்றது.

இஃதல்லாமல் தங்களுக்கு விருப்பமானவை என எண்ணிடும் வேடிக்கைகளின் சினிமாக்களின் குறுந்தட்டுகள் இதர நிகழ்ச்சிகளின் குறுந்தட்டுகள் என இன்னும் காலம் கரைகிறது. அதேபோல் வார விடுமுறைகளில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் என தொலைக்காட்சியோடு போகும் நேரங்கள் மிகவும் அதிகம்.

ஆறாம் வகுப்புக்குள் நுழையும் ஒரு மாணவன் அல்லது மாணவி இன்றைய காலங்களில் 2000 (இரண்டாயிரம்) மணி நேரங்கள் வரை தொலைக்காட்சியைப் பார்ப்பதில் செலவு செய்திருப்பார்கள். அவர்கள் உயர்நிலை (பள்ளிக்கூட ) கல்வியை முடித்திடும் போது 20,000 (இருபதாயிரம்) மணிநேரங்களைத் தொலைக்காட்சியில் தொலைத்திருப்பார்கள்.

ஒரு மாணவன் அல்லது மாணவி தொலைக்காட்சியில் விரயம் செய்யும் இந்தக் காலம் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி தன் வகுப்பறைகளில் செலவு செய்யும் காலத்தை விட அதிகமானது.

குழந்தைகள் வேறு எந்த தனிச் செயலுக்கும் (Single Activity) அல்லது வேறு எந்த குறிப்பிட்ட பணியிலும் இவ்வளவு நேரத்தைச் செலவு செய்ததில்லை. செய்வதுமில்லை.

(நன்றி: *Youth, Aug 2004*)

மேலே நாம் குறிப்பிட்டுக் காட்டியவை பல உண்மைகளை நமக்கு உணர்த்தும்.

பள்ளிக் கூடங்களில் கற்றுக் கொடுக்கும் பாடங்களைவிட அதிகமான பாடங்களை இந்தத் தொலைக்காட்சிகள் கற்றுக் கொடுக்கின்றன.

ஆசிரியர்களும் அவர்கள் கற்றுக்கொடுக்கும் பாடங்களும் மாணவர்களின் மனதில் ஏற்படுத்தும் தாக்கங்களைவிட அதிகமான தாக்கங்களை இந்தப் பாடங்கள் (தொலைக் காட்சிகள்) ஏற்படுத்தும்.

பெற்றவர்களை குழந்தைகள் பின்பற்ற நினைப்பதைவிட இந்தத் தொலைக்காட்சியில் வரும் கதாப்பாத்திரங்களையே அதிகமாகப் பின்பற்றத் துடிப்பார்கள்.

நாம் (விடியல் வெள்ளியில் - இப்போது வைகறையில்) அடிக்கடிச் சுட்டிக்காட்டுவதைப் போல் Seeing is Believing தொலைக்காட்சியில் வருகின்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பது என்பது அவற்றை அப்படியே நம்புவது என்றாகிவிடும். ஆகவே மழலைகளிடம் - மாணவிகளிடம் மாணவர்களிடம் அதிகமாக ஆதிக்கம் செலுத்துபவை, தாக்கங்களை உருவாக்குபவை தொலைக்காட்சிகள்தாம்.


குழந்தைகளைப் பேணி வளர்க்க விரும்பும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஒன்றை நன்றாக மனதில் பதிக்க வேண்டும். இவர்கள் இருவரையும் வலுவில் விஞ்சும் ஊடக மொன்று மாணவர்கள் மனதில் ஆதிக்கம் செலுத்துகின்றது. அதில் நமது கண்காணிப்பு அவசியம்.

குழந்தைகளின் மனநிலையை (Attitude) உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன இந்த ஊடகங்கள். குறிப்பாக தொலைக்காட்சி, தற்காலங்களில் ஏற்படுத்திவரும் தாக்கங்களைக் குறித்த ஆய்வு ஒன்றை நடத்தி இருக்கின்றது பிரான்ஸ் நாடு. அதேபோலவே ஷக்கீல் ஷேஹ் என்ற சமுதாயவியல் வல்லுநர் ஒருவரும் ஓர் ஆய்வை நடத்தி இருக்கின்றார். இந்த ஆய்வுகளை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்.

தொலைக்காட்சியை குழந்தைகள் தொடர்ந்து பார்ப்பதால் மூர்க்கத்தனமும் முரட்டுத்தனமும் அதிகமாக அவர்களிடம் வளருகின்றன. இதனை ஆராய்ச்சியாளர்கள் (a.k.a. Violence) மூர்க்கத்தனமான தாக்குதல் மனப்பான்மை என்று குறிப்பிடுகின்றார்கள்.

அமெரிக்காவில் பள்ளிக் குழந்தைகள் அடிக்கடி கொலை செய்வதையும் இன்னும் முரட்டுத்தனமான செயல்களில் ஈடுபடு வதையும் இங்கே நாம் நினைவுகூர வேண்டும். வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் குழந் தைகளையும் சகமாணவர்களையும் கொலை செய்யும் செய்தி நித்திய நிகழ்ச்சிகளாகி விட்டன.

ஒரு சாராரிடம் கொலைபாதகங்களைச் செய்ய தூண்டும் இந்த ஊடகங்கள் இன்னொரு சாராரை ஒரு மந்த நிலைக்கே கொண்டு சென்று விட்டன. ஆமாம்! குழந்தைகள் வெகு நேரம்



**1. It Can Permanently Damage The Brain Structure Of Your Toddler:**

According to research, watching too much TV can permanently change your toddler's brain structure. [2]

Drop It Baby
@Drop_It_Baby · Follow

Many parents tend to leave the TV on for hours at a time, even if no one's watching. Adults hardly even notice the TV noise anymore, but children are easily distracted by it. This constant distraction can have negative effects on a toddler. #parenting parentology.com/study-tv-backg...

6:35 AM · Nov 8, 2019

1 Reply Share

Read more on Twitter

தொலைக்காட்சியின் முன்பே அமர்ந்திருப்பதால், அவர்கள் சுறு சுறுப்பை இழந்து விடுகின்றார்கள். ஒருவித மந்த நிலையை அடைந்துவிடுகின்றார்கள். எல்லாம் அவர்கள் முன் வந்து நிற்க வேண்டும் என விரும்புகின்றார்கள்.

இதை ஆய்வாளர்கள், "Sedentary Life Style" எனக் குறிப்பிடுகின்றார்கள். அதாவது உற்சாக மில்லாத வாழ்க்கை முறை என்கின்றார்கள்.

இதில் ஏற்படும் மிகப்பெரிய இழப்பு என்னவெனில் மாணவர்கள் மாணவிகள் தங்களது தன்னார்வத்தை இழந்து விடுகின்றார்கள். அதாவது தங்களுக்குள் ஓர் ஆர்வத்தை வளர்த்துக்கொண்டு அறிவைத் தேடுவதை விடுத்து தாங்கள் ஓரிடத்தில் அமர்ந்து வருவதை (தொலைக்காட்சியில் தெரிவதை) எதிர்பார்த்திருக்கும் ஒரு மனநிலையை ஒரு சாராரிடம் வளர்த்துள்ளது.



அதிக நேரம் தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களின் மனவளமும் சிந்தனை திறனும் பல நேரங்களில் உடல் வளமும் பாதிக்கப் படுகின்றது.

ஆன்மீக ஈடுபாடுகளும் வளர்ச்சிகளும் அற்றுப் போகின்றன. இதனால் ஒழுக்கக்கேடுகள் பிஞ்சு நெஞ்சங்களை ஆக்கிரமித்துவிடுகின் றன.

ஒரு ஆபாச கலாச்சாரம் அனல் போல் பரவுகின்றது.

அமெரிக்காவிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சிகள் தாம் இளைஞர்களை அதிகமாகப் பாதிக்கின்றது என்கின்றனர் பிரான்ஸ் நாட்டு ஆராய்ச்சிளார்கள். இதனால் அமெரிக்காவின் தொலை காட்சிகளும் அவற்றின் மூலம் பரவும் காட்சிகளையும் காட்டுமிராண்டித்தனமானது 'Uncivilization' அநாகரிகம் என்கின்றனர்.

இவற்றிற்கு என்னதான் தீர்வு! சமூகவியலாளர் ஷக்கீல் செய்யத் அவர்கள் பின்வரும் ஆலோசனைகளை வழங்குகின்றார்கள்.

குழந்தைகளின் மனநிலையை வளர்ப்பதில் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கும் பங்கை அவர்கள் எந்த நிலையிலும் விட்டுக் கொடுத்துவிடக் கூடாது.

குழந்தைகளின் தொலைக்காட்சியைப் பார்க்கும் நேரத்தை கண்டிப்பாகக் குறைக்க வேண்டும். முற்றாக தொலைக்காட்சியைப் பார்ப்பதைத் தடுப்பது இயலாது, தேவையுமில்லை. ஆனால் (Overviewing) அதிகமாகப் பார்ப்பதைத் தடுத்தேயாக வேண்டும்.

திருக்குர்ஆன் பாடங்கள், நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய பாடங்கள் அதிகமாகப் புகட்டப்பட வேண்டும். இஸ்லாமிய வரலாற்றிலிருந்து கிடைக்கும் பாடங்களையும் மாணவர்களுக்குப் புகட்டிட வேண்டும். அவற்றில் விறுவிறுப்பும் ஆழிய ஞானமும் கிடைக்கும்.

தொலைக்காட்சிக்குப் பதிலாக வீட்டுக்கு உள்ளேயும் வீட்டுக்கு வெளியேயும்

விளையாட்டுக்கள், சுற்றிப்பார்ப்பது, குடும்பத்தோடு வெளியே செல்லுதல் (Outing) போன்றவற்றை அறிமுகப்படுத்தலாம். விளையாட்டுக்களை ஊக்குவிக்கலாம். இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம் தொலைக்காட்சியை தேவையான நேரத்திற்குப் பயன்படும் கருவியாக ஆக்கிட வேண்டும்.

குழந்தைகளோடு பேசுவது மிகவும் பயன்பயப்பதாகும். அவர்களிடம் பேசுவதை விடுத்து அவர்களோடு பேசிட வேண்டும். அதாவது அவர்களோடு அவர்களாக நாம் பழகிட வேண்டும், பேசிடவேண்டும்.

அவர்களுடைய எண்ணங்கள் சிந்தனைகள் இவற்றில் நாம் பங்கெடுத்திட வேண்டும். அவர்களின் எண்ணங்களையும் சிந்தனை களையும் பகிர்ந்து கொள்ளவும் வேண்டும்.

அறிவார்ந்த கண்டுபிடிப்புகள் வளமும் வனப்பும் மிகுந்த ஆக்கப்பூர்வமான சிந்தனைகள், எண்ணங்கள் இவை ஆயிரம் மணி நேரம் தொலைக் காட்சிகளைப் பார்ப்பதைவிட உற்சாகம் தருபவை, உன்னதமானவை. இதை அவர்கள் மனதில் வேரூன்றிடச் செய்திட வேண்டும்.

வளரும் குழந்தைகளின் நலனில் உண்மை யிலேயே அக்கறையுள்ள பெற்றோர்கள் பின்

## அன்பகம் தா:வா மத்ரஸாவில் பயின்ற மாணவருக்கு நிக்காஹ்..!



கடந்த 16.07.2023 அன்று அன்பகம் மாணவருக்கு பந்தநல்லூரில் திருமணம் நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ்..! இந்த திருமணத்தில் அன்பகம் நிர்வாகிகள் மற்றும் தாருஸ் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் துணைச் செயலாளர், அப்துல் ரவூஃப் போன்றோர் கலந்து கொண்டனர்.

- நமது நிருபர்




# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## ஆயுத குவியல்கள் வெடிபொருட்களை பற்றிய விசாரணை (2006 அவுரங்கபாத்)

**2-காவல்துறையின் நடவடிக்கை: தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகளால் விரட்டி பிடித்து வழி மறிக்கப்பட்ட டாட்டா சுமோ வாகனம்**

ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடி பொருட்கள் ஆகியவை பெருமளவில் கடத்தப்படுவதாக 8 மே 2006 அன்று மும்பை தீவிரவாத எதிர்ப்புப் படையின் DCP ஜெய்ஜீத் சிங்கிற்கு ஒரு ரகசிய தகவல் கிடைக்கிறது. இத்தகவலில் குறிப்பான விபரங்கள் எதுவும் இல்லை. அதாவது தேதி, நேரம், சாலையின் பெயர் மாவட்டத்தின் பெயர். வண்டியின் பெயர் என்ற எந்த விபரமும் இல்லை. எனினும் அவர் இத்தகவலை தீவிரவாத எதிர்ப்பு படையின் கிசிறி செங்காலிடம் பகிர்ந்து இதுபற்றி கண்டறிய கேட்டுக்கொண்டுள்ளார்.

8. மே 2006 அன்று மாலையிலேயே இரண்டு அணிகளை உருவாக்கினார் ACP செங்கால். ஒரு அணிக்கு அவரே தலைமை தாங்கினார். மற்றொரு அணிக்கு இன்ஸ்பெக்டர் தற்றே தலைமை தாங்கினார். செங்காவிற்கு உதவியாக இன்ஸ்பெக்டர் தேஷ்முக் சேர்த்துக் கொள்ளப் பட்டார். செங்கால் அணி இயோல (மகாராஷ்டிரா) சந்திப்புக்கு சென்றது. மன்மத்-அவுரங்காபாத் சாலையில் வாகனங்களை சோதனையிட ஆரம்பித்தது. தஜ்நே அணி நிபாத் சந்திப்புக்கு சென்று வாகனங்களை சோதனை இட்டது. 9 மே 2006 மாலை 4 மணி அளவில் MH-14-x-4380 என்ற நம்பர் உடைய டாட்டா சுமோ வாகனம் மன்மத் பகுதியில் இருந்து வருவதை கண்டது செங்கால் அணி. நிறுத்துவதற்கு சைகை காட்டியும் நிறுத்தாமல் அந்த வாகனம் சென்றது.

எனவே அவ்வாகனத்தை செங்கால் அணி தங்களுடைய பொலிரோ வாகனத்தில் பின் தொடர்ந்து சென்றது. 70-80 கிலோ மீட்டர் பின்தொடர்ந்து சென்றபிறகு 5.35 மணிக்கு டாட்டா கமோ வாகனத்தை முந்தி சென்று வெரும் அவுரங்காபாத் சாலையில் உள்ள குரு நேஸ்வர் கோவிலின் அருகே மடக்கிப் பிடித்தது செங்கால் அணி. காரில் இருந்த முகமது அமீர் பிடி பட்டான். டிரைவர் உட்பட மற்ற இருவர் தப்பியோடினர், இவர்களின் பெயர்கள் செய்யது ஜுபைர், அப்துல் அசிம் என தெரியவந்தது.

பிரவுன் கலர் பத்து அட்டைப் பெட்டிகள் அந்த வாகனத்தில் இருந்தன. அதில் 10 AK47 துப்பாக்கிகள், 40 இதழ்கள், 200 தோட்டாக்கள், கருப்பு நிற 3கிலோ எடையுடைய வெடி பொருட் களும் இருந்தன. வாகனத்தையும் கடத்தல் பொருட்களையும் குல்தாபாத் காவல்

நிலையத்திற்கு எடுத்துச் சென்ற தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தனர். மொத்த அத்தியாயத்திலும் இதுதான் முக்கியமான பகுதி. ஆனால் இதில் எவ்வளவு ஓட்டைகள் உள்ளன என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

1)தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல்கள் முற்றிலும் தெளிவில்லா தவை. இத்தகவலை வைத்து தேடுவது என்பது வைக்கோல் போரில் குண்டூசியை தேடுவதற்கு சமம். மகாராஷ்டிராவின் மற்ற பகுதிகளை தீவிரவாதிகளுக்கு திறந்து விட்டுவிட்டு பின் எப்படி நாசிக்-ஐ நோக்கி தீவிரவாத எதிர்ப்பு படையின் இரு அணிகளும் சென்றன. எந்த அடிப் படையில் மன்மத்-அவுரங்காபாத் சாலை, திபாத் சந்திப்பில் சோதனை மேற் கொண்டனர்.

2)விசாரணையின்போது தெரிய வந்த உண்மை என்ன வென்றால் பொலிரோ வாகனத்தில் சென்ற எந்த ஒரு தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகளும் கான்ஸ்டபிளும் சீருடையில் இல்லை. மேலும் காவல்துறையின் லோகோவோ (logo) ஏன் "காவல்" என்ற எழுத்தோ வாகனத்தில் இல்லை. தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகள் சாதாரண உடையில் நின்று கொண்டு வாகனத்தை நிறுத்தினால் எப்படி நெடுஞ்சாலையில் செல்லும் தனியார் வாகனங்கள் நிற்கும்?

3) டாட்டா சுமோ வாகனத்தைப் போன்று பல வாகனங்கள் நிற்காமல் வேகமாக கடந்து சென்றுள்ளன. ஏன் அந்த வாகனங்களை பின் தொடரவில்லை. டாட்டா சுமோ மட்டும் ஏன் பின் தொடரப்பட்டது?.

மேலும், இந்த வழக்கோடு தொடர்புடைய தீவிரவாத எதிர்ப்புப் படையின் ஒரு முக்கிய அதிகாரி, சம்பவத்தை நேரில் பார்த்த ஒரே ஒரு நேரடி சாட்சியம் (இவரின் அடையாளம் வெளிப்படுத்தப்படவில்லை) இவர்களின் நம்பகத்தன்மையில் சந்தேகம் இருந்தும் கூட விசாரணை தரப்பு அவற்றை கண்டு கொள்ள வில்லை. காவல் துறையின் கூற்றில் உள்ள முரண்பாடு களை கீழே விவாதிக்கலாம். அதன் மூலம் அதில் உள்ள பொய் களை அம்பலப் படுத்தலாம்.

1) 2006 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் 9 முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்தது செங்கால் அணி. பின்னர் இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு இந்து தீவிரவாத குழுமத்தை சேர்ந்த இளைஞர்களின் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தது தேசிய புலனாய்வு முகமை இதை மேற்கோள் காட்டி கிசிறி செங்கால் அணியின் மதச்சார்பற்ற தன்மையின் மீது பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. 2006 மும்பை ரயில்நிலைய குண்டு வெடிப்பு வழக்கு (7/11 வழக்கு) விசாரணையிலும் இவர் ஈடுபட்டிருந்தார். எப்படி இந்த மொத்த வழக்கும் பொய்யானது, ஜோடிக்கப்பட்டது என்பதை அத்தியாயம் 5 இல் விவாதித்து உள்ளோம்.

2)குறுக்கு விசாரணையின் போது கிசிறி செங்காலால் வாகனம் இடை மறிக்கப்பட்ட இடமான குருநேசுவர் கோயிலின் இருப்பிடத்தை கூற இயலவில்லை. நெடுஞ் சாலையில் அவர்கள் வலது பக்கம் திரும்பினார்களா அல்லது இடது பக்கம் திரும்பி னார்களா என்ற எளிமையான கேள்விக்கு கூட இவரும் போவின் இன்ஸ்பெக்டர் தேஷ்முக்கும் மாறுபட்ட பதில்களை தந்தனர்.

3)சுமோ வாகனத்தை பின் தொடர்ந்து கொண்டிருக்கும் போது அதைக்குறித்து தன்னுடைய உயரதிகாரிகளிடம் தெரிவித் தேன் என்று கிசிறி செங்கால் கூறினார். ஆனால் யாரிடம் இத்தகவலை தெரிவித்தேன், அவர்களை எப்படி தொடர்பு கொண்டேன் என்பதை அவர் விளக்கவில்லை.

4)வாகனம் இடை மறிக்கப்பட்ட குரு நேசுவர் கோவிலின் வண்டிகளை நிறுத்துமிடத்தில் 10-12 கடைகள் இருந்தன. ஆனாலும் கடை வைத்திருந்தவர்களில் ஒருவர்கூட சாட்சியமாக விசாரணை செய்யப்படவில்லை.

5)ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட குற்றப் பத்திரிகையில் தனிப்பட்ட சாட்சியமாக இருந்த ஒரே ஒரு நபரின் வாக்கு மூலத்தை சேர்க்க வில்லை. அவருடைய வாக்குமூலத்தை சேர்க்க வேண்டும் என்று பின்னரே முடிவு செய்யப் பட்டு இணைக்கப் பட்டதாக தெரிகிறது. சம்பவம் நடந்த இரண்டரை மாதங்களுக்குப் பின் அவருடைய துணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு குற்றப் பத்திரிகையில் 15 டிசம்பர் 2006 இல் இணைக் கப்பட்டது.

6)இந்த தனிப்பட்ட சாட்சியம் அளித்த வாக்குமூலமும் காவல் துறை அதிகாரிகள் அளித்த வாக்கு மூலமும் பின்வரும் முக்கியமான தகவல்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்டன. உதாரணமாக, சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்ட குற்றவாளி அணிந்திருந்த

உடையின் நிறம், சுமோ வாகனத்தில் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்த இடம், வெருல் (Verul) மலைப் பகுதியில் குற்றவாளியை தேடி காவல் துறையுடன் இவர் சேர்ந்து சென்றாரா இல்லையா. பொலிரோ வாகனத்தில் இருந்தவர் இவரிடம் சுமோ வாகனத்தில் இருந்தவர்கள் தீவிரவாதிகள் என்று கூறினாரா இல்லையா?. ஆனால் நீதிமன்றம் இவற்றையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. மாறாக காவல்துறை வாக்குமூலத்தை தவறாக பதிவு செய்துவிட்டது என்று கூறியது.

7) நடந்த சம்பவம் நினைவில் இல்லை என்று கூறி குறுக்கு விசாரணையின் போது கேட்கப் பட்ட அநேக கேள்விகளுக்கு பதில் தர மறுத்து விட்டார் இந்த நட்சத்திர சாட்சியம். எனினும் அவர் அளித்த சாட்சியத்தை இவ்வாறு கூறி நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது "மிக நீண்ட இடைவேளைக்கு பின் ஞாபக மறதி ஏற்படுவதை காரணம் காட்டி அவர் அளித்த

**இன்ஷா அல்லாஹ் தொடரும்..**




# மதுரை கலைஞர் நூலகத்தில் இஸ்லாமிய வெறுப்பு

மதுரையில் 120 கோடியில் பிரமாண்டமாக கட்டப்பட்ட கலைஞர் நூலகத்தில் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

நுழைவு வாயிலிலேயே மதுரையின் வரலாறு குறித்து கலை அரங்கம் இருக்கிறது. அந்த அரங்கத்தில் மதுரையின் வரலாறு குறித்து இருக்கிறது.

பாண்டியர்கள் ஆட்சி, சோழர்கள் ஆட்சி, சுல்தானியர்கள் ஆட்சி, விஜயநகர பேரரசு ஆட்சி, ஆங்கிலேயே ஆட்சி என வைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், அதில் சுல்தான்களின் ஆட்சி வரும் போது மட்டும், அலாவுதீன் கில்ஜி தளபதியான மாலிக்கபூர் கிபி 1311ல் மதுரைக்குள் நுழைந்து கொள்ளையடித்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது.

வரலாற்று ஆய்வாளர்களுக்கு பரிட்சியம், நிலத்திற்காக நடக்கும் போரில் சுல்தான்கள் என்று அல்ல, சோழர், பாண்டிய,சேர ர்கள் என அனைவரும் கொள்ளையடித்தவர்கள் தாம். ஆனால், முஸ்லிம் சமூகத்தின் மீது வைக்கப்படும் இந்துத்துவ மன நிலையிலேயே "கொள்ளையடித்தார்கள்" என்ற வார்த்தை சுல்தான்களுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது வகுப்புவாத சிந்தனையை காட்டுகிறது.

தமிழக அரசு இதற்கான நடவடிக்கையை எடுத்து, இந்த வார்த்தைகளை நீக்க வேண்டும். மக்களை பிளவுப்படுத்தும் அரசியலுக்கு திராவிட அரசு உடன்படக் கூடாது.

(ஆதாரம் : உண்மையில் மாலிக் கபூர் கொள்ளையடித்தார் என்பதற்கு எந்த கல்வெட்டு ஆதாரங்களும் இல்லை என்று வந்த 24.09.2020 Times of India)

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002